பிசுமில்லாகி.

இப்புத்தகத்துள்

# புலூக்கியாவுடைய

## கிஸ்ஸாவும்,

## யூனூசுநபியுடைய கிஸ்ஸாவும்

அடங்கியிருக்கின்றன.

இதனை-முன்னோர்களால்

நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடைய

பிரபலத்தைஎல்லோர்க்கும் விளங்கும்பொருட்டு

நாகரீகமான அறபுப்பாஷையானதைத்

தமிழ்ப்பாஷையால்மொழிபெயர்த்து

வழங்கும் பல்பிரதிகளினல்

யாழ்ப்பாணம்,பக்கீர்முகியிததீன் - அவர்களால்

பரிசோதித்த பிரதிகிணங்கச்

சிந்தாத்திரிப்பேட்டை

## நாராயணசாமிமுதலியா ரவர்களால்

தமது

## பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

௲அ௱௫௰௨-௵ மே௴.

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இ ஃ து.

# புஹூக்கியாவுடையகிஸ்ஸா.

அல்கம்துலில்லாகி றப்பில் ஆலமீன் ஒல்ஆக்கிபத்துலில்முத்தகீன்
வச்சலாத்து வச்சலாமு அலாறசூலிகி செய்யிதிறு முகம்மதின் வ
ஆலிகி வசகுபிகி அஜிமயீன்.

அல்லாகு சுபுகானகுஒத்த ஆலாவுடைய திருத்தூதாங்காகிய மே
ம்பாடான முசுலீம்களுக்கெல்லாம் நாயகப்பொருளாகிய நம்மு
டைய ஆண்டவர் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்பேரில்கா
தல்கொண்டுமேலாம்பாகிய வரிசையைப்பெற்ற பனீஇசுறயீல் கூ
ட்டத்திலுள்ள புஹூக்கியா வென்பவர் ஆண்டவரவர்களைக் காணப்
புறப்பட்ட கதிதாயிருக்கும்.

அல்லாகு சுபுகானகு ஒத்த ஆலாதிருவுளமானன் என்னுடைய வ
ரிசைப்பாடுதங்கிய முகம்மதேநான் உம்முடைய உம்மத்துபேரில்
அவர்கள் உம்மை உண்மையாக்கி வைக்கிறது கொண்டும் அவர்கள்
பொய்யாக்கிவைக்கிறது கொண்டும் அவர்களுடைய ஈடேற்றத்தை
க் கொண்டும் அவர்களுடைய வழிகேட்டைக் கொண்டும், சாட்சி
சொல்லுகிறவராகவும், நும்மையுண்மையாக்கி வைத்தவர்களுக்குச்
சொர்க்கத்தைக் கொண்டு நல்மாராயஞ் சொல்லுகிறவராகவும் - நு
ம்மைப் பொய்யாக்கிவைத்தவர்களுக்கு நரகத்தைக்கொண்டு அச்ச
ம்பூட்டி யறிவிக்கிறவராகவும், அல்லாகு சுபுகானகு ஒத்த ஆலா அ
ளவில் அவனை ஒன்றுபடுத்தி வைக்கிறத் தளவிலும் எனக்கு வழிப்ப
டுகிறத் தளவிலும் என்னுடைய யேவலைக்கொண்டு அழைக்கிறவ
ராகவும், நும்மைப்பின்றொடர்ந்தவர்களுக்கு ஒளிவாகிய தீபமாகவு
ம், அனுப்பிவைத்தோம், நும்மைக்கொண்டுநேர்வழி பெறப்படும்
யாதொருதீபத்தை யிருளைவெளிச்சமாக்கத் தேடப்படுமென்னைத்
தக்க தீபத்தைப்போல்கித்தாபுக்காரர்சொல்லுகிறார்கள் றசூல்சல்ல
ல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய வரிசைகளாகிறது - அதைமட்
டிடப்படுகிறதைக்காண ரொம்பவுமிகுதமாக விருக்குமென்கிறத்தை
யுமவர்களுடையமவுத்துக்குப்பிறகு அவர்களுக்கு மரியாதை செய்
கிறது மவர்களை வுயப்பமாக்கி வைக்கிறது வாஜிபாக இருக்கு
மென்று அவர்கள் கயாத்தாக விருக்கும்போது மரியாதை செ
ய்கிறது வாஜிபாக விருந்ததுபோல அஃதாவது அவர்களைப் பேசி

வருகிற இடத்திலு மவர்களுடைய கதீதைப் பேசிவருகிற இடத்தி
லு மவர்களுடைய திருநாமத்தைக் கேட்கு மிடந்தோறு மாக
இருக்கும். அல்லாசுபுகானகு ஒத்த ஆலாவை யறிகிறதாவது-நபிச
ல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை அறிந்ததைக் கொண்டு தொழுகு
தல்பெற்றதாகவிருக்கும்அஃது அப்படியிருப்பதால் நபிசல்லல்லா
குஅலைகிவசல்லமவர்களை அறிகிறதுவாஜிபாகவிருக்கும் ஏனெனில்
அவர்களாகிறது கல்க்குகளுக்கெல்லாம் முந்தினவர்களாகவும்நபியா
கஅனுப்பப்பட்ட லக்ஷத்திரு பத்துநாலாயிரருக்கும் பிந்தினவர்க
ளாகவும் வந்தீர்களே அதற்காகவேண்டி அவர்கள் மேன்மைதங்கிய
புகழை சலாமுடையமகனார் அப்துல்லாவென்கிறவர் பேசிவந்தார்
பனியிசுருயீல் கூட்டத்தில் ஒருவரிருந்தார் அவர்பேராகிறதுபுலூ
க்கியாவென்று சொல்வார்கள்.

அவராகிறவர் பனியிசுருயீல்களுக்கெல்லாம் ஆலிமாகவிருந்தார்
அவர் தாவூது நபியுடைய மகனார் சுலையுமானபிக்குப் பிறகு சபூர்
வேதமவருக்குப்பாடமாகவிருந்தது, அவருக்குக்கசானுக்கள் மிகுதி
யுண்டு அவருடைய தகப்பனார்மவுத்தானதின் பிறகு அவருக்கா
லித்தனமும் இமாம்தனமும் உண்டாயிருந்தது அந்தஉளமொல்லாம
வருக்குக் கைவசமாயிற்று,அப்படியிருக்கிறகாலத்திலே ஒருநாள்தக
ப்பனாருடையகசானுக்களைத்திறந்துபார்த்தார் - அப்போது அந்தக்
கசானுவிலே அளவற்றதிரவியங்களிருக்கக்கண்டார் முன்னுள்ளவர்
களுடைய கித்தாபுகளுமிருந்தது - அப்படியிருக்க கித்தாபுகளிரு
க்கின்ற பெட்டிகளில் ஒருபெட்டியைத்திறந்து பார்க்கும்போதுஅ
திற்பொன்னுலேயொரு பெட்டகமிருந்தது அப்பெட்டிக்கு இரு
ம்பினுல் பூட்டிட்டிருந்தது அப்போதுபுலூக்கியா அதைக்கண்டு அ
ப்பெட்டிக்காவலாளரை அப்பெட்டகத்தி லென்னவிருக்கின்றதென
க்கேட்டார் அவர்கள் நாங்களறியோமென்றுசொன்னார்கள் அந்தப்
பெட்டகத்தை புலூக்கியா- திறந்துபார்க்கும்போது அதில் மாத்தி
ரல்ஒருபெட்டகமிருந்தது அதைத்திறந்து பார்க்கும்போது அத
னுள்பொன்னுலே ஒருதகடிருந்தது அந்தத்தகட்டுக்குகுங்குமங் கஸ்
தூரி அம்பர்கற்பூரமிதுகளினுல் முத்திரையிடப்பட்டிருந்தன.

அம்முத்திரையை நீக்கி பார்க்கும்போது பொன்தகட்டிலெழு
தியிருந்ததை வாசித்துப்பார்த்தார் அதிலெழுதப்பட்டிருந்தது அல்
லாகுத்தஆலா திருவுளமானது என் குதுறத்தான ஒளிவில்நின்று எ
ன்னுடைய கபீபான வரிசைதங்கியமுகம்மது நபிசல்லல்லாகு அ
லைகிவசல்லமைப்படைத்தேன் அந்தஒளியை என்னுடையறகுமத்தெ
ன்னுங்கடலிற் தங்கரியமாக்கிவைத்தேன் அதிலெழுபதினாயிரம் வரு
ஷமிருந்த பிறகு தன்மையென்கிறகடலி லெழுபதினாயிரம் வருஷ

ம்-தங்கரியமாக்கிவைத்தேன் - இன்னும் நற்குணமென்கிறகடலிலே எழுபதினாயிரம்வருஷம்நிறுத்திவைத்தேன் - பின்பு தெண்டிப்பென்னுங் கடலிலெழுபதினாயிரம்வருஷம்நிறுத்திவைத்தேன் பின்பு நெறியென்னுங் கடலில் எழுபதினாயிரம் வருஷம் நிலையாக்கிவைத்தேன் பின்பு வணக்கமென்னுங்கடலிலெழுபதினாயிரம்வருஷம் நிறுத்திவைத்தேன்பின்னும்கிருபையென்னுங்கடலி லெழுபதினாயிரம்வருஷம்நிறுத்திவைத்தேன் - பின்புஇபாத்தென்றுங்கடலில்எழுபதினாயிரம்வருஷம் நிறுத்திவைத்தேன் - அந்தந்தக்கடல்தோறும்எழுபதினாயிர மெழுபதினாயிரவருஷம்நிறுத்திவைத்ததின்பின்னர் முகம்மது நபிசல்லல்லாகுஅலைகிவசல்லமுடையஒளிவுதெளிவுவைத்தாகத்திரத்தக்கதாக ஒளிவைக்கொடுத்தது பின்னர்அல்லாகுத்தஆலாதிருவுளமானான் என்னுடையஒளிவில்நின்றும்படைத்தேன் நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடையதலையைவணக்கத்தில் நின்றும்படைத்தேன் நபிசல்லல்லாகுஅலைகிவசல்லமவர்களுடைய இரண்டுகண்ணமும்தாழ்ச்சியில்நின்றும்படைத்தேன் அவர்களுடையஇரண்டுகண்ணையும் கயாவிப்பில் நின்றும்படைத்தேன் அவர்களுடைய முகத்தை நிண்ணயத்தில்நின்றும்படைத்தேன், அவர்களுடைய ரோமமானதைத் தெண்டிப்பில்நின்றும் படைத்தேன்.

அவர்களுடையமூக்கை வியாரத்தில்நின்றும் படைத்தேன் அவர்களுடையநாவை மெய்யில்நின்றும்படைத்தேன்- அவர்களுடையஇரண்டுகாதையுப்ஹக்கைக்கேட்கிறதில்நின்றும்படைத்தேன் - அவர்களுடையகையைக்கொடையில்நின்றும்படைத்தேன் அவர்களுடைய வயிற்றைகலப்பறுதியில்நின்றும்படைத்தேன் - அவர்களுடையநெஞ்சைப் பொருத்தத்தில்நின்றும் படைத்தேன் -: அவர்களுடையகல்பை இனயத்துச்செய்கிறதில் நின்றும்படைத்தேன் - அவர்களுடையமுதுகைஆதரவில்நின்றும்படைத்தேன் - அவர்களுடையநாபியைப்புத்தியில்நின்றும்படைத்தேன் அவர்களுடையதுடையை முகப்பத்தியில்நின்றும்படைத்தேன் அவர்களுடையகாலிரண்டையுப்ஹக்களவில்நிற்கிறதுகொண்டும்படைத்தேன் - இன்னும்அவர்களுக்குப்பலபலதிருநாமங்களைக்கொடுத்தேன் -அஃதாவது-சுவர்க்கத்தில் நபிசல்லல்லாகுஅலைகிவசல்லமவர்களுடையதிருநாமத்தைச் சொல்வார்கள்அப்துல்கரீம்என்றும் மலாயிக்கத்துகளானவர்களிடத்தில்அப்துல்றகீமென்றும்மனிதரிடத்தில் அப்துல்வஹாபு என்றும் சைத்தான்களானது அப்துல்கஃகாரென்றும் ஜின்களானது அப்துற்றகுமானென்றும்பாம்புகளானது அப்துல்காலிக்குஎன்றும் தேட்களானதுஅப்துல்சாதிறென்றும் கடல்களிடத்தில் அப்துல்முஹைமினென்றுங்காயில் அப்துல்குத்தாசென்றும் ஊர்வனமானதுஅப்துல் முத்

தென்றும் மிருகங்களானது அப்துற்றஸ்ஸாக்கென்றும் நாற்கால்மி
ருகங்கள் அப்துல்மூமினீனென்றும் பறப்பனவானது அப்துல்கப்
பாறென்றும்தவுறாத்துவேதத்தில் தாயதாவென்றும் சபூர்வேதத்தி
ல் பாறக்கலீத்தென்றும் இஞ்ஜீல்வேதத்தில் மயிதமயிதவென்றும்
வானத்தில் அகுமதுஎன்றும், பூமியில் முகம்மது என்றும், தகுத்த
ரு மண்ணின்கீழ் மதுமூது என்றும்; நகரத்தில் நறுதாகியென்றும்
முறுசலான நபிமார்களுக்கெல்லாம் சூரியனைப்போலுதித்தவர் வ
டிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் விளக்குபோ லிருளை நீக்கிறவர்
தெரியப்பட்டவர்களுக்கெல்லாம் தாய்தானவர் அல்லாகுத்தஆலாப
டைத்த படைப்புகளுக்கெல்லாம் முன்னேபடையுண்ணப்பட்டவ
ர் துனியாவில் ஆகிறுநபியானவர் அவர் உம்மத்துகளுக்கெல்லாம்
ஷபா அத்துச்செய்துமேலாம்பாகியநல்வழியிலாக்கிறவர் இதுவெ
ல்லாம் நபியுல்லாவுடையவரிசையாயிருக்கும்இன்னும் ஆண்டவன்
திருவுளமானான் மற்றுமுண்டானவஸ்துகளெல்லாம் நபிசல்லல்லா
கு அலைகிவசல்லமைப் படையாதிருக்கில் - சுவர்க்கம்-நாகம்-அறுசு-
குறுசு-லெளகு-கலம்- வானம்-பூமி - முகற்றபானமலக்குகள் முறுச
லான நபிமார்கள் - சந்திரன்-சூரியன் இவைகளையாதொன்றையும்ப
டைக்கேனென்றுதிருவுளமானான், பின்புமலக்குகளை அழைத்துநீங்க
ள் அறுசுடையவாசலில்எழுதுங்களென்றுஉத்திரவுகொடுத்தான் அப்
போது மலக்குகள் நாயனே நாங்களென்னத்தை யெழுதவென்று
கேட்டார்கள் நீங்களெழுதுங்கள் லாயிலாக இல்லல்லாகு முகம்ம
துற்ற சூலுல்லாகியென்றுசொன்னான் - வேறில்லை நாயன் அல்லா ஒ
ழிய முகம்மதாகிறவர் அல்லாவுடையதூதர் அவருடையஉம்மத்து
கள் செய்தபாவங்களெல்லா மிந்தக்கலிமாவைக்கொண்டே பொறு
ப்பேனென்று திருவுளமானான் பிறகு அறுசுடையவாசலில் இந்தக்
கலிமாவையெழுதினார்கள் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய
பறக்கத்துக்கொண்டுதண்ணீர்மேலே அறுசுதரிபட்டுநின்றது - இன்
னம் அல்லாகுத்தஆலாதிருவுள்மானான் - முகம்மதுநபியுடையஒளி
விற்பாதியானது - அறுசுடைய ஒளிவானது, பெருமைதங்கியகுறுசு
டையஒளிவாகிறதுநபியுடைய ஒளியில் நான்கிலொருபங்காகவிருக்
கும்லெளகுடையஒளிவாகிறது நபியுடையஒளியில்ஐந்திலொருபங்
காகவிருக்கும் கலமுடையஒளிவாகிறது நபியுடைய ஒளியில்ஆறி
லொருபங்காக விருக்கும்சுவற்கத்தினுடைய ஒளிவாகிறதுநபியுடை
யஒளியில் ஏழிலொரு பங்காகவிருக்கும் நபியுடைய ஒளிவாகிறது
என்றனுடையஒளியில் நின்றும் உண்டானதாகவிருக்கும் நபிசல்லல்
லாகுஅலைகிவசல்லமுடைய ஒளியின்பேரில்மிகுதி சலவாத்துச்சொ
ல்லுங்கள் அவராகிறவ ரென்னிடத்தில் பிரியமுடைகுதலானவர்

மிகுதியும் உவக்கப்பட்டவர் உண்மையாக முகப்ப தாகிறவர் அ
ருசுமேலே யிருந்து என்னுடன் பேசுவார் அவருக்கும் எனக்கும்
இடையிலுள்ள தூரம் எம்மாத்திர மானால் மனிதருடைய இரண்டு
புருவத்துக்கும் இடையிலுள்ள தூரம் எந்த மட்டுண்டோ அந்த
மட்டு முடிகிப் பேசுவார் - உண்மையாக அவருடைய ஹாசத்தை
யெல்லாம் நிறை வேற்றுவேன் என்னுடைய வரிசையான நபிச
ல்லல்லாகு அலைகிவசல்லமாகிறவர் மிகுதியும் கயாவிப்பு உள்ளவர்
நெஞ்சு விஸ்தீன மானவர் மிகுதி சபூருடையவர் மிகுதி ஆதரவு
ள்ளவர் எந்நேரமும் நாயனுக்கஞ்சி அழுகிறவர் நாயனை எந்நே
ரமுந் கல்பில் நினைக்கிறவர் வானத்தில் அச்சந் தீர்ந்தவர் ரகசி
யங்களை மறைக்கிறவர் கொடைமிகுதி கொடுக்கிறவர் கிஞ்சித்து
ம் மனிதரை நோவிக்காதவர் - அமர்தியுள்ளவர் இரக்கமுள்ளவர்-
கிருபைசெய்கிறவர்- கியாமத்துநாளையில் உம்மத்துகளை ஷபாஅத்
துச்செய்கிறவர் - முகற்றபான மலக்குகளும் முறுசலான நபிமா
ர்களும் அவருடையவரிசைபோல எத்தமாட்டார்கள்-அவருக்குமட்
டில்லாத வரிசைகொடுத்தேனென்று அந்தப்பொன் உறக்கிலெழுதி
யிருக்கக்கண்டு அதைமுத்திரைநீங்கியனீயிசுறுயீல் கூட்டத்தாருக்கு
ம்வாசித்துக்காண்பிவித்தார்- புலூக்கியாவே நீராகிறவர் எங்களுக்கெ
ல்லாம் இமாமானவர் ஆலீமானவர் முன்னாலேயிருந்தவர் உங்கள் தக
ப்பனும்பெரிய ஆலீமாகயிருந்தாரே அவர் இப்பேர்க்கொத்தகார
ணமாரிக்கத்தையெங்களுக்குஅறிவிக்காமல் எதுக்காகமறைத்தார் அ
தற்காகவேண்டிநாங்கள் அவரையடக்கஞ்செய்த கபுறைத்தோண்டி
அவரைவெளியேயெடுத்துநெருப்பைக்கொண்டு சுடுவோமென்றார்
கள் அப்போதுபுலூக்கியாசொல்லுவார் கவும்களேநீங்கள் துயரப்ப
டவேண்டாம்உண்மையாகஅவராகிறவர் தீனுக்குந்துனியாவுக்கும் த
வாபையிழந்தவரென்றுசொல்லுங்களென்றார் நபிசல்லல்லாகு அலை
கிவசல்லமுடைய வன்னிப்பை மறந்திருந்தாரோதெரியாது இன்னும்
புலூக்கியா நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய வன்னிப்பைகண்
டபோது இடைவிடாமல் நபிபேரில்செள்காய் அவரைநினைப்பார்
அவருடையகல்பிலே ஆசைமிகுதியாகிப் பின்புசொல்லுவார் எனக்
குவேண்டுமாயிருக்கும் நான் கயாத்தாகவிருக்கும் காலமெல்லாம்
அவரை என்னிரண்டு கண்ணாற் காணவேண்டுமென்றுசொல்லி ஆசை
யானார்-அதுமுதல்ஒஜீபனம்புசிக்காமல் ஜலபானமில்லாமலும் நித்
திரையில்லாமலும் நபிபேரிலுவப்பாயிருந்தார் - இப்படியெல்லா
ம்ஆசைமிகுந்து ஆநந்தக்கடலில்மூழ்கினார்- பின்பு தாயார்வீட்டை
நாடிப்புறப்பட்டுத்தாயாரிடத்தில்வந்து சலாம்சொன்னார்- பின்பு
தாயார்அவர்மொழிக்கு மறுஜவாபு சொல்லிமகனே எதிற்காகவந்தீ

றொன்றுகேட்டார்-அப்போது புலூக்கியாசொல்வார் என்தாயே நா
ன் நும்வளவில் வந்தகாரியம் புதுமையாக நவநீதமாக ஒருவிசளமறி
விக்கவந்தேனென்றார் - அப்போது தாயார்கேட்பார் என்மகனே-
அஃதென்னபுதுமையான விசளமெனக்கேட்டபோது புலூக்கியா
சொன்னார் இத்தாடுகளிருக்கிற பெட்டகத்தைத்திறந்தேன் அந்தப்
பெட்டகத்துக்குள்ளே சிலபொன் உறக்குக ளிருக்கக்கண்டேன் அந்
த உறக்குகளெல்லாம் நபிசுல்லல்லாகு அலைகிவசல்லமுடைய வன்னி
ப்புகளையும் அவருடைய திருநாமங்களையும் எழுதியிருந்தது என்தா
யே நான் அதைக் கண்டபோ தெனக்கு மிகவும் நாட்டமாக விருக்
குது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய பாதத்தளவிற் சென்று,
அவருக்கு கிதுமத்துச் செய்ய வேண்டுமென்றார் பின்புமவருடைய
தீனில் ஆகவேண்டு மவுத்தாகுமளவு மவருடைய பணிவிடையிலிரு
க்கவேண்டுமென்றார்- அப்போதுதாயார்சொன்னார் புலூக்கியாவே
நீர் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய பாதத்தளவில் கிதுமத்து
ச்செய்யப்போனால் எனக்கு நீரல்லாமல் மற்றவரியா ரிருக்கிறார்கள்
ஒருவருமில்லையேயெனக்கியார் கிதும்மத்துச்செய்வாரென்றபோது பி
ன்புபுலூக்கியாசொல்லுவார் எவ்விதமாயிருந்தாலும் அவர்க ளளவி
ல் நான்யாத்திரையாகவேண்டுமென்றுசொன்னார் பின்புதாயார் ந
ல்லதென்று உத்திரவு கொடுத்துச் சொல்லுவார் என் மகனே பு
லூக்கியாவே நீர் நபிசல்லல்லாகுஅலைகிவசல்லமைக்கண்டீரானால் அ
வருக்கு என்னுடைய சலாஞ்சொல்லி என்தாயார் நீர் நபியென்று
உண்மைகொண்டு உமக்கு ஈமான்கொண்டு உம்முடைய மார்க்கத்
தி லானாள் உம்முடைய ஷபாஅத்தை ஆதரவு வைத்து இருக்கிறா
ளென்று சொல்லுமென்றார் புலூக்கியாதாயாரிடத்திலிருந்து செல
வு பெற்றுக்கொண்டு புறப்பட்டு பனீயிசுறயீல் கூட்டத்தளவில் வ
ந்தார் அவர்களைப்பள்ளியிலிருக்கக்கண்டார்- அப்போது அவர்களு
க்கு சலாம்சொன்னார். அவர்களும் பிரத்திசொன்னார்கள் பின்பு அ
வர்க ளெல்லோருக்கும் கவும்களே உண்மையாக நானுகிறவன் நபிசல்
லல்லாகு அலைகிவசல்லமுடைய பாதத்தளவில் யாத்திரையாக விருக்
கிறேன் அவருடைய மார்க்கத்திற் படுதவும் கிதுமத்துச்செய்யவும்
நான்மவுத்தாகு மளவுமென்றார். பின்பு மவர்களெல்லோருஞ் சொ
ன்னார்கள் புலூக்கியாவேநீர் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய
பாதத்தளவிற் போனீராகி லெங்கள் தீனுடைய காரியத்தில்ஒருவஸ்
து முசிக்கிலானால் நாங்களதையாரைக்கேட்போமென்றார்கள், அத
ற்கு புலூக்கியாசொன்னார் எப்படியிருந்தபோதிலு மவர்களளவிற்
போகவெனக்கு வேண்டியதா யிருக்கிற தென்றார் பின்புமவர்களெ
ல்லோரும் உத்திரவுகொடுத்தார்கள் புலூக்கியாவேநீர்நபிசல்லல்லா

கு அலைகிவசல்லமைக் கண்டீராகில் அவர்களுக்கு எங்கள்சலாஞ்சொல்லும் உண்மையாக பனீயிசுறயீல்கள் நீர் நபியென்று உண்மைகொண்டு உம்முடையஷியாஅத்தைக் காதலித்திருக்கிறார்களென்று சொல்லுமென்றுஞ்சொன்னார்கள் புலூக்கியாஅவர்களைவிட்டுப் புறப்பட்டுதம்முடைய வீட்டுக்குப்போய் வீட்டிலிருந்தபண்டங்கள்முதலான தோப்புகள்-ஆடு-மாடு-ஒட்டகமிவைகளெல்லாம் விற்பனைசெய்து தம்முடையபெண்சாதிக்குக் கொடுத்தார்பின்பு தம்முடையகாரியத்தையுஞ்சொல்லினார் அப்போது பெண்சாதிசொன்னாள் என்னுயிர்க்குயிரானவரே நானெப்படியிருப்பேனென்று விசனத்தையடைந்து பின்பு சொல்லுவாள் நபிசல்லல்லாகுஅலைகிவசல்லமைச் சந்தித்தீரானால் அவர்களுக்கென்னுடைய சலாம்சொல்லிச் சொல்லும்உண்மையாக வென்குடும்பத்தார்உமக்கு ஈமான்கொண்டு உம்முடைய மார்க்கத்தில் அகப்பட்டவர்க ளாகவும் உம்முடையஷியாஅத்தைக் காதலித்திருக்கிறார்களென்று சொல்லும் பின்பு புலூக்கியா தம்முடையசவாதாவு மெடுத்துக்கொண்டுசாமுக்குப்போகிறவழியைநோக்கி நடந்தார்அவடத்தில் மனிதர் மிகுதி கூட்டங்களாக விருந்தார்கள் அவர்களிடத்தில் முடுகிச்சென்று அவர்களுக்குச் சலாம்சொன்னார் அவர்களும் பிரத்திசொன்னார்கள் பின்னும் சொன்னார்கள்-எங்களிடத்தில்வந்தமனிதனே நீர்யாரென்றுகேட்டார்கள்-பின்புபுலூக்கியாசொன்னார் - நானாகிறவன்பனீயிசுறயீல்கூட்டத்திலுள்ளவன் என்பேர்புலூக்கியாவென்றார் - அப்போது அவர்கள்சொன்னார்கள் புலூக்கியாவே பனீயிசுறயீல் கூட்டித்தைவிட்டுஎன்புறப்பட்டீரென்றார்கள் - அப்போதுபுலூக்கியாசொன்னார் நானாகிறவன் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய பாதத்தைக்காணப் புறப்பட்டே னென்றார் - பின்பு அவர்கள்சொன்னார்கள்புலூக்கியாவேமுகம்மதாகிறவர் ஆரென்றுகேட்டார்கள்அப்போது சொல்வார்முகம்மதாகிறவர் அல்லாகு . சுபுகானகு . ஒத்தஆலாவுடைய திருத்தூதரென்றும் அவருடைய வர்ணிப்பை இன்னதின்னதென்று சொன்னபின்பு நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய திட்டாந்தரங்கள் கேட்டபோது சொன்னார்கள் நாங்களனை வோரும் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுக்குஈமான்கொண்டோம் அவரைறசூலென்று அவர்மார்க்கத்திலானோமென்றும்புலூக்கியாவே நீர் சொல்லும்சாமிலுள்ளவர்கள் உம்முடையமார்க்கத்திலானார்களென்று சொல்லுமென்று சொன்னார்கள்.

பின்பு புலூக்கியா சாமுடைய எல்கைவிட்டுப்புறப்பட்டு அந்தந்தவிடங்கள்தோறும் புகுந்துகேட்டார்முகம்மதுநபியெங்கே அ-

வரிருக்குந்தலமெங்கே அவரெந்தவூர் என்று கேட்டார் முகம்ம
து நபியுடையபேரைக்கேட்டவர்களெல்லாம் சொல்லுவார்கள் நா
ங்களறிந்ததில்லை- அவரிருக்குமிடமுமெங்களுக்குத் தெரியாதென்று
சொல்வார்கள் -பின்புபுலூக்கியாசாமுடைய எல்கையைவிட்டுப் பு
றப்பட்டு மறுபல்கையென்னு மேரையும்விட்டு நீங்கித் தோப்புகள்
மலைகள்-காடு -வனம்-வனாந்தரங்களெல்லாம் துலைத்துஒருநிலமொத்
தபூமியிலேவந்துசேர்ந்தார் - அந்தபூமியில்சிலபாம்புகள்உண்டாயி
ருந்தது அந்தப்பாம்புடையபருமனுவது-மாலைப்போலவிருந்தது
அந்தப் பாப்புகளெல்லாம் லாயிலாகஇல்லல்லாகுமுகம்மதுற்றசூ
லுல்லாகியென்றுகலிமாவைச் சொல்லிக்கொண்டிருக்கக்கேட்டார்
பின்பு அந்தப்பாம்புகள் அவரைக்கண்டுஉடனேசொல்லியதுபடை
ப்பே நீர்யார்உம்முடைய பெயரென்னவென்றுகேட்க புலூக்கியா
சொன்னார்-நான்பனியிசுறாயீல் கூட்டத்திலுள்ளவன் என்பேர் பு
லூக்கியாவென்றுசொன்னார்-பின்புபுலூக்கியா கேட்டார் பாம்புக
ளேநீங்களிந்தத் தலத்திலேத்தனைகாலமாகவிருக்கிறீர்களென்று கே
ட்க அல்லாகுசுபுகானகு ஒத்தஆலாஎதற்காக உங்களைப் படைத்தா
னென்றுகேட்டபோது அந்தப்பாம்புகள்சொல்லத்தொடங்கினது
புலூக்கியாவே அல்லாகுசுபுகானகுஒத்தஆலா எங்களைப்படைத்து
ப்பாவியானஅடியார்களை அதாபுசெய்வதற்காகவேண்டிப் படைத்
தான்-அவர்களாகிறது தொழுகையைவிட்டபேர்கள்நற்சீர இச்சை
யைப்பின் சென்றவர்கள் சக்காத்துக்கொடாதவர்கள் கள்ளுக்குடிக்
கிறவர்கள் - தௌபாவை முறித்தபேர்களென்றுசொல்ல - பின்பு-பு
லூக்கியா-நீங்களெங்கேயுள்ளவர்களென்றுகேட்டார் - அந்தப்பாம்
புகள்சொல்லியது - நாங்கள்நரகத்திலுள்ளபாம்புகள்நாளைகியாம
த்தில்அல்லாவுடைய உத்தாரப்படிகாபிர்களை அதாபுசெய்வோமெ
ன்றபிறகுபுலூக்கியாகேட்டார் நீங்களிவடத்திலேயென்ன செய்கிறீ
ர்கள்முகம்மதுநபியையெப்படி அறிந்தீர்களென்று கேட்டபோது
அந்தப்பாம்புகள்சொல்லியது- உண்மையாகஒருவருடத்துக்கு இர
ண்டுதரம்நரகம்பொங்கும் அந்த நரகத்துடையவெப்புக்கடினத்தி
னாலே யிவடத்தில்வந்து கிடப்போம்அதுதானுக்கும் துனியாவிலே
கோடைகாலம் நரகம்பொங்கி அடங்கினால்நாங்கள்மீளவும் நரகத்
திற்போவோம் அதுதானுக்குந்துன்யாவிற்குளிர்காலமென்று சொ
ல்லியது நரகத் தட்டுகளி லெல்லாத்தட்டிலும் நரகத்துவாசலில்நி
ன்றுமெல்லாவாசலும்நரகத்தின்றிசைகளில்நின்றும் ஒருதிசைகளு
மில்லைஅதற்கெல்லாம் லாயிலாகஇல்லல்லாகு முகம்மதுற்றசூல்
லாகியென் றெழுதியேயொழிய அப்படியிருக்க நாங்கள்எப்படி அ
வரை அறியாம லிருப்போமென்று சொல்லியது- பிறகு புலூக்கி

யா சொல்வார். பாம்புகளே நரகத்திலுங்களைப்போலேதான் அல்ல து உங்களைக்காணப் பெரியபாம்புகள் உண்டோவென்று கேட்டார் அப்போது பாம்புசொல்லியது உண்மையாக நரகத்தில்நின்றும் சிலபாம்புகள் உண்டு மெங்களைப்போல ஒருபாம்பு அந்தப் பாம்புடையநாசியிற்புகுந்து வாயிற் புறப்பட்டுபோனால் அது அறிய மாட்டாதென்று சொல்லியது பிறகு புலூக்கியா அதுகளுக்குசலாம் சொல்லிக்கொண்டு அந்தத் தலத்தைவிட்டு நடந்து ஒருவனுப்பமான மலையளவிற் சேர்ந்தார் அந்தமலையாகிறது விஸ்தீனமான உயர்ந்தமலை அதினுடைய உயர்த்தியாகிறது வானத்தை அளாவி நிற்கும்போற் காணுகின்றது அந்தமலையளவில் சென்றபோது மலையின்மேலே புலிக்கூட்டங்களைக் கண்டார் அதினுடையகூட்டத்தையிவ்வளவென்றறியப்போகாது அல்லாகுத்த ஆலாவெயொழிய அந்தப் புலிகளுடைய பெருப்பமும் வனுப்பமும் ஆனைகளைப்போலவிருக்கிறது அந்தப்புலிக்கூட்டத்தைப் புலூக்கியாகண்டபோது கடினமானபயமாகப்பயந்தார் அந்தப் புலிகளிடத்தில் நின்றும் ஒருபுலி நாவுகொண்டுமனிதனைப்போல் பேசியது - படைக்கப்பட்டபடைப்பே நீர்ஆரொன்றுகேட்டதுபின்பு புலூக்கியாசொல்லுகிறார் நான் பனீயிசுறாயீல் கூட்டத்தி லுள்ளவன் என்பேர் புலூக்கியாவென்று சொன்னார் அந்தப்புலிகள் அப்போதுசொல்லியது புலூக்கியாவே பயப்படாதேயும். அச்சந்தீர்ந்தவராகவிரும் முகம்மது நபியாகிறவர்மனிதரெல்லோரிலும் எத்தமானவர்சையிதுமாரிலும் வரிசையானவர் மலாயிக்கத்துகளில் நின்றும்வள்ளலானவர் அவனைத்தேடிப் புறப்பட்டபடியினாலே நீரிவடத்தில் நின்றும்சலாமத்துப்பெற்றீர் அவருடையபறக்கத்துக் கொண்டென்றுசொல்லியது அப்போது புலூக்கியாகேட்டார் புலிகளே முகம்மதுநபியை நீங்களெப்படியறிந்தீர்களென்றுகேட்கப் புலிகள்சொல்லியது நாங்களெப்படி அறியாமலிருப்போம் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுக்கு ஈமான்கொண்டு அவரை றசூலென்றும் உண்மைகொண்டு நாங்க ளெல்லோரும் அவருடைய மார்க்கத்திலாயிருக்கிறோம் நாங்களெல்லோரும் லாயிலாக இல்லல்லாகு முகம்மதுற்ற சூலுல்லாகியென்றுஅற்புதமானகலிமாவைப்புலிகளானது சொல்லக்கேட்டவுடனே புலூக்கியாவுக்கு அளவில்லாத ஆசையென்னுங்கடலில் மூழ்கி நபிசல்லல்லாகு அலைகிவசல்லமளவில் மிகுதிகிருபையாகித் தாம்பொன்உறக்கி லெழுதியிருந்த வன்னிப்புகளும் புலிகள் பாம்புகள் சொன்ன அற்புதங்களைக்கேட்டு மேன்மேலும் காதல்கொண்டார்-பின்புபுலூக்கியா அந்தத்தலத்தைவிட்டு நடந்து காடுமலை - வனம்- வனாந்தரங்களையெல்லாந் தாண்டியொரு விஸ்தீனமான பூமியளவில்வந்தார்

அந்தப்பூமியெல்லாம் பாம்பாகநிரம்பியிருந்தது - அந்தப்பாம்புக
ளுக்குநடுவேமஞ்சள்நிறமாக ஒருபாம்பு இருந்தது அந்தப்பாம்
பு நடக்கும்போதெல்லாம் மற்றும் பாம்புகளும் உடன் நடக்கின்ற
து-அந்தச்சின்னப்பாம்பு மற்றும் பாம்புகளைப்பார்த்தால்அதுகளு
க்குப்பயம் கடினமானபடியினாலே மற்றும்பாம்புகள் பூமியில்பதி
ந்துபோகுது அந்தப்பாம்புகளெல்லாம் இவனைமுடுகிக் கொண்ட
போது புலூக்கியாவுக்குக் கடினமானபயமுண்டாச்சுது - அந்தப்
பாம்புகளுக்கு நடுவேயிருந்த இராஜபாம்பு மேன்மையான பேச்
சாகச்சொல்லியது அஃதாவது எங்களிடத்தில்வந்து சேர்ந்தமனித
னேபயப்படாதே நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய பறக்க
த்துக் கொண்டு அச்சுந்தீர்ந்தவராக விருமென்றுசொல்லி லாயி
லாகஇல்லல்லாகு முகம்மதுற்றசூலுல்லாகி யென்று கலிமாச்சொ
ல்லியது பின்புபுலூக்கியா அந்தப்பாம்பைக்கேட்டார்நீங்கள்நபிச
ல்லல்லாகு அலைகிவசல்லமையெப்படி அறிவீர்களென்று கேட்ட
போது அந்தப்பாம்புகள்சொல்லியது நபிசல்லல்லாகுஅலைகிவசல்
லமைத்தொட்டுப் எங்களைக் கேட்கிறவரோ ஹக்குடைய ஒளிவில்
நபியை உண்டாக்கி நபியுடையவியர்வில்நின்றும் மனுமுதலாகஉள்
ளதடங்கலும் அமைந்தது அப்படிப்புகழ்ந்தங்கிய நபிசல்லல்லாகு
அலைகிவசல்லமே நபியென்று உண்மைகொண்டு அதுகளெல்லாம்
நபிபேரி விரவும்பகலும் கலிமாச்சொல்லிக்கொண்டிருக்குதென்று
சொல்லித்திரும்பவும் அந்தப்பாம்புகள் புலூக்கியாவைக் கேட்ட
துபடைக்கப்பட்டபடைப்பேநீரார் உம்முடையபெயரென்னவெ
ன்றுகேட்க புலூக்கியா சொன்னார் நானாகிறவனீபனியிசுறயீல் கூ
ட்டத்திலுள்ளவன் என்பேர் புலூக்கியா பனியிசுற ல் ஆதம் அலை
கிஸ்ஸலாமுடைய சந்ததியிலுள்ளவர்களென்றுஞ் ெ ல்லித்திரும்பி
யும் அந்தப்பாம்புகளைக்கேட்டார் நீயார்உம்முடைய பெயரென்ன
வென்றுகேட்டபோது அந்தப்பாம்புகளுக்கெல்லாம் ராஜாசொல்
லும் என்னையிந்தப்பாம்புகளுக்கெல்லாம் ராஜாவாகக்கற்பித்தார் எ
ன்பேர்தம்லீக்கா அல்லாகுசுபுகானகு ஒத்த ஆலாவென்னை இந்தப்
பாம்புகளுக்கு ராஜாவாக்காமற்போனால்ஆதமுடையமக்களெல்லோர
ையும் இந்தப் பாம்புகள் ஒருநாளிலெடுத்து விழுங்கிப்போடும்
என்கிலும்நான் ஒருக்கால்சத்தமிட்டால் அந்தச்சத்தத்தைக்கேட்ட
வுடனே அந்தப்பாம்புகளெல்லாம் பூமியின்கீழே பதிந்துபோமெ
ன்றுசொல்லித் திரும்பவுஞ்சொன்னது எனக்குஒருகாஜத்துண்டெ
ன்றுசொல்ல புலூக்கியாஅஃதென்ன காஜத்தென்றுகேட்டார் அந்
தப்பாம்புசொல்லியது புலூக்கியாவேநீர் நபிசல்லல்லாகுஅலைகிவச
ல்லமைக் கண்டீரானால் என்னுடையசலாம் சொல்லிச்சொல்லும்

பாம்புக்கு ராஜாவாகிறவன் நும்முடையஷிபா அத்தைஆதரவுவைத்தி ருக்கிறதாகவும் நும்முடையபாதத்தைச் சந்திக்கநும்மளவில் நாட் டமாகவுமிருக்கிறுனென்று சொல்லுமென்ன புலூக்கியாபாம்புக்கு ப்பயணஞ்சொல்லிக்கொண்டு அதைவிட்டுநடந்து பைத்துல்முக்க த்தீவளவில்வந்தார் அவடத்தில் நீர்வளம் - நிலவளமான சிறப்புப் பொருந்திய ஒருபட்டணத்தைக்கண்டார்.

அதில்மனிதர் குடியிருப்புமிகுதியாகவிருந்தது - அதிலுள்ளவர்க ள்நோன்புந்தொழுகையும் அல்லாகுசுபுகானகுஒத்த ஆலாவுடையதி க்றைவிட்டும் ஒருநிமைப்பொழுதாகிலுமிமறக்கிறவர்களல்ல-அப்ப டிக்கொத்தபறக்கத்தான பட்டணத்தளவிற்சென்று பள்ளியைநாடி ப்போய்புகுந்தார் அப்பள்ளியில் ஒருவாலிபக்காரரிருந்தார் -அவர் முகமானது சந்திரனிலும் அழகுள்ளவராகக் கண்டார் - அவரை க்கண்டுசலாம்சொன்னர் அவர்பிரத்திசொன்னர் பின்புபுலூக்கியா அந்தவாலிபக்காரனிடத்திற்போயிருந்தார் - அப்போதுமனிதனே நீர்எங்கேயிருந்துவந்தீர் உம்முடையபெயரென்ன வென்றுகேட்ட போது - புலூக்கியாசொன்னர் என்பேர்புலூக்கியா நான்பனீயிசு ருயீல் கூட்டத்திலுள்ளவனென்று சொல்லித்திரும்பியும் கேட்டா ர்வாலிபக்காரரே உம்முடையபெயரென்ன வென்றுகேட்க - அவர் சொன்னர் என்பேர் அப்பானென்றுஞ் சொன்னர் - பின்பு அப்பா ன்கேட்டார் புலூக்கியாவே நீர்என்ன நாட்டமாகப்புறப்பட்டீரெ ன்றபோது புலூக்கியாசொன்னர் - நான்புறப்பட்டகாரியம்நபிசல் லல்லாகு அலைகிவசல்லமைக்கண்டு அவருடையபாதகமலங்களி லெ ன்னுடைய சிரசைக் காணிக்கையாகவைத்து அவருடைய மார்க்கத் திலாகவும் அவருடைய உம்மத்திலாகவும் அவருடைய ஷிபாஅத்தி வேண்டுமென்றும் காதலித்துப் புறப்பட்டேனென்றுர் - தாம்வந் தவழிதோறுங்கண்ட அதிசயங்களை யெல்லா மவருடன் சொல்லிப் பாம்புகள்சொன்னசெய்தியும் அதுகள் பேசினபுதுமையும்புலிகள் பேசினபுதுமைகளும் அப்பானுக்குச் சொல்லிக்காட்டினர்-இந்தப் புதுமைகளெல்லாம்கேட்டபோது அப்பான்சொன்னர்புலூக்கியா வே முன்னுளுள்ளவர்கள் வேதம் என்னிடத்திலிருக்கிறது அதைநா ன்ஓதியிருக்கிறேன் அதில்பிற்காலமானல் ஆகிறுநபியாக அல்லாகுசு புகானகு ஒத்த ஆலா ஒருநபியை அனுப்புவான் அவர் பேராகிறது முகம்மது என்றும் அவர் நபிமார்களுக்கெல்லாம் முத்திரைப்பேரு ளவர் முருசலான நபிமார்களுக்கெல்லாம் நாயகமானவர் கியாமத் துநாளையில் பாவியானஉம்மத்துக்களை மன்ருடிக் கொள்ளுகிறவரெ ன்றும் அவர்களுக்குப்பிற்காலம்எப்போதும் நபிகளில்லையென்றும் முன்வேதங்களிற் சொல்லியிருக்கின்றதுபின்னையும் அப்பான்சொ

ல்துவார்புலூக்கியாவே இப்போதுமுகம்மது நபியுடைய நாளல்ல
அவரும்மத்துடையகாலமல்ல முகம்மதுநபிக்கும் அவருடைய உம்
த்துக்கும்நமக்கும்இடையிலே வெகுகாலங்களுண்டா யிருக்கிறது
என்கிலும் தப்லீக்காவென்னும் பாம்பிருக்கிறதலத்தையெனக்கு அ
றிவித்தாலந்தத்தலத்தில் நாமிருவரும்போய் உண்மையாக அந்தப்
பாம்பைப் பிடித்துக் கொண்டால்நமக்குமேலாம்பான ராஜரீகம்
பெறலாம்நபிசல்லல்லாகுகூஅலைகிவசல்லமை அல்லாகுஒத்தஆலா ந
பியாக அனுப்புமளவும்தும்புரவாககயாத்தாக வெகுகாலமிருக்கலா
மென்றுசொன்னார் பின்புபுலூக்கியாவேஇன்னம் அவருடையமார்க்
கத்திலும் புகுதலாம் அவருடைய உம்மத்திலும் புகுதலாமென்று
சொன்னார் - பின்புபுலூக்கியாநபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடை
யமார்க்கத்திலும் புகுதலாமென்கிற ஆதரவுவைத்து நல்லதென்று
பொருந்தினார் நபியைக்காணலாமென்னும் ஆசையாய் நாடிப்பு
றப்பட்டார்-பின்புஅப்பானெழுந்திருந்த இரும்பினாலே ஒருபெட்
டகமெடுத்து அந்தப்பெட்டகத்திலேவெள்ளியினாலே யிரண்டுபாத்
திரங்களை அதில்வைத்து ஒன்றிற்கள்ளும் ஒன்றில்பாலும்வார்த்துஅந்
தப்பெட்டகத்தையெடுத்து இருவரும் அந்தப் பாம்பிருக்குந்தலத்
தைகாடிப்புறபட்டு அந்தத்தலத்திற் போய்ச்சேர்ந்து அந்தப்பா
ம்புகளுக்கு ராஜவைக்கண்டு பெட்டகத்தைத்திறந்துவைத்து அதி
லுள்ள வெள்ளிப்பாத்திரத்தையுந்திறந்துவைத்தார்கள்.

பின்புஇராஜபாம்புவந்து புகுந்துபாலையுங்கள்ளையுங் குடித்தஅ-
க்கள்ளுண்டவெறியாலஇராஜபாம்பானது அந்தப்பெட்டகத்திற்
றுனேமஸ்தாய்கிடந்தது அதுகண்டு அப்பான்மெல்லஎழுந்திருந்து
பெட்டகத்தினிடையிற் போய்பெட்டகத்தினுடைய வாயிலையடை
த்தார்-பின்பு அந்தப்பெட்டகத்தை எடுத்துக்கொண்டு அந்தத்தலத்
தைவிட்டு நடந்தார்கள்-அப்படிநடக்கிறபோது மரங்கள்முதலான
பற்பல புற்பூண்டானதெல்லாம் அல்லாகு சுபுகானகு ஒத்த ஆ
லா உதவிகொண்டிவர்கள் கூடப்பேசப் - பிறகு அவர்களிருவரும் ஒ
ருதலத்திற்போய்நின்றார்கள்அந்தத்தலத்தில் நின்று அசரீரிவாக்யமா
க ஒருசப்தங்கேட்டார்கள் அப்போது இந்தசப்தமானதைஇவர்க
ளிருவரும் யோசிக்கும்போது ஒருமரத்தினிடமாக நின்றுபிறந்தது
அம்மரத்தண்டைசென்றார்கள் - அப்போது அம்மரமானது புலூ
க்கியாவேஅப்பானே-வெண்குஷ்டம் கருங்குஷ்டம் இப்பேர்க்கொ
த்தவியாதிகளுக்குஎன்னுடைய இலைச்சாற்றை யெடுத்துத்தடவ அ
ல்லாகு சுபுகானகு ஒத்தஆலாவுடைய உதவிகொண்டுஷிபாவாகுமெ
ன்றுசொல்லியது அந்தமரத்தைவிட்டுச் சிலதூரம்போகையில் மற்
றொருமரமானது இவர்களையழைத்து புலூக்கியாவே அப்பானே

என்னுடைய இலையைப்பறித்துச்சாற்றையெடுத்து- குருடு- செவிடுக்
குத்தடவினால் அல்லா உதவிகொண்டு ஷிபாவாகுமென்று சொன்ன
து-பின்னையும் மூன்றாவது ஒருமரத்தடியிற்போனார்கள் அந்தமரம்
கூப்பிட்டுச்சொல்லியது- என்னிலையைப்பறித்து-பாம்பு- தேள்கடி
த்தஇடத்திற்றடவினால் அல்லாஉதவிகொண்டு சௌக்கியமா மென்
றுசொன்னதுபின்பு மவடத்திலுள்ள மரமெல்லா மிவர்களிருவரை
யுங்கண்டவுடனே இந்த இந்தக்காரியத்துக்கு ஆவேனென்றுசொல்
லியது - அந்தத் தலங்கடந்து வேறொருமரத்தடியில் வந்தார்கள்
அந்தமரஞ்சொல்லும் என்னிலையைப் பறித்துச்சாறெடுத்து இரண்
டுபாதத்திலும் தடவிக்கொண்டு தண்ணீர்மே னடந்தால் நிலத்தில்ந
டக்கிறதுபோலநடக்கலாம் இரண்டுகாலும் நனையாது அல்லாஉதவி
கொண்டென்று சொல்லியது இப்படிச்சொன்னஉடனே அந்தமர
த்துக் கருகேபோய் அதினுடைய யிலையைப்பறித்து இடித்துச்சா
றைப்பிழிந்து ஒருகூசாவில்வைத்துக்கொண்டு பின்பு அப்பால்சொ
ல்லுவான் புலூக்கியாவே நமக்குப்பிரயோசன மாகிறநாட்டம் இது
தானுக்கும் என்றபோது அந்தப் பாம்பிருக்கிற பெட்டகத்தைப்பூ
மியிலேவைத்து அதினுடைய வாசலைத் திறந்தவுடனே அந்தப்பா
ம்புபுறப்பட்டுப்பறந்துபோகச்சே அதுசொல்லும் ஆதமுடையம
க்னே நீங்களிருவரும் நாடிவந்தநாட்டத்தை யெத்தமாட்டீர்களென்
றுசொல்லிக்கொண்டுபோய்விட்டது பின்பு புலூக்கியாவும்அப்பா
னுநடந்து எமனென்றுழுணாருங்கடந்து பைத்துல்முக்கத்திசுபோ
ய்ச்சேர்ந்து சவாதாவுமெடுத்துக்கொண்டு கடக்கரையிலேவந்து கூ
ஜாவிலிருக்கிற சாற்றையெடுத்து இருவரும் காலிலேதடவிக்கொண்
டுகடலின்மேனடந்தார்கள் பூமியிலேநடக்குமாப்போல நடந்துமுந்
தினகடலிற்புகுந்தார்கள் அந்தக்கடலுக்குநடுவே ஒருபாரதூரமான
தீவைக்கண்டார்கள் அதிலே மிகுந்தமரங்களுமுண்டாயிருந்தது - அதி
ல்அருவிகளுஞ்சுனைகளும்ஓடிது - அந்தமரங்களிலெல்லாம் மதுரமா
னபழமுண்டாயிருந்தது அந்தப்பழத்தினுடைய வலுப்பம் பெரி
யச்செம்புக்குடப்போலிருக்கின்றது - இன்பந்தேனிலுமினியதாய்
கஸ்தூரி மணமானதாயிருக்கும் அந்தத்தீவிலே மனிதர் ஜின்டவிது
ட்டமிருகங்களொன்றுமில்லை - பின்பு அந்தத்தலத்தைவிட்டும் நட
ந்து இரண்டாங்கடலில்வந்தார்கள் அந்தக் கடலில். ஒருதீவைக்கண்
டார்கள் அந்தத்தீவாகிறது முன்கண்டதீவைப்பார்க்கிலும் பத்துமட
டங்குவிசாலமான தீவாகவிருக்கிறது.

அந்தத்தீவில் ஒருதூணிருந்தது அதினுடையஉயரம்ஆயிரமுழமு
ண்டு அதினகலம்இருபதுமுழம் அந்தத்தூணைக்கிட்ட முழுகிப்பார்த்
தார்கள் இரும்பினாலேதான் அந்தத்தூணில் எழுதியிருந்ததுதூபா

னுடையநாளையிலே இனுக்குடையமகன் ஊஜென்பவன் நூகுநபியுடையநாளில் உவாந்தப்பெருவெள்ளம்சுரப்பெடுத்தபோது நிறுத்தினதானுகவிருக்குமென்றெழுதியிருந்தது பின்புஅதைவிட்டுநடந்தார்கள்- மூன்றுங்கடலளவிற்போய் அந்தக்கடலிலுமொரு தீவைக்கண்டார்கள் அந்தத்தீவிலேயுள்ள மணலெல்லாம் கஸ்தூரி அதில்முளைத்திருக்கிற புற்பூண்டுகளெல்லாம் குங்குமமாகவிருந்தது - அந்தத்தீவிலே ஒரு வெள்ளைத் தலைப்பா யிருக்கிறது அந்தத் தலைப்பாவுடைய அழகாகிறது பொழுதினுடைய ஒளிவுபோலா யிருக்கிறது அந்தத் தீவுக்குநடுவே ஒருமலையுமுண்டா யிருக்கிறது - அந்தமலைக்குநடுவே ஒருபொதும்பானதைக்கண்டு அந்தப் பொதும்பின் முடுகிப்போனார்கள் அப்போது அப்பான் சொன்னான் புலூக்கியாவேஉம்முடையகல்பைத் திடப்படுத்திக்கொள்ளும் உம்முடைய உடுமானத்தை நீர் நன்றாயிறுக்கிக்கட்டிக்கொள்ளுமென்று சொன்னான்- பின்பு இருவருமந்த மலைப்பொதும்பிற் புகுந்தார் அதிற்பொன்னாலே ஒரு குப்பாயுண்டாயிருக்கிறது அந்தக்குப்பாவுக்குப் பச்சைமரகதத்தினாலே இரண்டுவாசலுண்டாயிருக்கிறது அந்தக்குப்பாவுக்குநடுவேமாணிக்கத்தால் ஒருகட்டில்போட்டிருக்கிறது அந்தக்கட்டிலுக்குநாலுகாலும்வெள்ளியினால் உண்டாயிருக்கின்றது- அந்தக்கட்டிலின் மேலே பொன்னாலே ஒருதீபாசுப்பட்டு விதானித்திருக்கிறது அந்தப்பட்டுடையபிரகாசமாகிறது பதினாலாம் பக்கப்பூரணசந்திரன்போல ஒளிவுபத்தியாய்ந்திருந்தது அந்தக்கட்டிலின் மேலேஒருவாலிபகாரர் பிடரிகீழே மல்லாந்தவராகப்படுத்து நித்திரைசெய்கிறார்.

அவருடைய வலதுகைச்சிறுவிரலில் ஒளிவினாலே ஒருமோதிரம்போட்டிருக்கிறது- அந்தமோதிரத்தில் நாலுவரியெழுதியிருக்கிறது அஃதாவதுஇசுமுல்லகுலம் எழுதியிருக்கக்கண்டபோது புலூக்கியா அப்பானேயிவராரென்றுகேட்டார்-அப்பான்சொல்லுவான் இவராகிறவர்-தாவூதுஅலைகிஸ்ஸலாமுடைய மகனார்சுலையுமான் அலைகிஸ்ஸலாம்என்றும் அப்பான் சொன்னான் புலூக்கியாவே இவர்கையிலிருக்கிற மோதிரத்தைக்கழற்றச்சத்திபெற்று அந்தமோதிரத்தை நம்முடையகையிலெடுத்துக்கொண்டால் நாம்ராஜாவாக விருக்கலாம் நமக்கு ஜின்னுமனிதரும் நாற்கால்மிருகம் -காற்று-மேகம்-பட்சிகளிதுகளெல்லாம்இன்னம்அல்லாகு சுபுகானகுஒத்த ஆலா படைத்த படைப்பெல்லாம் பூமியிலுள்ள வஸ்துக்களெல்லாம்நமக்குவழிப்படுமென்றுஇன்னம் அல்லாகுசுபுகானகுஒத்த ஆலாநபிசல்லல்லாகுஅலைகிவசல்லமைஅனுப்புங்காலமட்டும் நாம்க்யாத்தாகஇருக்கலாம் அவர்களுடையமார்க்கத்திலும்அவர்களுடையஉம்மத்திலு மாகலாமெ

ன்றுஞ்சொன்னார்- பின்புபுலூக்கியாசொல்லுவார் அப்பானே அல்
லாகுஒத்தஆலா உத்தாரப்படிக்குத்தலைமாட்டில்ஒருபாம்பு கால்மா
ட்டில் ஒருபாம்புஇருக்குதே அப்படியிருக்க அவர்கையிலிருக்கிற
மோதிரத்தை யெப்படிக்கழட்டுவீரென்றார் - பின்புஞ்சொல்லுவா
ன்புலூக்கியாவேஉம்முடைய கல்பைத்துப்பரவாக்கிக்கொள்ளும் நீ
ர். சபூர்வேதத்தைவிடாமலோதும் அந்தவேதத்திலேஅல்லாவுடைய
இசுமுல்லகுலமிருக்கிறது நீர் அந்தவேதத்தைஓதிக்கொண்டிருப்நா
னந்தமோதிரத்தைக்கழற்றுகிறேன்என்னையந்தப்பாம்பு ஒருதங்கட
முஞ்செய்யாதென்றார் பின்பு புலூக்கியாசபூர்வேதத்தை ஓதத்தொ
டுத்தார்- அப்பான்மோதிரத்தைக்கழற்றமுடிகிறான் - பின்புபுலூக்கி
யா அந்தப்பாம்புவாயைத்திறக்கக்கண்டார் அப்போதந்தப்பாம்பு
டையவாயில்நின்றுநஞ்சுநெருப்புமிறந்தது - பின்பு அந்தப்பாம்பு
சொல்லும் ஆதாமுடையமகனேசுலையுமானலைகிஸ்ஸலாம்கையிலிரு
க்கிற மோதிரத்தையெப்படிக்கழற்றுவீர் அவராகிறவர்கியாமத்து
நாளளவுங்காக்கப்பட்டவரென்றுபாம்புசொன்னபிறகு அப்பான்பு
லூக்கியாஅளவில்திரும்பிப்பார்த்துச்சொல்லுவான் - வலுப்பமான
இசுமைப் - பலப்படுத்திக்கொள்ளுமென்றுபின்னையுஞ்சுலையுமானலை
கிச்சலாமளவில்முடுகிறான் புலூக்கியா அப்பான்மோதிரத்தையெப்
படிகழற்றுவா னென்றுபார்த்துகொண்டுசபூர்வேதத்தைஓதிக்கொ
ண்டிருந்தார் அதிலேஅல்லாகுஒத்தஆலா ஜிபுரிலுக்குச்சொன்னான்ஜி
புரீலேதாவூது அலைகிச்சலாமுடையமகனார் சுலையுமான் அலைகிச்சலா
மிருக்கிற விடத்திலே கண்மூடி முழிக்குமுன்னே யிறங்குமென்ற
போதுஜிபுரீல் அலைகிச்சலாமிறங்கி யவடத்தில்வந்து கோடையிடி
போல ஒருசப்தமிட்டார் - அவர்அலறினசத்தத்தினுடையகடினத்தி
னாலே பூமியெல்லாங்கிடுகிடென்றலைந்தது இரண்டாவது அந்தப்பா
ம்புவாயைத்திறந்தூதிப்பது - அந்தப்பாம்புடையவாயில்நின்றுமி
ன்வெட்டிமறைந்தாப்போலேநெருப்புப்புறப்பட்டது - அந்தநெ
ருப்பினுடைய் காந்தியினாலே அப்பான்வெந்து நீறாய்ப்போனான்
நபிசல்லல்லாகுஅலைகிவசல்லமவர்கள் திட்டாந்திரங்கொண்டு - புலூ
க்கியாசலாமத்தானார் பின்புஜிபுரீல்அலைகிச்சலாம் ஆதமுடையவே
ஷமாகவந்தார் அப்போ சொன்னார் கதாச்செய்கிறவனுடைய மக
னே இந்தத்தலத்தைவிட்டிப்போஉன்தோழன் அப்பான்கலாக்காய்
ப்போனதுபோல நீயுங்கலாக்காய்போகப்போறு யென்றுசொன்
னார் அப்போது புலூக்கியாவள்ளலானமனிதனே நீர்ஆரென்றுகேட்
டபோது ஜிபுரீல் அலைகிச்சலாஞ்சொன்னார் நான்ஜிபுரீல்துப்தான
னாஹென்றார் - பின்புபுலூக்கியாசொன்னார் ஜிபுரீலே நான்சுலையு

மான் அலைகிஸ்ஸலாமுடையகையிலிருக்கிறமோதிரத்தைக் கழட்டி
னால் எனக்கு ராஜரீகம்வேண்டுமென்று நான்நாடிவரவில்லை—நா
னாடிப்புறப்பட்டது நபிசல்லல்லாகுஅலைகிவசல்லமுடைய முகத்
தைப்பார்க்கவு மவர்களுடையமார்க்கத்திலாகவும் நாடிப்புறப்பட்
டேனென்றார் பின்பு ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம் சொன்னார் புலூக்
கியாவே அதினாலே நீர்டேற்றப்பெற்றீரென்று சொல்லிமறைந்து
போனார் -பின்பு புலூக்கியாஅந்தப்பொதும்பைவிட்டுப்புறப்பட்
டு மிகுந்தபயங்கரமாக அந்தச் சாற்றையுமெடுத்துக்கொண்டு வெ
ளியிற்புறப்பட்டுக் கடற்கரையில்வந்து அந்தச்சாற்றையெடுத்து இ
ரண்டுபாதத்திலுந் தடவிக்கொண்டு தண்ணீரில் நடந்தார் மூன்று
லேதாமும் அப்பாலுமாகவந்தார்களே அந்தப்பாதையைவிட்டும்
நாலாங்கடலில்வந்தார் அந்த நாலாங்கடலில் நடுவே ஒரு வனுப்ப
மான தீவைக்கண்டார் அத்தீவிலே முளைத்திருக்கிறபுற்பூண்டுகளெ
ல்லாங் குங்குமப்போலவுமின்னமதின்மேல்முளைத்திருக்கிற மரங்களெ
ல்லாம் ஈத்தமரமுமாதளைமரமுப்பின்புஅந்தத்தீவிலேபோனார் - அ
ந்தமரங்களைக்கண்டு அதின்பழங்களைப்பறித்துப் புசிக்கத்தக்கதாக
மரத்துக்கருகே முடுகினார் அப்போது அந்தமரங்கள் சொல்லியது
கதாச்செய்கிறவனுடையமகனே கதாச்செய்கிறவனே எங்களிடத்
தில் ஒன்றுந்தொடாதேயென்றுஞ்சொல்லப் பின்பு அந்தமரங்கள்
பேசினபேச்சைப்புலூக்கியாகேட்டுப் புதுமையாகஇடம்வலந்திரு
ம்பிப்பார்த்தார் அதிலேசிலகவும்களைக்கண்டார் அவர்கள்கையிலே
வாட்பிடித்தபேர்களாகஓயாமல் லாயிலாகஇல்லல்லாகுமுகம்மதுற்
றசூலுல்லாகியென்றுசொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள் - புலூக்கி
யாவைக்கண்டபோது அவர்கள்கேட்டார்கள் ஏழைமனிதனே நீர்
ஆர் அல்லாகுசுபுகானகுஒத்தஆலாஇந்தத்தீவைப்படைத்தநாள் முத
லாகஇவடத்தில்ஒருக்காலுமனிதர்வந்ததில்லை நீரெப்படிவந்தீரென்
றபோது புலூக்கியாசொன்னார்கவும்களே நான்பனீயிசுறாயீல் கூ
ட்டத்திலுள்ளவனென்றார்பின்புமவர்கள் புலூக்கியாவைப்பிடித்துத்
தங்கள்ராஜாவிடத்திற் கொண்டுபோனார்கள் அப்போதுஅந்தராஜா
சிங்காதனத்திலிருக்கிறான் புலூக்கியாவைக் கண்டு லாயிலாக இல்ல
ல்லாகுமுகம்மதுற்றசூலுல்லாகி யென்றுஞ்சொன்னான் பின்பு மனி
தனே நீர்ஆர்எந்தஉம்மத்திலுள்ள வனென்றுகேட்டான் அப்போது
புலூக்கியாசொன்னார் நான்பனியிசுறாயீல் கூட்டத்திலுள்ளவன் சு
லையுமானலைகிஸ்ஸலாமுடைய உம்மத்தென்றார் பின்பு ராஜாசொ
ன்னான்புலூக்கியாவேஇவடத்திலெப்படிவந்துசேர்ந்தீர் இந்தக்கட
லெல்லாம் எப்படித்துலைத்தீரென்றார் புலூக்கியாதாம்புறப்பட்ட
காரியத்தினுடையசமாச்சாரங்களெல்லாமறிவித்தார்அப்போது இ

ராஜாசொல்லுவான் புலூக்கியாவேபயப்படாதையும்நீராகிறது நபி
சல்லல்லாகு அலைகிவசல்லமுடைய பறக்கத்துக்கொண்டு அச்சந்தீர்
ந்தவராகவிருமென்ருர், பின்புபுலூக்கியாகேட்டார் ராஜாவே நீர்
ஆர் உம்முடையபெயரென்ன உம்முடன்கூடவிருக்கிறவர்க ளாரெ
ன்ருர், அப்போதுராஜாசொன்ஞர் நாங்கள்ஜின்கூட்டங்கள் அல்
லாகு சுபுகானகுஒத்த ஆலாஉடைய மலாயிக்கத்துகள் கூடவிருந்
தோம் அல்லாகு சுபுகானகு ஒத்தஆலா பூமியிலிறக்கிஞன்அதுஎதிற்
காகவெனில்இவடத்திலுள்ளகாபரான ஜின்களை வெட்டச்சொல்லி
அதிஞலேநாங்களிவடத்தில் தரிப்பட்டோம் கியாமத்து நாளளவும்
அல்லாகு சுபுகானகு ஒத்தஆலாஉடைய ஏவற்படிக்கு நிற்கிரும்கி
யாமத்துநாள்ளவும் எங்களுக்கு மவுத்துமில்லை நாஞகிறவன் ஜின்கூ
ட்டத்துக்கெல்லாம்ராஜா என்பேர் சுகுறத்துஎல்லாநாளும் எல்லா
நேரமும் லாயிலாகஇல்லல்லாகு முகம்மதுற்றசூலுல்லாகியென்கிற
கலிமாவையோதிக்கொண்ட டிருப்போமென்ருர், அப்போதுபுலூக்
கியாகேட்டார் நீங்கள்ஜின்கூட்டமாயிற்றே நபிசல்லல்லாகு அலைகி
வசல்லமுடைய பேரொப்படியறிவீர்களென்றபோதுஜின்கள்சொன்
ஞர்கள் நபிசல்லல்லாகுகூஅலைகிவசல்லமையறியாமலிருப்போமோ
அவராகிறவர் முன்னுள்ளவர்க்கும் பின்னுள்ளவர்க்கும் ஆண்டவரா
னவர் நாங்களவரை றசூலென்றுஉண்மைகொண்டோ மென்ருர்கள்
பின்புபுலூக்கியா ஜின்களுக்கு ராஜாகூடச்சொல்லுவார் சுகுறத்தே
ஜின்களை எதிற்காகப்படைத்தானென் றெனக்குச் சொல்லவேண்டு
மென்ருர் பின்புஅந்தராஜாசொன்ஞன் புலூக்கியாவேஅல்லாகுசுபு
கானகு ஒத்தஆலா நரகத்தைப்படைத்தான் அந்நகரத்துக்கு ஏழு
வாசலையுண்டாக்கிஞன் அந்தவாசல்களை ஒன்றுமேலொன்ருகப் ப
டைத்து ஒவ்வொரு வாசலுக்கு ஒவ்வொரு வஸ்துக்களைக் கொண்டு
பங்கிடப் பட்டது அல்லா குத்த ஆலா அதிலே இரண்டு கூட்ட
த்தைப்படைத்தான் அஃதாவதுஒருகூட்டம் புலியுடைய வேஷத்தி
ல் அந்தக் கூட்டம் ஆண்பிள்ளையு மற்ருெருகூட்டம் ஓநாயுடைய
வேஷம்போலே அந்தக்கூட்டம்பெண்பிள்ளை அதுகள்ஒவ்வொன்
றுடைய நீளமாவது ஐந்நூறுவருஷித்தடிப்பாடு தூரமுண்டு அந்த
இரண்டுகூட்டத்தையுமேவிஞன் அதுகளுடையவாலை யுதறச்சொல்
லிப்பின்புஉதறியது ஓநாயுடையவாலிலே நின்று தேள்விழுந்தது
புலியுடையவாலில்நின்று நாகப்பாம்புந்தேளுப்விழுந்தது பின்புஅ
ல்லாகுத்தஆலாவுடைய ஏவல்வந்து அந்தஇரண்டையும் நரகத்தில்
கல்யாணம்பண்ணச்சொல்லிக் கல்யாணம்பண்ணினபின்பு அதுகள்
வயிற்றில் எழுபிள்ளைபிறந்தது ஒருபிள்ளை அல்லாகுத்த ஆலாவுக்கு
வழிபட்டது, ஒருபிள்ளை அல்லாகுத்த ஆலாவுக்கு, மாறுசெய்ததுஅ

ஆதாமுக்கும் அல்லாவுடையலகுனத்துப்பெற்று இபுலீசானவன் அவனை அல்லாகுத்தஆலா ஆதமலைகிஸ்ஸலாமுக்குச் சுஜுதுசெய்யச்சொல்லஅவன்மாட்டேனென்று பெருமையடைந்தான் அல்லாகுஒத்த ஆலா மலாயிக்கத்துகளை ஆதமலைகிஸ்ஸலாமுக்கு சுஜூதுசெய்யச்சொல்லியேவினான் அவர்களெல்லோரும் சுஜூதுசெய்தார் இவன் லகுனத்துப்பெற்ற இபுலீசுமாத்திரம் ஏவலைமறுத்தபடியால் காபிருடையகூட்டத்திலானான் அவனை அல்லாகுத்தஆலா ஜின்களுக்கெல்லாமுந்திப் படைத்தானென்று ஜின்களுடைய ராஜாசொன்னான் பின்பு புலூக்கியா அந்தராஜாவைஅனுப்பிக்கொண்டு நான்காங்கடலைக்கடந்து நடந்து ஐந்தாங்கடலிலேபோனார் ஐந்தாங்கடலுக்கு நடுவேஒருபாரதூரமான தீவைக்கண்டார் அந்தத்தீவாகிறது மெத்தவும்விஸ்தீனமான மரங்களும் பழங்களும் ஆறருவிகளு மிகுதியுண்டு அந்தப் பழத்தினுடைய வின்பமானது தேனிலு மதுரமுள்ளது அந்தத்தண்ணீருடைய இன்பமானது பாலிலு மதிகமாகவிருக்கும் அவன்வாசமானது கஸ்தூரிமணத்திலு மதிகமாகவிருக்கும்அந்தத்தீவுக்குநடுவே ஒருமலக்குநிற்கிறார் அவருடைய வலதுபுறத்திலு மிடதுபுறத்திலுஞ் சிறகுண்டாயிருக்கிறது, வலதுபுறத்துச்சிறகுடையநீள மசுரிக்கைத்தொட்டிருக்கிறது. இடதுபுறத்துச்சிறகுடைய நீளமசரிபைத்தொட்டிருக்கிறது அந்தமலக்கு லாயிலாகஇல்லல்லாகு முகம்மதுற்றசூலுல்லாகியென்று கலிமாச்சொல்லிக்கொண் டிருக்கிறார் அவரைக்கண்டபோது புலூக்கியாசலாம்சொன்னார் அவர் ஜவாப்புசொன்னார்.

பின்புஅந்தமலக்குக்கேட்டார் படைக்கப்பட்டபடைப்பே நீரார்உம்முடையபெயரென்னவென்றுகேட்டார் அப்போது புலூக்கியாசொன்னார் என்பேர் புலூக்கியாவென்றார் பின்பு அந்த மலக்குச்சொன்னார் லாயிலாகஇல்லல்லாகு முகம்மதுற்றசூலுல்லாகி யென்றுகலிமாச்சொன்னார்-பின்புபுலூக்கியா தாம்வந்தசெய்தியும் தாங்கடலெல்லாந் துலைத்தசெய்தியும் இந்தபடியென்றுஞ் சொன்னார் பின்பு மலக்குதீர்விதனைப் படாதையும் பயப்படாதையும் நீராகிறவர் அச்சந்தீர்த்தவராகவிருமென்றார் - பின்பு புலூக்கியாசொன்னார் வள்ளலானவரே நீர் ஆர் உம்முடைய பெயரென்ன வென்று கேட்டார் அப்போதுமலக்குசொல்லுவா ரென்பேர்பச்சாயீல் நான்மலக்கென்ன அல்லாகு ஒத்த ஆலா ஒளிவுக்குமிருளுக்கும்வக்கீலாக ஏவினான் என்னை வக்கீலாகப்பட்டது துன்யாவிலே ஒளிவாக வேண்டுமென்றால் ஒளிவாக்கவும் துன்யாவெல்லா மிருளாக்கவேண்டுமென்றா லிருளாக்கவும் அல்லாகு ஒத்த ஆலாஉடைய உத்தாரங்

கொண்டாக்குவே னென்ருர் அவர் முன்னுலே ஒரு பலகைதூக்க
ப்பட்டிருக்கிறது - அந்தப்பலகையி லிரண்டுவரி எழுதியிருந்தது-
ஒருவரி வெள்ளை ஒருவரி கருப்பு இப்படியிரண்டுவரி எழுதியிருக்கி
றதைபுலூக்கியாகேட்டார்- பஜ்ஜாயிலே யிந்தப்பலகையிலுள்ள யிர
ண்டுவரியில் ஒரிவரி வெள்ளையு மொருவரி கறுப்பு மிப்படியிருக்கு
தே அஃதென்னவென்றுகேட்டார் அப்போது மலக்குச்சொன்ருர்
புலூக்கியாவே அதில் முந்தினவரியானது வெள்ளை அதுபகல்கால
த்துடைய பிரகாசமுண்டாகிறது - இரண்டாவதுவரிகறுப்பாயிருக்
கின்றது இராக்காலத்திலிருளை யுண்டாக்கின்றது - இந்த விரண்டுவ
ரிகளாக்கும் பொழுது மிருளுமானதுஎன்றுசொன்ருர்- அல்லாகு
ஒத்த ஆலாதுன்யாவிலே பொழுதையனுப்புவான் துன்யாவெல்லா
வெளிச்சமாய்பொழுது அஸ்தமானுல் அல்லாகுஒத்தஆலாஇருளைது
ன்யாவிலே அனுப்புவான் துன்யாவெல்லா மிருளாமென்றுசொன்
ருர் - பின்புபஜ்ஜாயிலென்கிறமலக்கையனுப்பிக்கொண்டு ஆருங்க
டலுக்குவந்தார் அக்கடலுக்குநடுவே ஒரு தீவைக்கண்டார்அந்தத்தீ
வினுடைய அகலநீளம் நூறுவருஷத்து அடிப்பாடுண்டு அந்தத்தீ
விலொருமலக்குநிற்கிருர்- அவருடைய வலதுகையால் வானத்தைத்
தாங்கிநிற்கிருர் அவருடையஇடதுகையாற் கடலைஅமர்த்திக்கொண்
டுநிற்கிருர் அம்மலக்கு லாயிலாக இல்லல்லாகு முகம்மதுற்றசூலுல்
லாகிஎன்றுகலிமாச்சொல்லிக்கொண்டிருக்கிருர் புலூக்கியா அவரள
விற்சென்று அவருக்குசலாம்சொன்ருர் அவர் அதற்குப்பிரத்திசொ
ன்ருர் பின்பு மலக்குகேட்டார் படைக்கப்பட்ட படைப்பேநீர்ஆர்
உம்முடையபெயரென்னவென்றுகேட்டார் அப்போது புலூக்கியா
சொன்ருர் என்பேர்புலூக்கியா நானுகிறவன் மனிதனென்றுசொன்
ருர்பின்புபுலூக்கியாகேட்டார் வள்ளலானமலக்கே உம்முடையபெ
யரென்னவென்று கேட்டபோது மலக்குசொல்வார் என்பேர்மகு
ளாயிலென்றுசொன்ருர் அப்போது புலூக்கியாகேட்டார் மலக்கே
உம்முடைய வலது கையை வானத்தளவில் உயர்த்திக்கொண் டிருக்
கிறதும்இடதுகையைக்கடலில் அமர்த்திக்கொண்டிருக்கிறது மென்
னவென்றுகேட்டார்- அப்போது மலக்குசொன்ருர் புலூக்கியாவே
வலதுகையினுலே வானத்தில்வருகிறகாற்றை மறைத்துக்கொண்டிரு
க்கிறேன் இடதுகையினுற்கடலைப்பொங்கியெழும்பவிடாமலமர்த்தி
க்கொண்டிருக்கிறேன் கியாமம்முடிவுநாள்வந்தால் என்னை அல்லா
குஒத்தஆலாஏவுவான் என்னிரண்டு கையையும் வானத்தைவிட்டுங்க
டலைவிட்டு மெடுக்கச்சொல்லி யேவுவான் அப்போது நான்கைகளை
யெடுப்பேன் வானத்திலிருந்து வருங்காற்றுடைய குளிரின் கடினத்
தாலும் கடலானது பொங்கி ஆகாயவளவும் வருகிறத்தினுலும் துன்

யாவினுள்ளவைகளெல்லா மழிந்துபோம் அந்த நாள்வருகிறவரைக் குமிப்படியேயிருப்பேனென்றார் - புலூக்கியா மகுயாயீலென்கிற மலக்கிடத்திற் செல்வு பெற்றுக்கொண்டுநடந்தார் பின்புஎழாங்கடலிற்சென்று அக்கடலருகில் நாலுமலக்குகளைக்கண்டார் அந்தநாலு மலக்கில் ஒரு மலக்குடைய தலைமாட்டுத் தலைபோலும் - உ-மலக்குடைய தலை மனிதர் தலை போலும்- ௩- மலக்குடைய தலை புலித்தலை போலும்-நான்காவதுமலக்குடைய தலை பருந்துத்தலைபோலுமிப்படியிருக்கக்கண்டார்பின்புமாட்டுத் தலை போலிருக்கிறமலக்கு துஆச்செய்கிறார்-அஃதாவதுநாயனே நாற்கால் மிருகங்களுக்குக் கிருபை செய்து அதுகளை வேதனைசெய்யாதே கோடைகாலத்திலுள்ள வெப்பத்தையும் மாரிகாத்திலுள்ள குளிரையு நீக்கு ஆண்டவனே நபிசல்லல்லாகூ அலைகிவசல்லமவர்களுடைய ஷிபாஅத்திலென்னையுமாக்கிவிடென்றுதுஆச்செய்கிறார் - இன்னம்மனிதர்தலைபோலிருக்கிற மலக்கு துஆச்செய்கிறார் நாயனே ஆதம்அலைகிஸ்ஸலாமுடைய மக்களைகாத்துக்கொள் அவர்களுக்குக் கோடைகாலத்துடைய வெப்பத்தையும் மாரிகாலத்தினுடைய குளிரையும்விட்டுநீக்கிஆண்டருளென்று துஆச்செய்கிறார்- புலியுடைய தலைபோலுமிருக்கிற மலக்குஅல்லாவுடைய பக்கலில் ஐவாய் மிருகங்களுக்காகத் துஆச்செய்கிறார் அந்தத் துஆவாகிறது- நாயனே ஐவாய் மிருகங்களுக்குக் கிருபை செய் அதுகளை வேதனை செய்யாதே இன்னம் அவைகளைவிட்டுய் மாரிகாலத்தினுடைய குளிரையும் கோடை காலத்தினுடைய வெப்பத்தையும் நீக்கிவிடு என்னை நீ ஆண்டவர் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய ஷிபாஅத்தை யுடையவர்கள் கூட்டத்திலாக்கிவிடென்று துஆச்செய்து கொண்டிருக்கிறார் - பருந்துத்தலைபோலிருக்கிற மலக்கு அல்லா வுடைய பக்கலில் பக்ஷிசாதிகளுக்கு துஆச் செய்கிறார் ஆண்டவனே பக்ஷிசாதிகளுக்கு நீ கிருபைசெய் அதுகளைநீவேதனைசெய்யாதே அதுகளைவிட்டுய்மாரிகாலத்தினுடையகுளிரையும் கோடைகாலத்தினுடைய வெப்பத்தையும்தவித்துவிடுஆண்டவர்நபிசல்லல்லாகுஅலைகிவசல்லமுடைய மன்றாட்டத்தையுடைய கூட்டத்தாரில் என்னையுஞ்சேர்த்தருளென்றிரக்கிறவராகவிருக்கிறார் இந்தப்படிநாலுபேர்களுந் துஆச்செய்கிறார்கள் - இதுகளையெல்லாம்புலூக்கியாகண்டுபின்பு அவர்களை அனுப்பிக்கொண்டு நடந்தார்நடந்துபோம்போது அந்தக்கடலிற்சிலமீன் கூட்டங்களைக்கண்டார்அந்தமீன்கூட்டங்களுடைய எண்ணத்தை அல்லாகுசுபுகானகுஒத்தஆலாஅறிந்ததேயல்லது மனிதராலும் மலக்குகளாலு மட்டிட்டிவைகள்கொண்டுதெண்ணிமுடியாது அந்தகூட்டத்துக்கிளையிலே ஒருவனுப்பமான மீனைக்கண்டார் அந்தமீன்களுடைய கூட்டத்துக்

கருகேபோய்சலாம்சொன்னார் அதுகளும்மறுஜவாப்பு சொல்லிய
துபின்பு அந்தமீன்களுக்கெல்லாம் பெரியமீன்கேட்டது ஓமனித
னேநீர்ஆர் உம்முடையபெயரென்ன நீர்ஜின்னோ மனிதனோ நீர்யா
ருடையஉம்மத்தென்றுகேட்டபோது புலூக்கியாசொன்னார் நானா
கிறவன்மனிதன் என்பேர் புலூக்கியாநான்பனீயிசுறாயீல் கூட்டத்தி
லுள்ளவன் சுலைமானலைகிஸ்ஸலாமுடைய உம்மத்தென்று சொன்
னபிறகுஅந்தமீன்களெல்லாம்லாயிலாக இல்லல்லாகு முகம்மதுற்ற
சூல்லாகியென்றுகலிமாவைச்சொல்லி இந்தக்கடலெல்லாம் நீரெப்
படித்துலைத்து இந்தத்தலத்தில்வந்து சேர்ந்தீரென்று கேட்டபோ
துபுலூக்கியாசொன்னார் நானாகிறவன் நபிசல்லல்லாகு அலைகி ஒசல்ல
மைக்காணப்புறப்பட்டேனென்று - தாமுன்னாலேகண்ட புதுமைக
ளையெல்லாம் அவ்வல்தொடுத்து ஆகிறளவு நடந்தசங்கதிகளெல்லா
ஞ்சொன்னார் பின்புஅந்தமீன்களானது சொல்லும்புலூக்கியாவே ந
பிசல்லல்லாகு அலைகி ஒசல்லமைகண்டீரானா லவருக்கெங்களுடைய
சலாம்சொல்லுமென்றுசொல்லியது பின்புபுலூக்கியா கேட்டார்மீ
ன்களேநான்மெத்தவும் பசியாகவிருக்கிறேனிப்படிக்கொத்த ஆழிய
கடலிலே எதாகிலும்நான் புசிக்கத்தக்கதாகவுள்ள வஸ்துக்களுண்
டோவென்றுகேட்டாரப்போது அந்தமீனானது அவருக்குத்தேனி
லுமினியதாய்வெண்ணெயிலும்மிருதுவாய் கஸ்தூரியைக்காண வாச
மாய் ஒசிபனம்-கொண்டுவந்துகொடுத்தது-புலூக்கியா அதைப்புசி
த்தார்-அவருக்குநாற்பதுவருடம் பசித்தாகமொன்று மில்லாமலிரு
ந்தார்அப்போதுஅதைவிட்டு நடந்துஎழாங்கடலிற்போனார் - அக்க
டலருகில் நல்லதண்ணீர் கடலையுங்கண்டார் - அந்த இரண்டுகடலு
க்குமிடையிலே அழகுபொருந்தியஒருதிரையிருக்கக்கண்டார் அந்
தத்திரையினிடையிற் பொன்மலையொன்றும் வெள்ளிமலை யொ
ன்றுமிருக்கிறது அம்மலைகளையுங்கண்டார் அந்த இரண்டுகடலுக்
கு நடுவேமிகுதி எறும்புக் கூட்டங்களிருக்கக்கண்டார் அந்த எறு
ம்புகளுடையபெருப்பமானது மானைப்போலவிருக்கிறது அதுகள
ளவில்முடிகி சலாம்சொன்னார்அதுகளுமறுஜவாபுசொல்லியதுபின்
புஎறும்புகள்கேட்டதுநீராரர்உம்முடையபெயரென்ன வென்றபோ
துஎன்பேர்புலூக்கியாநான்பனீசுறாயீல் கூட்டத்திலுள்ளவ னென்
றுஞ்சொல்லித்திருப்பி புலூக்கியாகேட்டார் எறும்புகளே நீங்களிந்
தத்தலத்திலிருப்ப தென்னவென்றுகேட்டபோது எறும்புகள் சொ
ல்லும்அல்லாகுஒத்த ஆலாஎங்களையேவினான் இந்தஇரண்டுகடலுக்கு
மிடையிலேஎங்களைவைத்தான் இவ்விரண்டுகடலும் ஒன்றுக்கொன்
றுபொருந்தாமல் எங்களைமண்சுமந்து அணைபோட்டுக்கொண்டிரு
க்கச்சொன்னானென்றுசொன்னதுபின்பு புலூக்கியாகேட்டார் எறு

ம்புகளே யிந்தச்சிவந்த மலையென்ன வெள்ளைமலை யென்னவென்று
கேட்டார் அப்போது அந்தயெறும்புகள்சொல்லும்புலூக்கியாவே
இந்த சிவந்தமலையாகிறதுபொன்மலை அல்லாகுஒத்தஆலாவுடையபு
தையலாகவிருக்கும் பூமியில்வழங்கும் பொன்விளைச்சலெல்லா மிந்
தமலையிலே நின்றுமாயிருக்கு மித்தமலை அசலாயிருக்கும் அந்தவெ
ள்ளைமலையாவது வெள்ளிமலை அல்லாகுஒத்தஆலாவுடைய புதையலா
யிருக்கும் பூமியில்வழங்கும்வெள்ளி விளைச்சலெல்லா மிந்தமலையு
டைய அசலாயிருக்குமென்று சொல்லியது-பின்புபுலூக்கியா அதை
விட்டுத்துலைத்து நல்லதண்ணீர்க்கடலையுந்துலைத்து அதையும் விட்டு
நடந்து காபுமலையளவில்வந்துசேர்ந்தார் பின்பு அதற்கிடையிலே
நின்றும்ஒருசத்தம்கேட்டார் அந்தசத்தமாவது புலூக்கியாவலதுபுற
த்தில் நின்று இடிஇடித்தாப்போலவு மின்வெட்டிமறைத்தாப்போல
வும் ஒருஒளிவுபிரகாசிக்கிறதுபோலவுமிருக்கின்றது அந்தமலையிலே
ஒருமலக்குநிற்கிறார் அவர்தஸ்பீகுசெய்கிறார்அஃதாவதுகாலத்தினு
டையதுவக்கந்தொடுத்து முடிசாகுமளவும்அல்லாகுசுபுகானகுஒத்
தஆலாதுப்பரவானவன் அந்தநாயன்தூய்யவன் தசுபீகிலேபுகழுடை
யவன்நிகுமத்துக்கும் போதுமையாகுமே இன்னம்அவனுடைய தி
ருவுளப்பொருத்தத்தையும் எற்றிவைக்கிறஎன்னுடையதலையைவான
த்தளவிலேற்றிவைத்தநாயன் தூய்யவன்-இனைமென்பாதம் இரண்
டும் ஏழாம்பூமியளவிலேற்றிவைத்தநாயன் தூய்யவன் என்வலதுகை
யைமகிரு அளவிலுமிடதுகையைமசிரிபு அளவிலும் எற்றிவைத்த
நாயன் தூய்யவன் எப்போதுமவனுடைய புகழானதைமட்டிடப்
போகாதென்று அந்தமலக்குஇப்படித் தஸ்பீகுசெய்துக்கொண்டு
நிற்கிறார்அப்போது புலூக்கியாவைக்கண்டவுடனே அந்தமலக்குத
ம்முடையமேனியெல்லா முதறி இரண்டுசிறகையும் விரித்தார் அப்
போதுமலக்குடைய இரண்டுகாலின்கீழேஅகப்பட்டு பூமியெல்லா
ம் அலைந்ததுபின்பு அந்தச்சிறகில்நின்றும்நெருப்பெரிவதுபோலஒ
ருஒளிவுபுறப்பட்டது அப்போது அந்தமலக்குத்தாம் தசுபீகுசெய்
கிறகாலிலேசும்மாவிருந்தார் அப்போது புலூக்கியா அவருக்குச்ச
லாம்சொன்னார் அவர்சலாமுக்குப்பிரத்தி சொல்லிகேட்டார் நீர் ஆர்
மலக்கோவின்னேமனிதனோ உம்முடைய பெயரென்னவென்றுகே
ட்டார்புலூக்கியாசொன்னார் நான்மனிதன்நான்பனிஇசுறாயீல் கூட்
டத்திலுள்ளவன் என்பேர்புலூக்கியா பனியிசுறாயீல்கள் ஆதமலைகி
ஸ்ஸலாமுடைய சந்ததிகளிலுள்ளவர்களாயிருக்குமென்றுசொன்னார்
நான்நாடிவந்தது நபிசல்லல்லாகு அலைகி ஒசல்லமைத்தேடிப்புறப்
பட்டேன் அவரையு மவரடையாளத்தையுங் காணேனென்றார் அ
வரெந்தத்திசையி லிருக்கிறாரென் றறியேனென்றார் அந்தமலக்கு

லாயிலாக இல்லல்லாகு முகம்மதுற்ற சூலுல்லாகி யென்கிற கலிமா
வைச்சொல்லி நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் பேரில் சலவாத்துச்
சொல்லச்சொல்லிஎன்னை எவப்பட்டதென்றுசொன்னார் புலூக்கியா
கேட்டு வள்ளலாகியமலக்கேயும்முடையபெயரென்னவென்றுகேட்
டார் என்பேர் சுறாக்காயீலென்றுசொன்னார். பிறகு புலூக்கியாவும்
முடைய சிறகை எதுக்காக வதறினீரென்று கேட்ட போது மலக்கு
சொல்லுவார் உம்மைக்கண்டுநானினைத்தேன் கியாமத்துநாள் முடி
கினதாக்கும் அல்லாகுஒத்த ஆலா என்னளவில் மலக்கை யனுப்பின
னுக்குமென்று பயந்து திடுக்கிட்டேனென்று சொன்னார். பின்பு பு
லூக்கியாகேட்பார் நீரிவிடத்தி லென்ன செய்கிறீரென்றார் அதற்கு
மலக்குசொன்னார் நான் அல்லாகு ஒத்த ஆலாவுடைய விசுவாதியாக
விருக்கும் என்கையி லிந்தக் காபு மலையுடைய சூழ்ச்சமும் பூமியு
டைய சூழ்ச்சமும் உண்டாக்கித் தந்தான் அதைப் பிடிக்க வேண்டு
மாகிற் பிடிப்பேன் விடவேண்டுமாகில் விடுவேன் இன்னம் அல்லா
குஒத்தஆலா தன்னடியார் பேரில் தங்கடப்படுத்த நாடினாலென்னை
யேவுவான் பூமியுடையவேரையு மிழுத்துக்கட்டச்சொல்லிஅப்போ
து அதைநானிழுத்துக்கட்டுவேன் அப்போது பூமியிலுள்ள மனித
ரெல்லாம் தங்கடப்படுவார்களினிமனிதரெல்லா ருஞ்சலாமத்தாகநாடி
னாலென்னை யேவுவான் பூமியினுடைய வேரை தளரவிடச்சொல்லி
அப்போது நான்தளரவிடுவேன் அப்பூமியிலுள்ள மனிதரெல்லாம்
சலாமத்துப்பெறுவார்க ளிதனாலே யாம் பூமியாகிறது சிலதரம் அ
சையும் சிலதரம்அசையாது சிலதரநீங்கும்சிலதரநீங்காதென்றுசொ
ன்னார் பின்புபுலூக்கியா மலக்கைக்கேட்டார் அந்தமலையேது அதி
லே படையுணப்பட்டதேதென்றுகேட்டார் அப்போது அவர்சொ
ல்லுவார் அந்தமலை காபுமலை எழுகடலையு மேழுபூமியையும் சுற்று
ரிலிருக்கும் பூமிக்கும் வானத்திற்கு முயர்ந்தமலையா யிருக்கும் பச்
சைமரகதத்தினாலே யுண்டானதாயிருக்கும் அந்தக்காந்தியானது ப
ற்றி பாய்வது வானமெல்லாம் பச்சையாகக்காண்கிறது அஃதாவது
சுவர்க்கத்து மலையாகவிருக்கும் அல்லாகு சுபுகானகுஒத்த ஆலாபூமி
யைவிரித்துத் தன்னுடையகோபப்பார்வைகொண்டு பார்த்தான் அ
ப்பூமியானது பயந்துகடலைப்போலே அலைந்தது அல்லாகுசுபுகான
குஒத்தஆலா இந்தமலையைப்பூட்டிவைத்தான் அப்போது அந்தப்பூ
மி அலையாம லிருந்தது இந்தமலையை அனுப்புகிறதற்கு முதலே இ
ன்னொருமலையும் பூமியிலே அனுப்பவில்லை பூமியிலுண்டாகிற மலை
யுடைய வேரெல்லாம் இந்த மலையுடைய வேர்கொண்டு கட்டினதா
யிருக்கும் அல்லாகு சுபுகானகுஒத்தஆலா பூமியை யழிக்கநாடினால்

என்னை யேவுவான் பூமியினுடைய வேரைப் புறத்திப் படுத்தென்று
சொல்லுவான் அப்போது நான்புறத்திப்படுத்துவேன் புறத்திப்படு
த்தினவுடனே பூமி அலையும் இன்னம் அல்லாகு சுபுகானகு ஒத்த ஆ
லா ஒரு பட்டணத்தைபு மதிலுள்ள பேரையுங் கலாக்காக்க நாடினு
னால் அந்தப் பட்டணத்தினுடைய வேரை யிறுக்கச்சொல்லி என்
னையேவுவான் நானந்தவேரை யிறுக்கினால் தாயனுடைய வலுப்பங்
கொண்டு பூமி அசைந்துபோம் அல்லாகு சுபுகானகு ஒத்த ஆலா த
னுடைய வலுப்பங்கொண்டு கியாமமளவும் பிடித்திருக்கச்சொல்
லி யென்கையிற் சாட்டினன் கியாமத்துநாளானால் அல்லாகுசுபுகா
னகு ஒத்தஆலா என்கையைவிடச்சொல்லி யேவினால்விடுவேன் அப்
போதுவானம்பூமியெல்லாம்காலாக்காகிப்போகுமென்றுசொன்ன
ர்பின்புபுலூக்கியாகேட்டார்மலக்கே இந்தமலைக்கப்புறமென்னவிரு
க்குதென்றபோது மலக்குச்சொல்வார் இந்தமலையின்பிறகேநாற்ப
துபூமியுண்டு நீர் பார்த்தவந்தபூமியல்லாமல் பொன்னாலேபூமியாக
விருக்குமந்தப்பூமியிலுள்ள பேர்களெல்லா மலக்குகள் அந்தப்பூமி
யெல்லாம் ஒளியினாலேதிரைகளாக விருக்கும் அந்தமலக்குகள் ஒரு
க்காலுமிபுலீசையும் நரகத்தையுமறியார்களவர்களெல்லாம் லாயிலா
கஇல்லல்லாகு முகம்மதுற்ற சூலுல்லாகியென்று கலிமாச்சொல்லு
வார்கள் கியாமத்துநாளளவு மிந்தக்கலிமாச்சொல்லுகிறது கொண்
டேஏவப்பட்டிருக்குதென்றுஞ்சொன்னர் பிறகு புலூக்கியா அதற்
கப்புறமென்னவிருக்குதென்றுகேட்டபோது அவர்சொல்லுவார்அ
தின்பின்னாலேநெருப்பினாலேஎழுபதுதிரையும்புகையினாலே எழுப
துதிரையுமொளியினாலேஎழுபதுதிரையுமிருளினாலேஎழுபதுதிரையு
ங்காற்றினாலேஎழுபதுதிரையுமுண்டென்றுசொன்னர் பின்பு புலூக்
கியாகேட்பார் இதற்கப்புறமென்னவிருக்குதென்றுகேட்டார் அப்
போது மலக்குசொல்லுவார்இதற்கப்புறமொருசிங்காசனமுண்டுஅ
துகுறுசாயிருக்கும் அந்த சிங்காசனத்தைசிலமலக்குகள் சுமந்திருக்
கிறார்கள் அவர்கள் மெத்தவும் வலுப்பமானவர்கள் அவர்களுடைய
கால் ஏழாம்பூமியளவுந் தொட்டிருக்கும் அவர்கள்தலை ஏழாம்வான
த்துமே லளாவியிருக்கும் அவர்களெல்லாம் இடைவிடாமல் அல்லா
குவைத் தஸ்பீகுசெய்துக்கொண்டிருப்பார்கள்அல்லாகுசுபுகானகு
ஒத்தஆலாவை ஒருக்காலுமறக்கிறதுமில்லைமேற்சொன்னதிரைகளெ
ல்லாமில்லாதிருக்கில் நானுமிந்தமலையுமற்றும் வஸ்துகளு மந்தக்கு
றுசைச்சுமந்திருக்கிற மலக்குடைய ஒளிவுபட்டுதானால் எரிந்து நீறு
கப்போமென்று சொன்னர் பின்னுஞ் சொல்வார் புலூக்கியாவே
நெருப்பினாலும் புகையினாலும் பனியினாலும் மேகத்தினாலும் வெ
ளிச்சத்தினாலும் முத்தினாலும் மாணிக்கத்தினாலும் பச்சைமரகதத்தி

ருது மந்தத்திரைகளெல்லா மெண்ணிமுடியாது அல்லாகு ஒத்த ஆலா அறிந்ததேஒழிய அந்தத்திரைக ளொவ்வொரு திரைகளுடையகணம் ஐஞ்ஞூறுவருஷத்தூரமுன்னென்றுசொன்னா ரிதற்கப்புறமென்னவிருக்குதென்றுகேட்டார் அப்போது இதற்கப்புறம்சிலமலக்குகள் அறுசைச் சுமந்திருக்கிறார்கள் அவர்களுக்குக் கொம்புண்டாயிருக்கிறது ஒவ்வொருகொம்புக்கிடையில் தூரமாவது வானத்துக்கும்பூமிக்கு மிடையிலுள்ளதூரமுண்டும் அவர்களெல்லாந் தங்களுடையதலைகளைக்குனிந்தபடிதலையெடுக்காமல் தங்கள் நாட்டங்கொண்டு அல்லாகுசுபுகானகுஒத்த ஆலாவைத்தஷ்பீகு செய்துக்கொண்டிருக்கிறார்களென்று முன்சொன்ன திரைகளெல்லா மில்லாதிருக்கில்குறுசைச்சுமந்த மலக்குகளெல்லா மறுசைச்சுமக்கிற மலக்குகளுடையஒளிவுதாக்கினா லந்தக்காந்தியினா லெல்லோர்க்கும்வெந்து நீறாய்ப்போவர்களென்றுஞ்சொன்னார் பின்பு புலூக்கியா யிதுக்கப்புறமென்னவிருக்குதென்றுகேட்டபோதுமலக்குசொல்லுவாரிதுக்கப்புறம்ஒருபூமியுண்டு அந்தப்பூமியிலே நெருப்புண்டா யிருக்கிறது அப்பூமியொளிவினா லுண்டாகப்பட்டிருக்கின்றன, அந்தஒளிவினுடையபிரகாசமாவது பொழுதினுடையபிரகாசத்திலுநாலுபங்கு அதிகமாயிருக்கும்அந்தப்பூமியிலுள்ள மலக்குகள்ஒரு ஒட்டைநிலம் காலியில்லாமல் சுகுதிலேயிருப்பார்கள் - கியாமமளவுந் தங்கள் தலைகளையுயர்த்தாமல் கியாமத்துநாளானால் தலையையுயர்த்துவார்கள் உயர்த்தி யவர்கள் சொல்லுவார்கள் உன்னை நாங்கள் துய்தாக்கி வைக்கிறோம் உனக்குத் தகுதியாகிய வணக்கம் நாங்கள் வணங்கவில்லையென்று தஷ்பீகுசெய்வார்கள் - பின்பு புலூக்கியா அதற்கப்புறமென்னயிருக்குதென்றுகேட்டார் - அந்தத்திரைகளுக்குக்காவலாயிருக்கிற மலக்குகள் மிகுதியா யிருப்பார்கள் - அவர்கள் தஷ்பீகு செய்கிறார்கள் — ஆண்டவனே நீ துய்யவன்உனக்கு இணையில்லை அடியார்கள்செய்யும் வணக்கத்துக்குப்பாத்திரமான நாயன்நீயன்றி இன்னுமொரு ஹக்கைக்கொண்டு உன்னை வணங்கவில்லையென்றுசொல்லுவார்கள் — இதற்கப்புற மென்ன வென்று கேட்டார் அந்ததிரைக்கப்புற மிகுதியானமலாயிக்கத்துகளுமுண்டு அந்த மலக்குகளை யெல்லாம் நாலுபத்தியாக வைக்கப்பட்டிருக்கிறது ஒவ்வொருமலக்குக்கு நாற்பதுதலையுண்டு ஒவ்வொருதலைக்கு நாற்பது நாவுண்டு ஒவ்வொருநாவுக்கு நாற்பது வகைப்பாஷையுண்டுஅந்தப்பாஷைகொண்டு தஷ்பீகுசெய்கிறார்கள்- ஒன்றுபோலொன்றிராதென்று சொன்னார் அப்போ புலூக்கியா இதற்கப்புறமென்னவென்றுகேட்டார் - அப்போது மலக்குசொன்னா ரின்னும் பெருப்படைப்பான மலக்குகளிருக்கிறார்களென்றார் பின்னையும்பு

ளூக்கியா இதற்கப்புறமென்னவென்றுகேட்டார் அப்போதுமலக்கு சொன்னார் இன்னம் மதிலும் பெரும்படைப்புள்ள மலக்குகளிருக்கிறார்களென்றுஞ்சொன்னார் - பின்னையும் புளூக்கியா இதற்கப்புறமென்னவென்றுகேட்டார்.

அப்போதுமலக்கு நானறியமாட்டேன்இதற்குமேலெனக்குத் தெரியமாட்டாதென்றுசொன்னார் அப்போது புளூககியா அந்தமலக்கிடத்திலிருந்த புதுமைகளெல்லாங்கேட்டிருந்த பயமாய்பயந்தழுதார்-பின்பு அந்தமலக்கு இவரழுகிறதைக்கண்டு சும்மாவிருந்துவிட்டார் பின்பு புளூக்கியா அந்தத்தலத்தைவிட்டு காவுமலைக்குக்கீழிறங்கி நடந்தார் அந்தவழியில் ஒரு மனிதனைக் கண்டார் அப்படியே நடந்துபோகிறபோது பக்கிசாரத்துடையசத்தங்கேட்டு மனது சந்தோஷமாச்சுது அந்தஊரில் ஒரு வாலிபனைக்கண்டார் அவருடையமுகம் அழகுந்தெளிவுமாய் பதினாலாம்பக்கத்துநிலவினுடைய பிரகாசம்போலாய் மேகப்பறக்குமாப்போலக் கண்டவுடனே அவரிடத்திற்போய்சலாம்சொன்னாரவரும்புளூக்கியாவேயென்றுசொல்லி மறுஜவாபுஞ்சொன்னார் பின்புபுளூக்கியாகேட்டார்மனிதனே நீர் ஆர் உம்முடையபெயரென்னவென்றுகேட்டாரப்போது அந்த வாலிபக்காரர்சொன்னார் நீரின்னம்முன்னேபோம்அங்கே ஒருவாலிபர் வருவார் அவர்சொல்லுவாரென்றார் பிறகுபுளூக்கியா ஒரு இரவும்பகலும் நடந்துபோகிறபோது பின்னும்ஒருவாலிபனைக்கண்டார் அவருடைய ஒளிவாகிறது வானத்தளவும் எற்றியிருக்கிறது அவர் நடக்கிறது மேகப்பறக்கிறதுபோ லிருக்கிறது அவருக்கடுக்கப்போய் சலாம்சொன்னார் - அவர்ஜவாபுசொன்னார்பின்பு புளூக்கியா கேட்டார் சாலிகான மனிதனோ நீர் ஆர்இன்னமெனக்குப்பிறகு ஒருவாலிபர்வருகிறா ரவரிடத்திற் கேளுமென்றார் - பிறகு புளூக்கியாஒருஇரவும்பகலுமாகநடந்து போகிறபோது ஒருவாலிபனைக்கண்டார் அவருக்குமுடுகிச்சலாம்சொன்னார் - அவர்பிரத்திசொன்னார் பின்பு புளூக்கியாகேட்டார் சாலிகானமனிதனோ உம்முடைய முகத்துடைய அழகு வானமளவும் பிரகாசிக்குதே நீர் தண்ணீர்மேலே மேகம்நடந்ததுபோலநடக்கிற மனிதனோ நீர் ஆர் உமக்கு முன்னே அழகான இரண்டு வாலிபக்காரர் போனார்களே அவர்களாரென்று கேட்டார் -முந்தினவாலிபர்இசுறாயீல் இரண்டாம்வாலிபர் மீக்காயீல் மூன்றாம் வாலிபர் ஜிபுரியீ லென்றுசொன்னார்-இன்னும் ஆலத்தை யெல்லாம் படைத்தாளுகிற நாயனுடைய விசுவாசமானவ ரென்று சொன்னார்—பின்பு ஜிபுரீலே நீரெங்கேபோறீரென்றுகேட்டபோது—நான்நரகத்துக்குப்-போகிறேன்.

நரகத்துப் பாம்புகளிலொருபாம்பு நரகத்திலே குடியிருக்கிறவர்
களைவாதனைசெய்கிறதா யவர்க ளெல்லோரும் அல்லாகுசுபுகானகு
ஒத்த ஆலா அளவி லந்தப்பாம்பைவிட்டுங் காவல்தேடினார்களவர்க
ளுடையது ஆவைஅல்லாகுசுபுகானகுஒத்தஆலா கபூல்செய்து அந்
தப்பாம்பைநரகத்திற்போய்ப்பிடித்துவரச்சொல்லியெங்களையேவி
னன் நாங்களந்தப்பாம்பைப்பிடிக்கப்போகிறோம்கியாமத்துநாளை
யி லிந்தப்பாம்பைக்கொண்டாக்கும்காபிர்களை அதாபுசெய்விப்பா
னென்றுசொன்னார் அப்போதுபுலூக்கியாஅந்தப்பாம்பினுடையநீ
ளமெம்மாத்திரமென்றுகேட்டார் அதினுடையநீளமானதுமுந்நூறு
வருஷித்தடிப்பாடு நீளமுண்டென்றுசொன்னார் அப்போது புலூக்கி
யாகேட்டார்ஜிபுரிலேநரகத்திலிதைக்காணப் பெரும்பாம்புண்டோ
வென்றுகேட்டபோது சொல்லுவார்புலூக்கியாவே உண்மையாகந
ரகத்திற்சிலபாம்புண்டுஅந்தப்பாம்புடையநாசியிலிந்தப்பாம்புபுகு
ந்துகாதினாலேபுறப்பட்டால்அந்தப்பாம்பினுடையபெருப்பத்தினா
லேஇந்தப்பாம்புநுழைவது தெரியமாட்டாதென்றார்-பின்னுஞ்சிபு
ரீல்சொன்னார்-புலூக்கியாவே நீராகிறது முகம்மதுசல்லல்லாகு அ
லைகிஒசல்லமைத்தேடி அவர்மே லாசைகொண்டுபுறப்பட்டீர் இப்
போதவர் பிறக்கிற காலமல்ல எங்கிலும் நீரும்முடைய தாயாரள
விலும் உம்முடையகூட்டங் குடும்பத்தளவிலும் போய்விம் - அ
ல்லாகு சுபுகானது ஒத்தஆலா நபிசல்லல்லாகு அலைகி ஒசல்லமு
டைய ஷபாஅத்திலும்மைம்புகுத்தி வைப்பானாகவும் அவரும்மத்து
டையதவாபு முமக்குத் தருவானாகவு மென்றார் அப்போதுபுலூக்கி
யாசொல்வார் நானெந்தாயாரளவி லெப்படிப்போவேன் எனக்கு
வழிதெரியாதென்றார் - அப்போதுஜிபுரீல் அலைகிஸ்ஸலாம்சொல்லு
வார் உம்முடையதாயாருக்கும் உமக்கும்நானூறுவருஷித்து அடிப்
பாடுண்டென்றார்-அப்போது புலுக்கியாஅவரிடத்தில்நின்றுமிகுந்த
துயரங்கொண்டுகேட்டார் ஜிபுரீலே யென்தாயாரளவி லெந்தப்பா
ங்கிற்சேருவேனென்றபோது ஜிபுரீல்சொல்லுவார் ஓபுலுக்கியாவே
நீர்ஆகிறவர் அச்சமற்றவர் பயப்படாதையும் அல்லாகுத்த ஆலாதன
னுடையவரிசைகொண்டுசிறிதுநேரத்திலே உம்முடையதாயாரளவி
ல்உம்மைச்சேர்ப்பானென்றுசொன்னார் பின்புஅவனைவிட்டுப்புலுக்
கியாநடந்துஒருதலத்திற்போனார் அந்தத்தலத்திற் சிலமரங்களுண்டு
ம்அவடத்திற்போய்ச்சேர்ந்தபோது இரண்டுகபுறைக்கண்டார்அந்த
கபுறுக்குநவே,ஒருவாலிபகாரரிருக்கிறார் அவருக்குமுடுகிப்போய் ச
லாம் சொன்னார் அவர் பிரத்தி சொன்னார் பின்பு வாலிபககாரரேஉ
ம்முடைய பெயரென்ன வென்றுகேட்டார் அவர் சொன்னார் என்
பெயர் - சாலிகுவென்றார் பின்பு புலுக்கியா விந்த இரண்டு கபுறு

மேதென்றுகேட்டபோதவர்சொன்னார் ஒருகபுறுஎன்தகப்பனார்ஒரு கபுறுஎன்தாயார் இந்தஇரண்டுகபுறுகளும் நான்மவுத்தாகுமளவும்கா த்திருப்பேனென்றார்பின்புபுலூக்கியா அவரையும்விட்டு அப்புறம்ந டந்தார்பிறகுஒருபாரதூரமானவழியைக்கண்டார்- அந்தவழியிலுள் ளஅதிசயமாவது ஒருசெங்கற்பொன்னாலுமொருகல்வெள்ளியாலுங் கொண்டு வீடுகள் உண்டாயிருக்கிறது அதற்குப் பூசியிருக்கிறசாந் தெல்லாம்கஸ்தூரிகற்பூர மதிலுள்ளமதில்களெல்லாம்முத்துமாணிக் கமும்பதிக்கப்பட்டிருக்கிறது - அந்தவீட்டியிலேஒருஆலாவிருக்ஷமு ண்டாயிருக்கிறது - அதுபோல துன்யாவெங்கிலும் கண்டதில்லை மெத்த[illegible]பாரதூரமானமாகமிருக்கிறது - இன்னம் அந்தமாளிகை க்குக்கீழ்ப்பக்கத்தில்பாலாறுதேனாறு நீராறுமதுவாறுஇப்பேர்க்கொ த்தபெருமைபொருந்திய நதிகளோடுகிறது அந்தமாளிகையிற்சிலதீ பாகுப்பட்டு மின்னும் பலபலவன்னப்பட்டுகளும் வீதானித் திருக் குது அந்தமாளிகைக்குள்ளே-புலூக்கியாபோய்ச் சுற்றிப்பார்த்தார்- அந்தமாளிகையிற் குடியிருக்கிறபேர்ஆரென்றுபார்க்கும்போது அ ல்லாகுத்தஆலாபடைத்த படைப்பில்நின்றும் ஒருவஸ்துவையுங் கா ணாமல் தம்முடையமனதில்நினைத்தார் நபிசல்லல்லாகு அலைகி வசல் லமுடைய பறக்கத்துக்கொண்டு அறியவேண்டுமென்று நாட்டமா னபோது வெள்ளியினாலே ஒருபலகைக்கண்டார்-அந்தப்பலகையி லெழுதியிருக்கிறதுஎன்னவென்றால் ஆதுடையமகன்-சத்தாது இந்த ப்பட்டணத்தையுண்டாக்கினனென்றெழுதியிருந்தது - அந்தமாளி கையில் தூண்கள்மிகுதியுண்டு-அந்தமாளிகையைப்போல-ஒருமாளி கையுங்கண்டதில்லை- பின்புபுலூக்கியா அந்தமாளிகையைவிட்டு ஒரு விஸ்தீனமானதலத்தில்வந்தார்-அந்தத்தலத்தில் ஒரு உயர்த்தியானம ரத்தைக்கண்டார்.

அந்தமரத்திலே ஒரு பட்சியிருந்ததுஅந்தப் பட்சியினுடைய வலையாவது ஆயிரமாற்றுத் தங்கத்தாலுண்டாக்கப்பட்டதாயும் அதி னுடைய இரண்டுகண்ணும் சிவந்த மாணிக்கத்தினாலு மதினுடைய மூக்குத் தண்டானது முத்தினாலு மதினுடைய தூவற்க ளெல்லாம் குங்குமத்தினாலு மதினுடைய இரண்டு காலும் பச்சை மரகத்தினா லு மிந்தப்படியெல்லாமழகிலமையாத பட்சியானது அந்தமரத்தி லேயிருக்கிறது அந்தமரத்துக்கு முடுகப்போய் அந்தப்பட்சிக்குச் சலாம்சொன்னார் அப்போது அந்தப்பட்சிபிரத்திசொல்லியது-பிற குபுலூக்கியா கேட்டார் பட்சியே நானுன்னைப்போல அழகுள்ளப ட்சியை ஒருக்காலுக்காணேன் நீ எந்தப்பட்சி என்கிறதை அறிவி ப்பாயென்றார்அப்போது அந்தப்பட்சிசொல்லும் நானுகிறதுசுவர்

க்கத்துப்பட்சி வழிதப்பிவந்தவர்களுக்குவழிகாட்டிவைப்பேன் பசி
த்தபேருக்கு ஒசிபனங்கொடுப்பேன் ஆதம்அலைகிஸ்ஸலாமுங்கெள
வா அலைகிச்சலாமும் சுவர்க்கத்திலே விருந்தபோது நானு மவர்க
ளுடனே யிருந்தேன் பின்பு அல்லாகு சுபுகானகு ஒத்தஆலா அவர்
களிருவரையும் துன்யாவிலே யிறக்கிறபோ தென்னையு மிந்த வொ
ட்டகத்தையும் கூடயிறக்கினான்.வழிதப்பி நடப்பவர்கள்வந்தால் அ
வர்களுக்கு வழியுங்காண்பித்துப் பசித்தபேருக்கு ஒசீபனமுங்கொ
டுக்கச்சொல்லி அல்லாகுசுபுகானகு ஒத்தஆலா கட்டளைவிட்டானெ
ன்று அந்தப்பக்கிஷிரஞ்சொல்லியது பின்பு புஹாக்கியா ஒடுக்குக்
ளுக்குள்ளே உட்கார்ந்திருந்துகொண்டு தனக்குச் சரிபோனமட்
டும் அருந்தினார்-பின்பு புஹாக்கியா கேட்டார்பக்கிஷிரமேயிந்தத்த
லத்திலே நீயல்லாமல் வேறே யுன்னுடைய கூட்டமாராகிலு முண்
டோவென்றுகேட்டார் - அப்போதுஅந்தபக்கிஷிரஞ்சொல்லியது
இவடத்தில் அப்பாசுடைய தகப்பனார் கிலுறு அலைகிச்சலாமுண்டு
அவர் உமக்கு முன்னாலே வாலிபக்காரராய் அழகுள்ளவராய் பதினா
லாம் பக்கத்துநிலவுபோல ஒளிவுள்ளவராய்வருவாரென்று சொல்லி
யது பிறகு புஹாக்கியா அந்தபக்கிஷிரத்துக்குசலாம்சொல்லிக்கொ
ண்டு திரும்பினார் - அங்ஙனம் கிலுறுஅலைகிஸ்ஸலாமைக்கண்டு சலா
ம் சொன்னார் அவர் பிரதிசொன்னார் புஹாக்கியாவே நீரிந்த சபறி
லே மிகுந்தவருத்தப்பட்டீர் அந்தக்காரியமொன்று முமக்குநிறை
வேறயில்லையென்று பின்னும் கிலுறு அலைகிஸ்ஸலாம் கிட்ட புஹாக்
கியாவும் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமைத்தேடியும் புறப்பட்டுத்
தம்முடைய கண்ணாற்கண்டபுதுமைகளெல்லாம்சொன்னார் - பிறகு
கிறது அலைகிஸ்ஸலாம்சொன்னார் உண்மையாக அல்லாகு சுபுகான
குஒத்தஆலா நபிசல்லல்லாகு அலைகிவசல்லமைப் பிற்காலத்திலனுப்
புவான் அவராகிறவர் தருவாக்காரர்க்கெல்லாம்இமாமானவர் ஒடுக்க
த்திலே முத்திரைப்பேறானவர் ஆலத்துக்கெல்லாம் றகுமானவர்-
இந்தக்காலம் அவர்பிறக்கிறகாலமல்லவே உமக்குமவருக்குமிடையி
லேவெகுகாலமிருக்குதே யினிமேலிப்படி வருத்தப்படவேண்டிய
தில்லை நீர்உம்முடைய தாயாரளவிற் போய்விடுமென்றார் பிறகு பு
ஹாக்கியாகேட்பார் அப்பாசுடையதகப்பனாரே என்தாயாரளவில்நா
னெப்படிச் சேருவேனென்றுகேட்டார் பின்பு கிலுறு அலைகிஸ்ஸ
லாம்சொல்லுவார் புஹாக்கியாவே உமக்கும் உம்முடையதாயாருக்
குமிடையிலே நூறுவருஷித்தடிப்பாடு தூரமுண்டு அந்த நூறுவரு
ஷித்து அடிப்பாடு வழியையும் சுறுக்கில்ஐஞ்ஞூறுமாதத்தில்உம்மை
க்கொண்டுபோய் உம்முடைய தாயாரளவிற் சேர்க்கிறேனென்று
சொன்னார் இப்படிச்சொன்னபோதுஅந்தப்பக்கிஷிரப்சொல்லிய

துநானவனைஐஞ்ஞூறுநாளையிலே சேர்க்கிறேனென்றபோது இலு
று அலைகிஸ்ஸலாய்சொல்லுவார் ஒரு ஷாஅத்திற்சேர்க்கிறேனென்
றார் அப்போது அந்தப்பக்கிஷாரஞ்சொல்லியது புறாக்கியாவேஉ
ம்முடைய இரண்டுகண்ணையு மூடுமென்றபோது புறாக்கியா கண்
ணைமூடினார் பட்சி முதுகிலேற்றிக் கொண்டவுடனே கண்ணைத்திறவு
மென்றது கண்ணைத்திறந்து தாயாரைக்கண்டு கேட்டார்—நானு
ம்மிடத்திலெப்படிவந்துசேர்ந்தேனென்றபோதுதாயார் சொல்லு
வார் மகனே நீரொருவெள்ளைப்பக்கிஷாரத்தினுடைய முதுகின்மே
லேறிவந்தீர் அந்த பக்கிஷாரம் வானத்துக்கும்பூமிக்கு மிடையிலே
பறந்துவந்து என்னிடத்திலும்மை வைத்ததென்று சொன்னார் பின்
பு புறாக்கியா தாம்கடலிலேகண்டபுதுமைகளெல்லாம் தாயாருக்கு
ம் பனீயிசுறாயீல் கூட்டத்துக்கும்சொன்னார் முசுலிமானகூட்டங்க
ளே அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவுங்களுக்கு றகுமத்துசெய்வா
னாகவும் உங்கள் மூச்சுகளை வீணாய் மறதியிலே வைக்காதீர்கள் உங்க
ள் நாவுகளை வீணானபேச்சுப் பேசாதீர்கள் வீணானகபுலத்தி லாக்கி
விடாதீர்கள் நல்லவிசாரமிடுகிறவர்களா யிருந்துகொள்ளுங்கள் உ
ங்களுக்கு மறதியென்கிற கபுலத்தைவிட்டுத் தவிர்ந்து கொள்ளுங்க
ள் மிசிக்கீன்களான கூட்டங்களை ஆதரியுங்கள் இருபதியிலு முங்க
ளுக்கு வலுப்பமான கிருபைசெய்வானாகவும் நபிசல்லல்லாகு அலை
கி ஒசல்லமுடைய வரிசைமிகுதி யுண்டாயிருக்கிறது அவராகிறவர்
முறுசலான நபிமார்களுக்கெல்லாம் ஆண்டவர் ஆலத்துக்கெல்லாம்
றசூலானவர் நபிமார்கட்கெல்லா முத்திரைப்பேறானவர் பாவிகளை
யெல்லா மன்றாடிக்கொள்ளுகிறவர் முத்தகீல்களுக்கெல்லா முன்
னொளிவானவர் தன்னிய அமல்களை மறைக்கப்பட்டவர் நீங்கள் அ
ல்லாகுசுபுகானகுவத்த ஆலாவை நினைக்கிறதைவிட்டு மறந்திருக்கி
றீர்கள் அப்படி மறந்திருக்கக்கடவதல்ல நபிசல்லல்லாகு அலைகிஒ
சல்லமவர்களுடைய வரிசையில்இப்போதுசொன்னதெல்லாம்கொ
ஞ்சம் புதுமை இன்னம் மிகுதிபுதுமைகளுண்டு அதைமட்டிட மு
டியாது அல்லாகு சுபுகானகுவத்தஆலாபடைத்தபடைப்புகளில்நின்
றும் நபிசல்லல்லாகு அலைகிஒசல்லமை மிகுதிவரிசை யாக்கினானெ
ன்று மலக்குகள் முதலாக எல்லாவஸ்துவும் சாட்சிசொல்லுமெப்ப
டிக்கொத்த மிருகங்கள் பட்சிகள்மற்றும்படைப்புகளெல்லாம் சொ
ல்லும் அல்லாகுத்த ஆலாவையும் றசூலையும் மிகுதி நினைவு வைக்க
வேண்டும் நீங்களப்படிக்கொத்த நினைவெல்லாம் விட்டுமறந்திருக்கி
றீர்கள் அல்லா றசூலுடைய பராக்கில்லாமல் துன்யாவுடையபராக்
காகவிருக்கிறீர்கள்உங்கள் சரீரத்தைவிட்டும் நீங்கள் சடுதிபுறப்பட்
டுப்போகிறதை அறியமாட்டீர்கள் காமக்குரோத லோபமோகமத

மாச்சரியமென்னும் விடையங்களினால் மயங்கி துன்யாவுடையபராக்கிலாகாமல் அல்லாகுத்த ஆலாவையும் அவனுடைய றசூலையும் அறிந்து ஷிறகின்படி அமல்களையுஞ்செய்து உண்மையானமகரிபாவுடைய அமலையுஞ்செய்து ஒருமைப்பட்ட நிலையில்நின்ற மூமீன்களுடைய கூட்டத்திலும் மலக்குகள்கூட்டத்திலும் உண்மைப்பேருளநபிமார்கள் கூட்டத்திலு மெழுப்பி அல்லாகுத்தஆலா திருமுன்னேசென்று நிற்பார்களே அந்தக்கூட்டத்தி லாக்குவானாகவும் ஆமீன்எல்லாக்காரியத்துக்கும் நல்லுதவிசெய்வானாகவும் எல்லோருக்கு மேலானகிருபைசெய்கிறவன் எல்லாத்துக்கும் சங்கையான நாயன் அப்படிக்கொத்த நாயனிடத்தில் நான்கேட்கிறேன் நாயனே நியுவந்தநல்லடியார்கள் கூட்டத்தி லெங்களனைவோரையும் கூட்டியருள்டு யுகின பதவிக்காரர் கூட்டத்திலெங்களையுங் கூட்டியருள்நாயனே நல்ல சாலிகான வணக்கத்தார்கூட்டத்தி-லென்னையுஞ் சேர்த்தருள் நாயனே முறுசலீன்களுக்கெல்லாம் ஆண்டவர்முகம்மது சல்லல்லாகு அலைகிஒசல்லமுடைய ஷபாஅத்திலாக்கியருள் ஆமீன்ஆமீன் யாரப்பில் ஆலமீன்.

புலூக்கியாவுடையா கிஸ்ஸா

முற்றிற்று.

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இ ஃ து.

# யூனூசு நபியுடைய கிஸ்ஸா.

அல்கம்துலில்லாகி றப்பில் ஆலமீன் வல்ஆகி பத்துலில்முத்தகீன் வச்சலாத்து வச்சலாமு அலா றசூலிகி செய்யிதினா முகம்மதின் வ ஆலிகி வசகுபிகி அஜிமயீன் அல்லாகு சுபுகானகு ஒத்த ஆலாவுடைய தோழரான துற்றத்துல்பயிலாவென்னும்முத்தவதாரப்பிரபூவாகிய நம்முடைய ஆண்டவர் நபிசல்லல்லாகு அலைகிஒசல்லமவர்களுடைய பாதகமலங்களைச் சென்னிமேற் கொண்டு யூனூசுநபியுடைய கிஸ்ஸாவை அச்சிலிட்டுத் துவக்கத் துடங்குகிறேன்.

மத்தாவுடைய மகனார் யூனூசுநபியுடைய சரித்திரத்தை முன்னோர்கள்பேசிவருகிறார்கள் பைத்துல்முக்கத்திசென்கிற ஊரில் ஷிருயா அலைகிஸ்சலாமாகிறவர் அல்லாகுசுபுகானகுஒத்தஆலாவுடையறசூலுமாய்நபிப்பட்டமுள்ளவருமாய் பனீயிசுறாயீல் இனைக்கெல்லாம் அறிவுசொல்லிக்கொண்டிருப்பார் - அந்தநாளில் ஒருகாபிரான ராஜாவுண்டாயிருந்தான் அவன்பைத்துல் முக்கத்திசைபிடிக்கவந்தான் அப்போது பனீயிசுறாயீல்கள் அவனுடன் உயித்தஞ்செய்தார்கள்பனீயிசுறாயீல்கள் பிரயோகம்பண்ணு மென்னத்தக்க அம்புகளானது அந்தக்காபிரானவர்கள் பத்துப்பேருக்கு ஒருஅம்பானது பட்டுருகும் அந்தகாபிரானவர்கள் விடும்படியான அம்புகள் ஒருவருக்குப்படாமலும் பட்டாலும் காயமும் இரத்தகசிவும் பனீயிசுறாயீல்களுக்கு காண்கிறதில்லை - இவர்கள் பிரயோகம்பண்ணுமென்னத்தக்க அம்புகளினால் ஒரு அம்பானது பத்துப்பேரைக் காயப்படுத்தும் அதற்காற்றமாட்டால் அவ்விராஜாவும் அவனைச்சேர்ந்த படைகளும் முறிந்தோடிப்போவார்கள்-இப்படிச்சிலதரம்சண்டைசெய்து முறிந்து முறிந்தோடிப்போனார்களே யல்லது நிலைத்தவர்களல்ல, பின்பு அநேககாலம்சண்டையில்லாம லிருந்து விட்டார்கள்-சிலநாட்சென்ற

பின்னர் அந்தக்காபிரானராஜாவானவன் சாஸ்திரக்காரனையழைத்து
க்கேட்டான் முன்னுலே நாம்சண்டைசெய்தவூரில் இப்போதுசண்
டைக்குப்போனுல் தோற்புக்கெலிப்பு இரண்டையுமறிந்துசொல்லு
ங்களென்ருன் - அப்போது சாஸ்திரிகளானவர்கள் - நாள் - நக்ஷத்தி
ரம்-பொருத்த-நிமித்த மிவைகளையெல்லாம் பரிசீலனைசெய்துராஜா
வினிடத்தி லறிக்கையிட்டார்கள் - ராஜாவே விண்ணப்பம் முன்தா
ங்கள்சண்டைசெய்தபைத்துல்முக்கத்திசென்னும்ஊரிலுள்ளபனீயி
சுருயீல்கள் ஷிருயா நபியினுடைய சொற்படிகேட்டு அவர் சொ
ல்லுக்கு ஈமான்கொண்டு அவர்சொற்போல வணங்கி நடந்தார்கள்-
ஆகையால் உம்முடைய படை நிலைக்கவில்லை ஷிருயா நபியென்கி
றவர் உம்முடைய படையைமுறியும்படி செய்துகொண்டிருந்தா
ர்இப்போது நல்லசமையமாகவிருக்கிறது- ஏனென்ருல், அவர்கள்
ஷிருயாநபியுடைய சொல்லைக் கேட்காமல் கலகஞ்செய்துக்கொண்
டிருக்கிருர்களென்றுசாஸ்திரிகள்சொன்னதின்பேரில் அந்தராஜாவுக்
குச் சந்தோஷமுண்டாய் ரதகஜதுரபதாதி அரசனைச் சென்னும்
தானைகளை யெல்லாம் அழைக்கச்சொல்லி படைத்தலைவமாரோடுமு
த்திரவுகொடுத்தான்- அப்படியே அவர்கள்அழைத்துப் படையெடு
த்தார்கள்- அப்படைகளினடைத்தூசால் ஆகாயமும் சூரியனுமறை
ந்திருவானது பின்புஅந்தக்கூட்டங்களோடுபயித்துல்முக்கத்திசென்
னும் ஊரைவளைந்தான் அப்படையானது அந்தவூரிற்போய் வளைந்
தது எப்படியிருந்ததென்ருல் வெள்ளைமேகமானது கடலிலிறங்கிஜ
லத்தைக்கிரகித்தெழும்பி வானத்தை மறைந்ததுபோலும் கண்ணிற்
கறுப்புமுழியானதை வெள்ளைமுழி வளைத்ததுபோலும் அவனுடை
யபடையானது அந்த வூரை வளைந்தார்கள். இவர்களுடைய படை
கொஞ்சமாயிருந்தது அந்தக்காபிரான ராஜாவானவன்தன்னுடைய
படைத்தலைவர்களை யழைத்து இன்றையதினம் பொழுது அஸ்தமா
யிற்று நாளையத்தினம்போய்வளைந்தெல்லோரையும்வெட்டி ஊரைப்
பிடித்துக்கொள்ளலாமென்று ஊருக்குப்புறத்தே தன்னுடைய ப
டைகளையெல்லாம் அணிவகுக்கச்சொல்லி யுத்திரவுசெய்தான் இந்த
சமாசாரத்தை ஷிருயா அலைகிஸ்ஸலாமறிந்து பனீயிசுருயீல்கூட்ட
த்தாரையழைத்து அவர்களுடன் சொன்னுர் அந்தக்காபிரானராஜா
வுடைய படையானது அதிகமாகவந்திருக்கிறபடியால் நம்முடைய
படை கொஞ்சமாயிருப்பதால் நாமவனுடன் சண்டைசெய்வதுகா
ரியமல்லநாமெல்லோரும் பயித்துல் முக்கத்திசப்பள்ளியினிடமாய்
ப்போயிருந்தது நான்அல்லாருசுபுகானகுஒத்தஆலாவளவிலே துஆ
ச்செய்கிறேன் நீங்களெல்லோரும் ஆமீன் கூறுங்க ளென்று உத்திர
வுசெய்தார் அப்படியேஎல்லோருமொருமித்துபயித்துல்முக்கத்திசு

ப்பள்ளிவாசலிற்போய்ச்சேர்ந்தார்கள் அப்போது ஷிகுயாஅலைகிஸ்
ஸலாம் பயித்துல்முக்கத்திசுப்பள்ளிமிகுருயிலேயிருந்து துஆச்செ
ய்தார் அப்போது பனீயிசுறாயீல்கள் ஆமீன்கூறினார்கள்அந்தராஜா
வும் பொழுதுதையமானுல பனீயிசுறாயீல்களை வெட்டி பயித்துல்
முக்கத்திசைப் பிடித்துக்கொள்ளுவோமென்றிருந்தான்.

அப்படியிருக்கிறபோது ஷிகுயாநபியுடைய துஆபறக்கத்தால்
ஐந்துபேர்தவிரராஜாமுதலாகியபடைகளெல்லாய்கலாக்காகிப்போ
னார்கள்பொழுதுதையமானபின்புபனீயிசுறாயீல்கள் காபிரானராஜா
வுடையபடையாரம்பத்தைக்காணவில்லையென்றுபார்த்துவரப்போ
னார்கள் அப்போது ராஜாமுதலாகியகாபிர்களெல்லாமிறந்துபோய்க்
கிடக்கக்கண்டார்கள் - ஐந்துபேர்மாத்திரம்கயாத்தாகயிருக்கிறார்க
ள் அவர்களிலொருவன் முதல்மந்திரி அவன்பேராகிறது புகுத்துன
ஷீஷிர்-மற்றநாலுபேரும்படைத்தலைவர் அவர்கள் ஐந்துபேரையும்பி
டித்துக் கட்டிக்கொண்டுவந்து ஷிகுயாநபி முன்பாகவிடுத்தார்கள்-
அப்போதுஷிகுயாநபிஅவர்களைப்பார்த்து அல்லாகுசுபுகானகுவத்த
ஆலாவைப்புகழ்ந்து சுகூறுசெய்தார் - பின்புஅந்தஐந்துபேருக்கும்
குடுமிகளைவாங்கி பயித்துல் முக்கத்திசுத் தெருக்கள்தோறுஞ்சுற்றிஅ
வர்களைச்சிறைச்சாலையிலிட்டுவிலங்குபோட்டார்கள்- பேருக்கொரு
துண்டு கோதம்பு ரொட்டியுங் கொஞ்சந்தண்ணீருங்கொடுத்து வந்
தார்கள்- அப்போதுபுகுத்துனஷீஷிரென்கிறமந்திரியானவன் சொ
ல்லுகிறான் எங்களை யிந்தச் சிறைச் சாலையில் வைத்து கொடுமை
செய்கிறதைவிட யெங்களையுயிர்வதைசெய்தால் நல்லதென்று சொ
ன்னான்- அதைச்சிறைச்சாலைகாவலாளர்கேட்டு ஷிகுயாநபியிடத்தில்
வந்துசொன்னார்கள்- அப்போது ஷிருயாநபி ஐந்துபேருக்கும் ஐ
ந்துகழுமரநாட்டச்சொல்லியுத்திரவுசெய்தார்- அப்போது ஐந்துக
ழுமரமும் நாட்டினார்கள் அவர்களைக் கழுவில் வைக்கச்சொல்லி யுத்
திரவுங்கொடுத்தார் அப்போதுஆண்டவனிடத்திலிருந்து ஜிபுரீல் அ
லைகிஸ்ஸலாம் ஓடிக்கொண்டுவந்து சொல்லுகிறார் ஷிகுயாவே அல்லா
குத்த ஆலாவுமக்குத்திருவுளமானான் அவர்களைக் கழுவிலேபோட்டுக்
கொல்லவேண்டாமென்று விட்டுவிடச் சொல்லியென்னை அனுப்பி
னானென்றார் அப்போதுஷிகுயாநபி சொல்லுகிறார் ஜிபுரீலே யிவ
கள் அல்லாகுத்த ஆலாவுக்கு மாறுகொண்டகாபிர்கள் இசுலாமுக்
கு இடறுசெய்யும்பேர்கள் இவர்களைக்கொல்லவேண்டாமென்று அல்
லாகுத்தஆலா எதற்கு விலக்கினானென்றபோது ஜிபுரீல் அலைகிஸ்ஸ
லாம் சொன்னார் அல்லாகுத்தஆலா பின்வருங் காரியங்களை அறிந்த
வன்பனீயிசுறாயீல்கள்உமக்கிப்போது வழிப்பட்டுநடக்கிறார்கள்.

இன்னஞ் சிங்காலஞ்சென்றால் உம்முடையபேச்சைக் கேளா
மல் தட்டிப்போட்டு உம்மையுங் குறைவுசொல்லி இந்தஊரிலே
யிருக்கவிடாமற் றுரத்திவிடுவார்கள் - அந்தநாளிலே யிவர்கள் ஐந்
துபேரும்உமக்காகப்படைக்கூட்டங்களைத்திரட்டிபனியிசுறாயீல்கூ
ட்டத்தார்முறிந்தோடிப்போம்படியாய் வெட்டித்துரத்துவார்கள்
அப்போதுபனியிசுறாயீல்கள்அந்தச்சண்டைக்குநிலைக்காமல் உம்மு
டையபாதத்தில்வந்துவிழுந்து உம்முடையசொல்லுக்கு வழிப்படு
வார்கள் ஆனதாலிவர்களிருக்கவேண்டுமென்றுஆண்டவன்சொன்னா
னென்றுசொன்னார்அப்போதுஷிகுயாநபிமெய்தானென்றுசந்தோ
ஷப்பட்டு அல்லாகு சுபுகானகுவத்தஆலாவுக்குசுகூர்செய்துஅவர்க
ளைத்தளையினைவிட்டும் அழைத்துவரச்சொன்னார்அப்போது சிறைச்
சாலைக்காவலாளர்களோடி அவர்களைத்தளையினைவிட்டும் அழைத்துக்
கொண்டுவந்தார்கள் உடனேதம்மிடத்திலுட்காரவைத்துநல்லபோ
ஜனங்களுங்கொடுத்துச்சந்தோஷமாகஅனுப்பிவைத்தார்- அப்போ
துபுகுத்துனஷ்ஷாறென்கிறமந்திரியானவன்ஷிகுயாநபிக்குத்தலைசா
ய்த்துக்கையெடுத்துசலாம்பண்ணி உத்திரவுபெற்றுக்கொண்டு தன்
னுடையவூருக்குப்போய் தானேராஜாங்கம்பண்ணிக்கொண்டிருந்தா
ன்எழுவான்படுவானெல்லாம்தன்னரசிலமைத்து அரசாண்டிருந்தா
ன் அவனுடைய சமாச்சாரங்களைஇன்னஞ்சிலகித்தாபுகளிலே சொல்
லிவருகுது அது அப்படியிருக்கஅந்தநாளையில்ஷிகுயாநபிக்குஅல்லா
குசுபுகானகுவத்தஆலாஒகியிறக்கினான்- மத்தாவுடையமகனார்யூனு
சைஅழைத்தனுப்பும்-நானவருக்குநபியாகவும்றசூலாகவும் பட்டங்
கொடுத்தேனென்றும் நீனவாயென்கிறபட்டணத்தில்நூறாயிரங்குடி
மனிதரிருக்கிறார்கள் அவர்கள் அல்லாகுத்தஆலாவையறியாமல்மறந்
திருக்கிறார்கள் அவர்களைஇசுலாமில்வருத்துவிக்கத்தக்கதாகஅனுப்ப
வேண்டுமென்று அல்லாகுசுபுகானகுவத்தஆலா ஒகியிறக்கினானென்
றார்அந்தப்படியேஷிகுயாநபிமத்தாவுடையமகனார்யூனுசைஅழைக்
கவிட்டார்அவர்வந்தபோதுஷிகுயாநபிக்கு ஜிபுரீல்அலைகிஸ்ஸலாம்
ஒகிகொண்டுவந்த சமாச்சாரமெல்லாம் அவருக்குச்சொல்லி அறி
வித்தார்-அப்போதுஷிகுயாநபியிடத்தில் யூனுசுநபிகேட்டார் என்
பெண்சாதியும் இரண்டுபிள்ளைகளுமிருக்குதே அதற்கெப்படி யெ
ன்றுகேட்டார்அப்போதுஷிகுயாநபிஅவர்களையுமழைத்துக்கொண்
டுபோமென்றுசொன்னார் - அப்போதுமத்தாவுடைய மகனார் யூனு
சுநபி தம்முடையபெண்சாதிபிள்ளைகளை அழைத்துக்கொண்டு நீன
வாயென்கிற பட்டணத்திற்கு யாத்திரையானார் அந்தவழியிலொரு
ஆறுவந்துமறித்தது- அந்தஆற்றுக்குப்பாலம்தோணியொன்றுமில்
லைதண்ணீருமதிகப்பிரவாகமாகவோடுகின்றது ஊனபடியினாலே யூனு

சுநபி பெண்சாதிபிள்ளைகளாலே விசனத்தையடைந்து என்னசெய்வோமென்றுயோசித்தார்பின்னும்பெண்சாதியையும் இளையபிள்ளையையும்இக்கரையில்வைத்துவிட்டு மூத்தபிள்ளையையெடுத்துத்தோளின்மேலேற்றிக்கொண்டுஆற்றிலிறங்கிநீந்தினார். அப்படியிருக்க அலியாத்துஷாவும்பெண்சாதிபிள்ளைகளை அழைத்துக்கொண்டுபோகும்போதுஆறுவந்துகுறுக்கிட்டதுஇவரைப்போலஒருபிள்ளையையும் பெண்சாதியையும்கரையில்வைத்துவிட்டுஒருபிள்ளையையெடுத்துத்தோளிலேற்றிக்கொண்டு ஆற்றிலிறங்கி அக்கரையிலேறிப்பிள்ளையை வைத்துவிட்டுத்திரும்பவுமிறங்கிமறுபிள்ளையையெடுத்துக்கொண்டு வருமோமென்றுநீந்திவரும்போதுஅவரைமுதலைபிடித்துக்கொண்டுபோயிற்றென்று சொல்லப்படுகின்றது. இன்னம்வெள்ளத்திற்முழ்ந்துபோனாரென்றும் சொல்லப்படுகின்றது.

மருகூறென்கிறராஜாவும் பெண்சாதிபிள்ளைகளுமாகப்போகிறபோதுஒருஆறுவந்துமறித்தது-அவரும்ஒருபிள்ளையையும்பெண்சாதியையுங்கரையில்வைத்துவிட்டுநாம்அக்கரைபோனால்இவர்களைஓநாய்கொண்டுபோமென்றுஒருமரத்தின்மேலேற்றிகீழேவிழுந்துபோகாமல்கயிற்றினால்கட்டிவைத்துவிட்டு மறுபிள்ளையை தோளின்மேலேற்றிஆற்றிலிறங்கி நீந்திக்கரையேறி அந்தப்பிள்ளையைஒருமரத்தின்மேலேற்றிக் கயிற்றினால்கட்டிவைத்துவிட்டுஇக்கரையிலவந்து இந்தப்பிள்ளையை எடுத்துக்கொண்டுவரலாமென்று ஆற்றில்நீந்திவரும்போதுசுழியிலகப்பட்டுத்தாழ்ந்துபோனார்- அதுகண்டுஇரண்டுபிள்ளைகளும்நாம்கட்டுப்பட்டிருக்கிறதும் தகப்பனார்ஆற்றிற்முழ்ந்துபோனதீவினைஇதென்னவென்றழுதுக்கொண்டிருந்தார்கள்

அதுபோலயூனுசுஅலைகிஸ்ஸலாம் ஒருபிள்ளையைக்கொண்டுபோய்மரத்தின்மீதில்வையாமல்கீழேவைத்துவிட்டுத்திரும்பவுமிக்கரையில்வந்துமறுபிள்ளையையெடுத்துக்கொண்டுஆற்றிலிறங்கிநீந்தும்போது ஓநாயொன்றுவந்து அக்கரையிலிருந்தமூத்தபிள்ளையை அந்தஓநாயெடுத்துக்கொண்டுபோய்விட்டது யூனுசுநபிஅதுகண்டேங்கித்திடுக்கிட்டுகையிலிருந்தஇளையபிள்ளையையும் அந்தஎச்சத்திற்சுரணை தெரியாமல்கைநழுவவிட்டார் அப்போதுஆறடித்துக்கொண்டுபோய்விட்டதுஇதுகளைதாயார்கண்டு இடிமேலிடிவிழுந்தவாறுபோலமயங்கினார்களப்போதுயூனுசுநபிகரைமேலேறிப்பிள்ளையையெடுத்துக்கொண்டுபோன ஓநாயைத்துரத்தினார் அதுகாட்டிலோடிப்போய் ஒருமரத்தின்மேலேறிக்கொண்டு சொல்லுகிறது அல்லா சுபுகானஹுவத்தஆலாவுடையநபியாகியயூனுசே உம்முடையபிள்ளைக்குநீர்

விசாரத்தையடையவேண்டாம் பிள்ளையைத்தேடவும்வேண்டாம்அ
ல்லாகுத்தஆலாஉம்மைஎவிருமேனஅந்தக்காரியத்துக்குநீர்போய்த்தி
ருப்பிவரும்போது உம்முடையமகன்உமக்குதவியாகவருவானென்று
சொன்னது—அப்போது யூனுசுநபிதிருப்பி ஆற்றங்கரையில்வந்தா
ர் அப்போதுபெண்சாதி அக்கரையில்நின்றுவிசாரப்படுகிறார்கள் உ
டனேஜிபுரீல் அலைகிஸ்ஸலாமை அல்லாகுசுபுகானகு ஒத்தஆலா அ
னுப்பினான் ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம்யூனுசுநபியிடத்திற்குவந்துசொ
ன்னார் யூனுசே நீர் பெண்சாதியையும் பிள்ளைகளையும் கூட அழை
த்துக்கொண்டுபோகிறது உமக்குவருத்தமாகவிருக்குமென்றுநினைத்
தீரோஆனபடியினாலேயும்மைவிட்டும் அல்லாகுத்தஆலாஅவர்களைப்
பிரித்துவைத்தான் நீர் அவர்களைத் தேடவேண்டாம் நீனவாயென்கி
றபட்டணத்திற்குப்போய்த்திருப்பிவரும்போது உம்முடைய பெ
ண்சாதி பிள்ளைகளொருகுறைவில்லாதபடிக்கு உம்மிடத்தில்அல்லா
குத்த ஆலா சேர்க்குகிறேனென்று சொன்னான் யூனுசே நீர்கலங்க
வேண்டாம் சபூறுசெய்து கொண்டுபோமென்ன ஜிபுரீல்அலைகிஸ்ஸ
லாம்சொன்னார் யூனுசுஅலைகிஸ்ஸலாம்இக்கரையிலிருக்கிறார்- அவ
ர்பெண்சாதிஅக்கரையிலழுதுக்கொண்டிருக்கிறார்கள் அப்போது
யூனுசுஅலைகிஸ்ஸலாம்பெண்சாதியையழைத்துச்சொன்னார் நீர் அ
ழவேண்டாமென்றுஜிபுரீல்வந்து தமக்குச்சொன்னசெய்தியெல்லா
ம்சொல்லிவிட்டு நடந்தார்-பெண்சாதி தலைமறையு மளவுந் திரும்
பிப்பார்த்துக்கொண்டே நடந்தார் பின்பு நீனவாயென்கிற பட்ட
ணத்திற் போய்ச் சேர்ந்தார் - அந்தப் பட்டணத்தில் அல்லாகுசுபு
கானகுவத்த ஆலாவை அறிந்து ஈமான்கொண்டபேர்க ளொருவரு
மில்லை அப்போது யூனுசுநபிசொன்னார் மனிதரே நீங்களெல்லோ
ரும் லாயிலாக இல்லல்லாகு யூனுசு றசூலுல்லாகியென்று கலிமாச்
சொல்லுங்கோளென்றார் அதுகேட்டு அந்தயூரிலுள்ளவர்களெல்லா
ம்தங்களிலே தாங்கள் பேசிக் கொள்ளுவார்கள் நம்முடையபெரி
யோர்களிருந்தார்கள் அவர்கள்காலத்தி லிந்தமார்க்கம் ஒன்றுமில்லை
யே இப்போதிவர்வந்து புதிதாயொருமார்க்கம்வந்திருக்குதென்று
சொல்வதற்கு அதிசயப்பட்டு ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்
ளுவார்கள்—யூனுசுநபி யிந்த வார்த்தையைக் கேட்டு இதென்னமா
யிருக்குதென்று விசனத்தையடைந்தார் பின்னும்தம்முடைய மன
திலே யுணர்ந்து அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவுடைய உத்தரவு
நமக்கு வந்திருக்க நாம் மார்க்கத்திலே அழைப்போமென்று நாள்
தோறும் அழைத்துவந்தார் இப்படிமுப்பதுவருஷமாக இந்தமார்
க்கத்திலேவாருங்கோளென்று அழைத்துக்கொண்டேயிருந்தார் அவ
ர்களொருவராகிலும் ஈமான் கொண்டிசுலாமாகவில்லை அப்போது

யூனுசுநபிகடைத் தெருவிலும் சந்திகளிலுமவர்களைக் காணுமிடமெ
ல்லாம் இசுலாமென்னும் நல்வேதவழியில் வாருங்கோளென்று அ
ழைக்கத்துடங்கினார்கள் அதுகேட்டுக்காபிரானவர்கள் இவர்மேலே
மெத்தவுங்கொடுமைசெய்வார்கள் இனிமேலொருகாலத்திலு மிந்த
வார்த்தையைப் பேசாதேயென்று காலிலே கயிற்றைக்கட்டிஅடித்
துத்தெருவீதிகலே யிழுத்துக்கொண்டுபோய் குப்பைகளிற்போ
ட்டுவிடுவார்கள் அப்போதுஅவர்மவுத்தானமையத்துப்போலக்கிட
ப்பார் அவருக்கு பக்கிஷாரங்களானது ஆண்டவனுத்தரவின்படிக்கு
அதுகளுடையவாயினாற் றண்ணீரொடுத்து வந்து யூனூசுநபியுடைய
தேகமெல்லாந்தெளித்துச் சிறகினாற்பொதிந்துஅவருடைய களைதீ
ருமளவுங்காத்துக்கொண்டிருந்து களைதீர்ந்தபின்பு பக்கிஷாரங்கள்
போய்விடும் பின்பு இவரொழுந்திருந்து முன்போலத்தெருத்தோறு
ம் அவர்களைக் காணுமிடமெல்லாம் அல்லாகுசுபுகானகு வத்தஆலா
வைவணங்காம லவனுக்கிணையாகப் புத்துக்களை வைத்துக்கொண்டு
வணங்கி வீணாய் நரகத்துக்கிரையாகாமல் அல்லாவையறிந்து நல்வ
ழிசேர்க்குமார்க்கத்தில் வாருங்கோள் கலிமாவைச்சொல்லி நல்வ
ழிபெறுங்கோளென்று அழைப்பார் - அதுகேட்டுநீனவாயென்கிறப
ட்டணத்திலுள்ள ஆண்பெண்ணானவர்கள் புதுமையாக யிவரைச்
சாவப்பிழைக்க அடித்து காலிலே கயிற்றைக்கட்டியிழுத்து எறிந்
துவிட்டார்களே யிவரெப்படியுயிர்பெற்றுவந்தாரென்று எல்லோ
ருப்புதுமையானார்கள் பின்னும் அவரைப் பயித்தியக்காரனைப்போ
லக்கல்லெறிவார்கள், அதற்கெல்லாம் சபூறுசெய்து அல்லாகுசுபு
கானகுவத்தஆலா ஒருவனென்கிற மார்க்கத்துக்கு வாருங்கோளெ
ன்றுஅழைப்பார்அப்போதுஅந்தக்காபிர்கள் முன்னேக்கிவந்து அ
டிப்பார்கள் யூனூசுஅலைகிஸ்ஸலாம் அல்லாகுசுபுகானகுவத்தஆலா
விடத்திலே மெத்தவுமன்றுடி முனாஜாத்துச்செய்தார் ஆண்டவனே
இந்தக்காபிரானவர்களைஇசுலாத்தில் அழைத்தா லென்னைஅடித்துக்
காலிலேகயிற்றைக் கட்டியிழுத்துக்கொண்டுபோய்க் குப்பையிலெ
றிந்துவிட்டார்கள்பின்னும் என்னைப்பயித்தியக்காரனென்று கல்லெ
றிகொள்ளத் தொடுத்தார்கள் இன்னும் என்னைப் பலவிதமான்கொடு
ஞ்செய்கிறார்கள் ஆண்டவனே இப்படிஎத்தனைநாள் நான்பொறு
ப்பேனிந்த அடிகளும் கல்லெறிகளு மின்னுஞ்செய்யப்பட்ட வரு
த்தங்களுமென்னாற் பொறுக்கக்கூடவில்லை ஆண்டவனே நீ யிவர்க
ளை கூதுநபியுடைய கவுமுகள்மேலே நெருப்பைச்சாட்டினதுபோ
லயிவர்கள் மேலும்நெருப்பையிறக்கியிவர்களைஅழித்துப்போடெ
ன்று துஆச்செய்தார் அப்போது அல்லாகு சுபுகானகு வத்தஆலா
யிவருக்கு ஒகியிறக்கினான் யூனூசே என்னுடைய நூகுநபி எழுநூ

றுவருஷம் காபிர்களுடையகையினாலேபட்ட அடியு மவர்கள்செய்யும் வருத்தங்களையும் பொறுத்துக்கொண்டு சபூறுசெய்தவராயிருந்தார் அப்படியிருந்தும் ஒருவராயினும் ஈமான்கொண் டிசுலாத்தில் வந்தார்களில்லை நீர்முப்பதுவருஷ மிந்தக்காபிர்களை இசுலாத்திலழைக்கிறதில் மெத்தவருத்தப் படுகிறீரே நூகுநபியானவர் எழுநூறுவருஷம்வரைக்கும் இந்தப்பாவியானகாபிர்க ளொருவிதத்திலும் நேர்வழிக்கு வரமாட்டார்களென்று ஆண்டவனே யிவர்களைநீவொருபெருவெள்ளத்தைவிட்டு அழித்துப்போடென்று துஆச்செய்தார் அப்போதவரை ஒருகப்பல்வைக்கச்சொல்லி யேவினேன் அவரப்படியேகப்பல்வைத்தார் பிரளயமான பெருவெள்ளத்தையுமனுப்பினேன் அவர் குமாரர்கள் மூன்றுபேரும் இசுலாமான எண்பதுபேரையும்கப்பலையும் கலாசாக்கினேன் மற்றக்காபிர்க ளெல்லோரையும் அழித்துப்போட்டேன் யூனுசேநீர் அப்படிநாற்பதுநாளைக்கு சபூறுசெய்து அந்தக் காபிர்களுக்குச்சொல்லும் வானத்தில்நின்று நெருப்பிறங்கப்போகுதென்று இசுலாத்திலழையும் இன்னும் உமக்குமுன் ஜறுஜீசுநபியை ஆக்கினைசெய்தகொடிய காபிர்களையும் நெருப்பினாலே அழித்துப்போட்டேன் அப்படியேநெருப்பினாலாக்கினைசெய்து அதாபு சொடுக்கிறது துன்யாவிலும் ஆகிறத்திலும்நானேயல்லாமல் மனிதர் ஒருவருக்கொருவர் நெருப்பினாலேவேதனை செய்ய அவர்களுக்கென்னுடைய வுத்திரவில்லையென்று ஆண்டவன்சொன்னான் யூனுசுநபி அலைகிஸ்ஸலாம் அந்த நாற்பதுநாளும்அவர்களுக்குச் சொல்லிக்கொண்டேவந்தார் அடா அல்லாவுக்குமாறுகொண்ட காபிர்களே வானத்தில்நின்று அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவுடையபுறத்தினாலே நெருப்பிறங்கப்போகுது அந்தநெருப்பில் நீங்களகப்பட்டுவெந்தழிந்துபோவீர்கள் பிருகூனும் அவனுடைய கவுங்களும் நீலஆற்றிலே தாழ்ந்துபோனப்போலும் நூகுநபியுடையசொற்கேளாதகவும்கள் பெருவெள்ளத்தில்அழிந்துபோனதுபோலும் நீங்களும்சிலநாளில் அழிந்துபோகப்போறீர்களென்பேச்சைக்கேட்டு ஈமான்கொள்ளுங்கோளென்று சொன்னார் அந்தக்காபிர்கள் சொன்னார்கள் நீசொன்னதுபோல நெருப்பிறங்கிறதைநாங்களறியவேண்டும் அப்படி நெருப்பிறங்கினால் அதின்பிறகு பார்த்துக்கொள்ளலாம்இப்போது நாங்கள் உம்முடையசொற்படிக்குஇசுலாமாகப்போகிறதில்லையென்று சொன்னார்கள் அந்தப்படிநாற்பதுநாட்செல்லுமளவுஞ்சொல்லி அழைத்தார்.

ஒருவராகிலும் இசுலாத்தில் வந்தவர்களில்லைபின்பயூனுசுஅலைகி

ஸ்சலாம் அல்லாகுசுபுகானகுவத்தஆலாஅளவில் முனாஜாத்துக்கேட்டார்நாயனேநீசொன்ன தவணைமட்டாக அந்தப்படிசொல்லிஅழைத்தேன்ஒருவராகிலும்குபிரைவிட்டுமாறினார்களில்லை இனிமேலாவது உன்னுடையநெருப்பைவிட்டழித்துப்போடென்றுகேட்டார் அப்போது அல்லாகுசுபுகானகுவத்த ஆலாதிருவுளமானான்-மத்தாவுடையமகனேயூனுசேநீரிந்த வூரைவிட்டப்புறம்போனாற்பின்புநான்அவர்கள்மேலே நெருப்பையனுப்பிவைக்கிறேனென்றான்-பின்பு யூனுசுநபி ஆண்டவன்சொற்படிக்குநீனவாயென்கிறபட்டணத்தைவிட்டு ஒருவூரிற்போய் அந்தவூரினிடமாய் ஒருமலையின்பேரிலேறியிருந்துகொண்டு நெருப்புஎப்படியிறங்குதென்று பார்த்துக்கொண்டிருந்தார்-அப்போது மேகமானதுவந்து நீனவாயென்கிறபட்டணத்தின்மேலேகவிந்தது அப்போதுஅந்தகாபிர்களெல்லாம்மழைமேகமென்றெண்ணியிருந்தார்கள்-அந்தமேகமானது குளிர்ச்சியில்லாமலதிகஅக்கினியை வருத்தத்தொடுத்தது-பின்பு அந்தக்காபிர்களெல்லாம் வீடுகளிலிருக்கமாட்டாமல்அதிக அனலுண்டாகி அந்தஅனலினால்திட்டுமுட்டுக்கொண்டு வீடுகளைவிட்டு வெளியிற்புறப்பட்டிதென்னஆச்சரியமானமழைமேகம்குளிர்ச்சியில்லாமல் அகோரமான அக்கினியைக்கொடுக்குதென்று வானத்தைப்பார்த்தார்கள் அப்போதுமேகத்தின்கண்ணிலிருந்து அனுவுபறக்குமாப்போல நெருப்புப்பறக்கக்கண்டார்கள் அப்போது ஊராரெல்லாம் அவ்விராஜனிடத்திற்குப்போய் இந்த அதிசயத்தைச்சொன்னார்கள் ராஜாவே நம்முடையநீனவாயென்கிறபட்டணத்தில்ஒருபயித்தியக்காரனைப்போல்ஒருவர்வந்திருந்தார்அவராகிறவர்எங்களையெல்லாம்தமக்கொரு மார்க்கமுண்டென்று அம்மார்க்கத்தில்வரச்சொல்லிசிலகாலஞ்சொல்லிக் கொண்டேதிரிந்தார் அதற்குநாங்களொருவருமுட்படாமலவரைத்தொந்தரவுசெய்துகொண்டிருந்தோம் சிலநாளைக்குமுன்பாய்ச் சொன்னார் என்சொற்படிகேட்டு ஆண்டவனையறியாதிருக்கிறீர்கள் ஆனதால் வானத்திலிருந்து நெருப்பிறங்குமென்று சொல்லிக்கொண்டிருந்தார் அதைநாங்களெல்லோரும்பொய்யென்றுஅவர் பேச்சைக்கேட்காமலிருந்துவிட்டோம்இதுதானவர்சொன்ன நெருப்பென்றுசொன்னார்கள் அப்போதுராஜாவானவன்மந்திரிபிரதானிகளையனுப்பி யவர்களைஅழைத்துவரச்சொன்னான்.

இந்தக்கொடுமைக்கு நாமென்னசெய்வோமென்று மெத்தவும்பயந்தார்கள்- அப்போது ஒருமந்திரிசொல்லுவான்ராஜாவே பயித்தியக்காரனைப்போல யூனுசுநபியென்பவர்நெருப்பிறங்கப்போகுதென்று சொல்லிக்கொண்டிருந்தாரே அவரைத்தேடி அழைக்காவி

ட்டால் அவனென்னபுத்தி சொல்லுவாரோ அந்தப் புத்தியைக்கே
ட்டால் நாமெல்லாம்பிழைக்கும்பொருட்டுண்டு இல்லாதிருக்கில் இ
ந்தநெருப்பினால் வெந்துஅழிந்துபோவதற்குச் சந்தேகமில்லையெ
ன்றான். அப்போதுராஜாவானவன் சிலமனிதரை யனுப்பி அந்தம
னிதனைத்தேடிஅழைத்துவாருங்கோளென்றுசொன்னான்—அப்போ
தவர்களெல்லாம்போய்அங்கங்கேதேடிப்பார்த்துக்கண்டார்களில்லை
அவர்பழக்கமாகவிருக்கும் மண்டபங்களிலும்இன்னஞ்சிலவிடங்களி
லும் கடைகள்-தெருக்கள்-சந்துகளெங்குந்தேடி அலைந்துகண்டார்
களில்லை-அப்போது ராஜாவுக்குக்காணவில்லையென்று அறிக்கையிட்
டார்கள்-அப்போது ராஜாமெத்தவும்விசனப்பட்டுச் சொல்லுகிறா
ன்மந்திரிமார்களே யூனுசுநபியென்கிறவரைக் காணவில்லையே என்
னசெய்வோம் நெருப்பானதுமெத்தவும்அதிகமாகப்பறக்குதுதலைக
ளில்தண்ணீர்மழைதூறினாப்போலத்தூறுதே இனிநெருப்புமழையா
கிப்பெய்யுமாகில் ஆரால்பொறுத்தமுடியும் இதற்கென்னபுத்தியெ
ன்றுகேட்டான்-அப்போது தலைமந்திரியானவன் சொல்லுவான் நா
மெல்லோருங்கூடிஒருசுத்தான தலத்திலேபோய் யூனுசுநபியென்
கிறவர் சொன்ன திருமந்திரத்தை ஓதி அவர் வணங்கச்சொன்ன நா
யனுக்குச்சாஷ்டாங்கம்பண்ணுவோம் அப்போதுயூனுசுநபிக்குப்ப
ட்டமும் றசூல்ப்பட்டமுங் கொடுத்தநாயன் நமக்கிரங்கி இந்தநெ
ருப்பைஅகற்றுவானென்றுசொன்னான்-எல்லோரும் அந்தப்படிசம்
மதித்துசிறுபிள்ளைசித்தமும்ஆண்பெண்ணடங்கலும் நீராடித்துகில்
மாற்றிக்கொண்டு ஒருவெளியினிடமாகப்போய் எல்லோருமொரு
மித்து லாயிலாகஇல்லல்லாகு யூனுசுறசூலுல்லாகியென்றுமனவாக்
கொருமித்துக்கலிமாச்சொன்னார்கள் - பின்பு அல்லாகுசுபுகானகுவ
த்த ஆலாவைவேண்டி சுஜுதுசெய்தார்கள்-அப்போதுஅல்லாகுசுபு
கானகுவத்தஆலா அவர்களுக்கிரங்கி அந்த நெருப்பு மழையை நீ
ர்மழையாக்கினான்-பின்பு நீனவாயென்கிற பட்டணத்தி லுள்ளவர்
கள் மெத்த சந்தோஷமானார்கள் - யூனுசுநபியுடைய மார்க்கமே
மெய்யானமார்க்கம்நாம்இத்தனைகாலம்பொய்யிலிருந்து கெட்டோ
மென்று முன்னடப்புகளையெல்லாமிழந்து ஈமான்கொண் டிசுலா
மானார்கள் நல்வேதநெறி யொழுக்கத்திற்குள்ளநெறி எப்படியுண்
டோஅதுபோல் நடந்துவந்தார்கள் முன்வணங்கியபுத்திகளையெல்லா
மெடுத்தெறிந்துவிட்டார்கள் - பின்புஅல்லாகுத்தஆலாவுடையவண
க்கத்திலும் திக்றிலும்பராக்காகவிருந்தார்கள் அப்போது இபுலீசெ
ன்கிறவன் அல்லாகு சுபுகானகுவத்தஆலாவுடைய லஃனத்துப்பெ
ற்ற மல்ஊனாகிய இபுலீசானவன் சைகுமாரைப்போலவேஷமெடுத்
துக்கொண்டு யூனுசுநபியிருக்கிற மலையருகேபோனான் அப்போது

யூனுசுநபி அவனைக்கொண்டு வைசிகே நீயெங்கேயிருந்துவருகிறீயென்றுகேட்டார்-அப்போது இபுலீசு சொன்னான் நீனவாயென்கிற பட்டணத்திலிருந்துவருகிறேனென்றான் - அப்போது யூனுசுநபிகேட்டார்நீனவாயென்கிறபட்டணத்திலே நெருப்பினாலேமழைபெய்யக் கண்டாயோ வென்றுகேட்டார் இபுலீசுசொன்னான் - அந்தவூரில்மழைமாரியாகச் சொரிந்து தெருவீதிகளெல்லாம் வெள்ளமாகப்பிரண்டோடுதென்றான் அதையூனுசுநபிகேட்டு அல்லாகுசுபுகானகுவத்தஆலா அளவிலே மெத்தவும்வெறுப்பாய் நீஅப்புறப்போயிரு நான் நெருப்பையிறக்குகிறேனென்று சொல்லி மழையை யிறக்கினானென்று இபுலீசுடையகலைவிலகப்பட்டு இந்தப்படி நினைத்து தாம்ஆண்டவன் செயலை அறியாமல் அந்தமலையைவிட்டிறங்கினார் - அப்போது இபலீசானவன் அந்தவூரில் நெருப்பிறங்கினதுட்இசுலாமானசேதியும் சொல்லாமலிவரைக்கரைக்கவேண்டுமென்று பொய்யானசொல்லைச்சொன்னான் அவனையிவர் இபுலீசென்றறியாமல் அவன் கலைவிலகப்பட்டுமுகம்வைத்தபோக்கேபோனார் காடு-மலை-வனம் - வனாந்தரமெல்லாங்கடந்துகடற்கரையில்வந்தார் அப்போது அவடத்தில்ஒருகப்பலோடிவந்துவைத்துப்பிடித்துத்தண்ணீரேற்ற வேண்டிவத்தலைவிட்டுச்சிலமனிதர் கரைவந்தார்கள்.

அப்போதுயூனுசுநபிகண்டுஅவர்களிடத்திற்போய்ச்சொன்னார்நீங்கள் தண்ணீரேற்றுகிற வத்தலிலே என்னையு மேற்றிக் கொண்டுபோய்கப்பலிலேஎற்றிவிடுங்கோளென்றார்- அப்போது அவர்களிவரைக்கண்டு மெத்தவும்நல்லமனிதனாயிருக்கிறானென் றேற்றிக்கொண்டுபோய்க்கப்பல்மேலேற்றிக்கொண்டார்கள் அப்போதுஅந்தக்கப்பலிலுள்ளவர்களெல்லாம்வந்துசலாம்சொல்லி நீராரென்றுகேட்டார்கள் - அப்போதுசொல்வார் நானாகிறவன் யூனுசுநபி நாயனுக்குமாறுபாடுசெய்தஅடியானென்றார்உம்முடைய பெயரென்னவென்றுகேட்டார் அவர்களுக்குச் சொன்னார் நான் மத்தாவுடைய மகன் என்பெயர் யூனுசென்றார்அப்போதுகப்பற்சாரன்மெத்தவும் தாக்ஷிசெய்து ஒஜீபனமுதலானதுகளுங்கொடுத்துப்பசியாற்றிக்கப்பலைப் பாய்விரித்தார்கள் - பாய்விரித்தகப்பல் ஓடாமல் மலையழுந்தினதுபோலவிருக்குது அதுகண்டுகப்பலிலுள்ளவர்களெல்லாம்இதென்ன ஆச்சரியமாயிருக்குதென்று விசாரமானார்கள்—அப்போது யூனுசுநபிசொல்வார்நான்வந்துஉங்கள் கப்பலிலேறினபடியாற் கப்பல்ஓடவில்லைநீங்களென்னைக்கடலிலேதள்ளிவிட்டீர்களாகில் உங்கள்கப்பல் சலாமத்தாகஓடிப்போமென்றார்- அப்போதுகப்பற்காரர்சொல்லுவார்கள்நீராகிறவர்சாலிகானவராய்ப்பெரியோராகவிருக்கிறீர்உம்

மைதாங்களெப்படிக்கடலிற்றள்ளுவோமென்றார்கள்- யூனூசுநபிகே
ட்டார் என்னைக்கடலில் தள்ளமாட்டோமென்கிறீர்கள் நீங்கள்பால்
போட்டுப்பாருங்களென்றார்அப்படி பார்த்தீர்களாகில்நான்நல்லவ
னென்றுவந்தால்என்னைக்கப்பலில்வைத்துக்கொள்ளுங்கள்நான்பொ
ல்லாதவனென்றுவந்தால் என்னைக் கடலில் தள்ளிவிடுங்க ளென்று
சொன்னார்-அதுகேட்டு உடனேபால்போட்டுப்பார்த்தார்கள் அதில்
மத்தாவுடையமகன் யூனுசுபொல்லாதவனென்றுவந்தது- யூனுசுநபி
அதுகண்டுஇனியென்னைக்கடலிலே தள்ளிவிடுங்களென்றார் அந்தகப்
பற்காரர்சொன்னார்கள் இப்படிஆயிரஞ்செலவுபால்பார்த்தாலும்நீ
ர்பொல்லாதவனென்றுவந்தாலும் தாங்களும்மைக்கடலிலேதள்ளமா
ட்டோமென்றுசொன்னார்கள்மவுத்தானாலும் உம்முடனேகூடக்கப்ப
லும்கப்பலிலிருக்கிறபேர்களும்மவுத்தாவதேயல்லது உம்மைக்கட
லிற்றள்ளமாட்டோமென்றார்கள் யூனுசுநபிசொன்னார்நீங்களெல்லா
மென்னாலேமவுத்தாகக்காரியமென்னவென்றெழுந்திருந்து கப்பல
ணியத்திலேபோய்கடலைப்பார்க்கிற போதுஅங்கேகூத்தென்கிற மீ
னானதுவந்துவாயைத்திறந்துகொண்டிருக்கக்கண்டு அதைவிட்டுஅம
ரத்தில்வந்துபார்க்கும்போதுஅந்தமீனானதுஅங்ஙனும்வந்துவாயை
த்திறந்துகொண்டிருக்குதுஅப்போதுயூனுசுநபிபயந்து தம்முடை
யதலைப்பாகினைஅவிழ்த்துக்கண்ணைக்கட்டிக்கொண்டுகடலிலேகுதித்
தார்உடனேகூத்தென்கிறமீனானது இவரையெடுத்து விழுங்கிக்கொ
ண்டதுஅப்போதுகப்பல்மிதந்துசலாமத்தாகஓடிப்போயிற்று அக்
கப்பலிலுள்ளவர்களெல்லாம்யூனுசுநபியைநினைந்து மெத்தவும்துக்
கித்தார்கள் - அப்போதுகூத்தென்கிறமீனானது யூனுசுநபியையெடு
த்துவிழுங்கிக்கொண்டுகடலில்ஓடிப்போம்போது அங்ஙன்நூனென்
கிறமீன்கூத்தென்கிறமீனைக்கண்டுஅதின்வயிற்றிலேயூனுசுநபியையுங்
கண்டுகூத்தென்கிறமீனைத்துரத்திநூனென்கிறமீன்பிடித்துவிழுங்கிக்
கொண்டது-அப்போ அல்லாகுசுபுகானகுவத்தஆலாவுடையசத்தமு
ண்டானது-நூனென்கிறமீனேயுனக்குக் கூத்தென்கிறமீனையிரையா
கக்கட்டளையிட்டேன் அதின்வயிற்றிலே என்னுடையநபியாகிய யூ
னுசிருக்கிறார் அவரெனக்கு ஒருகுற்றஞ்செய்தார் ஆனபடியால் அ
வரைகூத்தென்கிறமீன்வயிற்றிற்கிரையாக்கிவைத்தேன் அவரையுன
க்கு இரையாக்கித்தரவில்லையென்று ஆண்டவன்சத்தமுண்டானபோ
துகூத்தென்கிறமீனானது நூனென்கிறவயிற்றிலே செனித்துப்போ
யிற்று யூனுசுநபியானவர் நூனென்கிறமீன்வயிற்றிலே அல்லாகுசுபு
கானகுவத்தஆலாவைசுஜூதுசெய்துக்கொண்டுஇந்தத்துஆவையுமோ
திக்கொண்டிருந்தார்.அஃதாவது லாயிலாகஇல்லா அந்தசுபுகானக்க
இன்னீக்குந்துமினல்லாலிமீன்-என்றுசுஜூதிலேஓதிக்கொண்டிருந்தா

ர்இதன்பொருளாவ.துநாயனேஉன்னைத்தவிரவேறில்லைநாயன் நீபழு
தற்றவன்றிடனுகநானனியாயகாரரினின்றுமாயிருக்குமென்கிறது
பின்புஅந்தநூனென்கிறமீனானதுயூனுசுநபியைவெகு ஆழியகடலெ
லாங்கொண்டோடித்திரிந்தது - யூனுசுநபிக்குஅந்தநூனென்கிறமீனு
டையவுடலெல்லாம் அல்லாகுசுபுகானகு வத்தஆலா கண்ணாடியாக்
கிக்கொடுத்தான்- அவர்கடலிலேயுண்டான புதுமைகளையெல்லாங்க
ண்டு அல்லாகுத்த ஆலாவைப் புகழ்ந்தார்—பின்பு கடலினுள்ளே
பொன்மலை-வெள்ளிமலை-நவரத்தினமலைகளும் இன்னம்பலபல புது
மைகளையெல்லாங்கண்டார்- இப்படிமீனானதுகொண்டோடித்திரியு
ம்போது காறூனென்பவனை ஒருமலக்குகொண்டுபூமியெல்லாம்பட்
டுருக நாளொன்றுக்குஒருபாவமட்டும் கடலிலே அவனைத்தாழ்த்து
வார் அப்போதுயூனுசுநபிகாறூனைக்கண்டபோது அல்லாகுசுபுகா
னகுவத்தஆலா அந்த மலக்குடனே திருவுளமானான் - இனிமேல்கா
றூனைக்கடலில்த் தாழ்த்தவேண்டாம் அவடத்தில்தானே நிறுத்து எ
ன்னுடையயூனுசுநபிகண்டு பேசிக்கொள்ளவேண்டுமென்றந்தமலக்
குக்குக் கட்டளையிட்டான் அப்படியே அவடத்தில் காறூன்தண்ணீ
ர்மேலேஆண்டவனுத்தரவின்படிக்குநிறுத்தினார்பின்பு அந்தநூனெ
ன்கிறமீனானது காறூனிடத்திற்குவந்து தரிபட்டுநின்றது - அப்போ
துகாறூனென்பவன் மீன்வயிற்றிலிருக்கும் யூனுசுநபியைக்கேட்டா
ன் நூனென்கிற மீன்வயிற்றிலிருக்கிறவரோ நீர்யார்உம்முடைய பெ
யரென்னவென்று கேட்டான்யூனுசுநபிசொன்னார்

நான் மைத்துல் முக்கத்திசுப்பட்டணத்திலுள்ளவன் மத்தாவு
டையமகன்என்பேர்யூனுசென்றுசொன்னார்-அப்போதுகாறூன்கே
ட்டான்நீரிந்தமீன்வயிற்றில்வந்தகாரணமென்னவென்றபோதுயூனு
சுநபிசொன்னார்-முன்னடந்தசங்கதிகளின்விபரத்தைத் தெரியப்படு
த்திஇதனுலிந்தமீன்வயிற்றிலானேனென்றுசொன்னார்- இன்னம்அல்
லாகுசுபுகானகுவத்தஆலாவுடைய கற்பனைப்படி.இப்படியாயிற்றெ
ன்றார்அப்போது காறூன்கேட்டான் மூசாநபிகயாத்தாகவிருக்கிறா
ரோவென்றுகேட்டபோதுயூனுசுநபிசொன்னார் அவர்மவுத்தாகியெ
த்தனையோகால்மாயிற்றென்றார் பின்னும்காறூன்கேட்டான் ஹாறூ
ன் நபிகயாத்தாகவிருக்கிறாரோ வென்றபோது யூனுசுநபி சொன்
னார் அவரும்மவுத்தாய் எத்தனையோகாலமாயிற்றென்றார்-இன்னும்
கேட்டான் மூசாநபியுடைய தங்கையாகிய உம்முகுல் தூமென்கிற
பெண்பிள்ளைகயாத்தாகயிருக்கிறார்களோவென்றான் அவர்களும்மவு
த்தாய்ப் போனார்களென்று யூனுசுநபி சொன்னார்.
அப்போதுகாறூனென்பவன் இந்தச்சேதிகளைக்கேட்டுமெத்த

வும் துயரப்பட்டழுதான் அப்போது அல்லாகு சுபுகானகுவத்தஆ லாகாறூனைத்தண்ணீரிற்றாழ்த்தும் மலக்குடனேசொன்னான் - இனி மேல்காறூனைத்தாழ்த்தவேண்டாமவன் மூசாநபியையுமவருடற்பிற ப்புகளையும் ஹாறூன்நபியையுமிவர்கள் மவுத்தானசேதியைக்கேட்டு அவர்களுக்கிரங்கிஅழுதானே அதற்காகவேண்டிநானவன்மேலே கி ருபையானேன் இன்றுமுதலவனைத் தாழ்த்த வேண்டாம் தண்ணீரி ன்மேலேதானே நிறுத்திவையுமென்றுசொன்னான் அந்தப்படியே கா றூனென்பவனை கியாமத்து நாள்வருமளவு மந்தத் தண்ணீர்மேற்று னே நிறுத்திவைக்கப்பட்டது கியாமத்துநா ளடுக்கும்போதுஅல்லா கு சுபுகானகுவத்த ஆலாவுடைய ஏவலுண்டாம் காறூனைத்தீவரமாக த்தாழ்த்தச்சொல்லி அப்படியேஅந்தமலக்குத்தாழ்த்திவிடுவார் அ வன்றனை தங்குமளவும் கியாமத்துநாளுமுடியும் காறூனவன்றனை தங்குவான் அது அப்படியிருக்க யூனூசுநபியை நூனென்கிற மீ னானது நாற்பதுநாள் வரையிலும் கடலெல்லாங்கொண்டு திரிந்து நாற்பதுநாளுஞ்சென்றபின்பு அசருடையநேரத்திலேகரையிற்கொ ண்டுவந்துதள்ளிவிட்டது-அதுதானுக்கும்அசறுதொழுதார் இன்னம் சிலகித்தாபுகளில் நாற்பதுநாளைக்குக் குறைவாய் மீன்வயிற்றிலிருந் தாரென்றும் வந்திருக்கின்றது மூமின்களுக்கெல்லாம் ராஜாவாகி யஉமறுகத்தாபுஇடத்தில் மூன்றுபாதிரிகள்வந்துகேட்கிறார்கள் - ஒ ருகபுறுனதுஒருமையத்தைச்சுமந்துகொண்டுதிரிந்தது-அஃதென்ன வென்றுகேட்டபோது உமறுகத்தாபுறலியல்லாகு அன்குயோசித்து ப்பார்வையிட்டுச்சொல்லமாட்டாமலிருந்தார்கள் அப்போதுபாதி ரிகள்கேட்டார்கள் - உங்களிசுலாமார்க்கம் பொய்யென்றும் உங்கள் முகம்மது பொய்யென்றும் சந்தேகமில்லை அதைநாங்கள்சொல்லு வோமாயில் நீங்களெங்கள் மார்க்கத்தில் வருவீர்களோவென்றார்கள் அதற்குஉத்திரவுகொடாமலிருந்தார்கள்- அப்போதுஅமீறுல் மூமி னீன்அலிறலியல்லாகுஅன்குஇந்தச்சமாச்சாரங்கேட்டு அவடத்திற்கு வந்தார்கள்வந்துபாதிரிகளைக்கேட்டார்கள் நீங்கள்கேட்டகாரியத்தை நாங்கள்சொன்னால் நீங்களெங்கள் மார்க்கத்தில் வருவீர்களாவென்று கேட்டார்கள் பாதிரிகள்நல்லதென்றுசொன்னார்கள்அப்போதுஅலி றலியல்லாகுஅன்குசொன்னார்கள் யூனூசுநபிமையத்துப்போலும்அ வரைவிழுங்கினமீனானது கபுறைப்போலுமாயிற்றென்றுசொன்னார் கள்உடனேஇரண்டுபாதிரிகள் இசுலாமானார்கள்இன்னுமொருவன்அ லிறலி யல்லாகு அன்கு அவர்களைக் கேட்டான் அசுகாபுல்க் ககுபுக ளுடையசமாச்சாரங்களைச் சொல்லவேண்டுமென்று கேட்டபோது ஆதியோடந்தமாய் ஒன்றும்விடாமற்சொன்னார்க ளப்போதவனுமி சுலாமாகிஅல்லாவுக்கும் அல்லாவுடையறசூலுக்கும் ஈமான்கொண்டு

லாயிலாகஇல்லல்லாகுமுகம்மதுற்றசூலுல்லாகியென்று கலிமாச்சொ
ன்னான் அதப்படியிருக்க யூனூசுநபியை மீனானதுகொண்டுவந்துக
ரையிற்கக்கிவிட்டபிறகு அவர் நடக்கமாட்டாமல் தவழ்ந்துமணலு
ள்ளவிடந்தேடிவந்தார் - அப்போது சூடுகடினமாய்ப்பொறுக்கமா
ட்டாமல்வருப்போது ஒரு பட்டமலாறின்மேற் சுரைக்கொடியான
து படர்ந்திருந்தது அந்தநிழலிலேபோயிருந்தார் அப்போதவருக்
குப் பசியுடைய கடினமாயிற்று அப்போது ஒருமான்வந்து சுரைக்
கொடியைத்தின்னும்போது அந்த மானுடைய மடிசுரந்திவருடை
யவாயிற்பால்பாய்ந்தது அந்தப்பாலைக்குடித்தார் இந்தப்படிநான்
குநாளும் அந்தமான்வந்துபால்கொடுத்தது ஐந்தாநாள்வந்து பால்
கொடுக்கவில்லை அந்தச் சுரைச்செடியும் வாடிப்போனதுபின்பு யூ
னூசுநபியெழுந்து நடக்கும்படியான சத்காரமுமுடலிலுண்டாயி
ற்றுயூனூசுநபியுடையமீனும்சாலிகு நபியுடைய ஒட்டகமும்உசைறு
நபியுடையகோவேறுகழுதையும் அசுகாபுல்க்கஃபிகளுடைய கிதமீ
றென்கிறநாயும் சுலையுமாநபியுடைய குதுகுதென்கிறகுருவியும் இ
சுமாயீல்நபியுடைய ஆடும்மூசாநபி காலத்திலுள்ளமாடும் சுலையுமா
நபியுடைய சிற்றெறும்பும் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்ல முடை
ய சிலந்திப்பூச்சியும் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களு
டைய புறுக்கும் - இதுகளெல்லாம் சுவர்க்கம்புகுதும் சுரைவாடிப்
போனதும் மான்வராததும் பசிஅகோரமானதுங்கொண்டு சலித்த
ழுதார் அப்போது அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவுடைய ஒகிவந்தி
றங்கினது யூனூசே மானுஞ்சுரையுமென்னுடைய ஹக்காயிருக்கும்
நீர் சிறுபிள்ளைபோல நடக்கக் குவ்வத்திலாமையால் சுரையு மானு
முண்டாக்கினேன் இப்போ துஉமக்குப் பெலனும் சக்தியுமுண்டா
யிற்றே ஆனபடியால் மானையுஞ் சுரையையும் விலக்கிக்கொண்டே
னென்றான் பின்பு யூனூசே நீனவாயென்கிற பட்டணத்திலுள்ள நூ
றாயிரங்குடி மனிதரையும் நெருப்பினாலே கொல்லச்சொல்லி மெத்
தவும் வருந்திக் கேட்டீரோயென்று அல்லாகுசுபுகானகுவத்த ஆலா
கேட்டான் அப்போது யூனுசுநபிசொன்னார் ஆண்டவனே அவர்க
ள் ஈமான்கொண் டிசுலாமில் ஒருவரும் வரமாட்டோமென்றதால்
அவர்களை நெருப்பையனுப்பிக்கொல்லச்சொன்னேனென்றார் அப்
போது அல்லாகுசுபுகானகு வத்தஆலா திருவுளமானான் யூனூசே நீ
ர் நீனவாயென்கிறபட்டணத்தைவிட்டுப் போனபின்பு அந்தவூரிலு
ள்ளமனிதர்மேலே நெருப்பையிறக்கினேன் அவர்கள் நெருப்புடை
யஅக்கினிபொறுக்கமாட்டாமல் வருத்தங் கடினமானபடியால் உம்
மைத்தேடிப் புறப்பட்டார்கள் உம்மைக் காணாதபடியால் உமக்கு
ஈமான்கொண் டிசுலாமானார்கள் பின்பு அந்தநெருப்பு மழையைத்

தண்ணீர்மழையாக்கிவிட்டேன் இந்தச் சமாச்சாரமெல்லாம் இபுலீ
சுமக்குச்சொல்லாமலும்மைபித்நாவில்வருத்தியுமக்குநமக்கும்பொ
ல்லாங்குண்டாகவேண்டுமென்று நீனவாயென்கிறபட்டணத்தில் நல்
லமழைபெய்து எல்லோருஞ் சுகமேயிருக்கிறார்க ளென்றுசொன்ன
ன் அந்தச்சொல்லை நீ ருண்மைகொண்டு நம்முடன் கோபமாய்ப்
போனபடியால் உம்மைமீனுடைய வயிற்றிற்சிறைவைத்தேன் ஐயூ
புநபியுடைய பெண்சாதியான றகீமாவைக்கொண்டு படுதாறுபேசி
னனே அப்போது ஐயூபுநபிஅதை மெய்கொள்ளாமல் நீஇபுலீசாக்
கு யிங்கேவராதேயென்றுசொல்லிவிட்டார் இன்னும் இபுறாகீம் ந
பி கொறுபான்கொடுத்தது இசுமாயீல்நபியென்றும் இசுகாக்குநபி
யென்றும் சொல்லப்படுகிறது குத்பாகித்தாபிலே இசுமாயீல்நபி
யென்றுசொல்லிவருகுது. இன்னம் புரூசென்கிறகித்தாபிலும் இன்
னம் பலபல கித்தாபிலும் இசுகாக்குநபியைக் கூட்டிக்கொண்டு கத்
தியைக் கையிற்பிடித்துக்கொண்டு பிள்ளையைக் கொறுபான்கொடுப்
போமென்றுமலையிலேறிப்போம்போது இபுலீசுசாறுநம்பிராட்டி
யாரிடத்தில் வந்துசொன்னான் சாறுவேஉம்முடையமகன் இசுகாக்
கை அவருடையதகப்பனார் இபுறாகீம்நபி மலையிற்கொண்டுபோய்
க்கொலைபாதகமாகக் கழுத்தையறுக்கப்போகிறார் அதை நீயறியவி
ல்லையோவென்றுகேட்டான் அப்போதுசாறுநம்பிராட்டியார்சொ
ன்னார் என்புருஷனானவர் தின்மையானகாரியம்ஒருகாலத்திலும்செ
ய்கிறதில்லை நீஇபுலீசாயிருக்குமென்னை யென்புருஷனுக்கு மாறு
செய்யச்சொல்லிகலைக்கவந்தாய் நீ என்னிடத்திற்குவராதே யென்
றுதுரத்திவிட்டார்கள் இபுலீசுக்கு வழிப்படவில்லை ஒருபெண்பிள்
ளையானது இப்படிக்கொத்த வுறுதியோடிருக்க யூனுசேநீர் ஆண்பி
ள்ளையாகவிருந்தும் நபியாகவும்றசூலாகவுமிருந்தும் இபுலீசுடைய
கலைவிலகப்பட்டு அவன்சொல்லைக்கேட்டு என்னுடனே கோபமாய்
உம்முடைய முகம்போனபோக்கேபோனீர் அந்த மீன்வயிற்றினு
ள்ளிருக்கும்போது முன்சொன்ன கலிமாவை வழக்கமாக ஓதின
படியால் உம்முடையகுற்றத்தைப் பொறுத்தேன், ஆதம்அலைகிஸ்ஸ
லாமும் கவ்வா அலைகிஸ்ஸலாமும்இபுலீசுக்கு வழிப்பட்டு அவன்க
லைவிலகப்பட்டபடியால் கவ்வா அலைகிஸ்ஸலாமை ஜித்தாவென்கிற
கடற்கரையி லெடுத்தெறியப்பட்டு முந்நூற்றுச்சின்னம்வருஷம் அ
ழுதுகொண்டிருந்தார் ஆதம் அலைகிஸ்ஸலாம்சறன் தீபென்கிறசயி
லான்மலையில் முந்நூற்றுச்சின்னம்வருஷம் அழுதுகொண்டே நின்
றார்அப்போது அவரை மான்களானது வந்து வினவிக்கொண்டது
ஆதம்அலைகிஸ்ஸலாம் சந்தோஷமாக மான்களுடைய முகத்தைத்த

ம்முடைய கையினாலேதடவினார் அந்தமான்களெல்லாங்கஸ்தூரிவா
சமாயிற்று அதுகண்டு காட்டிலுள்ளமான்களெல்லாம் அப்படிமண
மாகவேண்டுமென்று அவனைத் தேடிவந்து மினவிக்கொண்டது- ஆ
திகளையும் தம்முடைய கையால் தடவினார் அந்தமான்களுக்குவாச
முண்டாகவில்லை ஆதம்அலைகிஸ்ஸலாம் ஒரு ஆயத்தையோதிக்கொண்
டேயிருப்பார் அந்த ஆயத்தையோதின பறக்கத்தால் அவருடை
யபாவத்தைபொறுத்து கவ்வா அலைகிஸ்ஸலாமுடனே கூட்டுதவி
செய்தேன் அவர் பிள்ளைகளைப்பெற்றுப் பலுகினதுபோல உம்மு
டையபெண்சாதிபிள்ளைகளுடன் உம்மையுங் கூட்டுவேனென்று ஆ
ண்டவன்சொன்னான் இன்னும் சொல்லுவான் யூனுசேஉம்மைநீன
வாயென்கிற பட்டணத்தி விராஜாமுதலான ஆண்பெண்ணடங்கலு
மூனுறக்கமில்லாமல் எல்லாத்தையுமறந்து உம்முடைய ஆசையே
பெரிதாய்த்தேடித் திரிகிறார்கள் அந்தவூருக்குநீர்சீக்கிரம்போமென்
று அல்லாகுசுபுகானகு வத்தஆலா உத்திரவுகொடுத்தான் யூனுசுநபி
சரீரமெல்லாம் புளகித்து உலுச்செய்து அசறுநான்கு றக்ஆத்
துத்தொழுதார் முந்தின றக்ஆத்து இருளைவிட்டும் சலாமத்துப்பெ
ற்றதற்காக சுக்கூறுகவும் இரண்டாவது றக்ஆத்துமுந்தமீனுடைய
வயிற்றிருளைவிட்டு சலாமத்துப்பெற்றதற்காக சுக்கூறுகவும் மூன்
றும் றக்ஆத்து இரண்டாவது மீனுடைய வயிற்றிருளைவிட்டு சலா
மத்துப்பெற்றதற்காகசுக்கூறுகவும் நாலாம்றக்ஆத்து அல்லாகுசுபு
கானகுவத்தஆலா தம்முடையபாவங்களைப்பொறுத்ததற்காக சுக்கூ
றுகவும் தொழுதார் அப்படிப்போலஇபுறுகீம்நபி-தம்மைநமறூது
இடங்கண்ணில்வைத்தெரித்த நெருப்பில் விழும்போது நான்குப
லாய்வந்து தீர்ந்ததற்காகவும் நாலுறக்ஆத்து அல்லாகுசுபுகானகுவ
த்தஆலாவுக்குசுபுகூறுகத்தொழுதார் ஈசாநபி மகரியுத்தொழுதார் த
ம்மைநசுறுனிகள் அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவுடைய மகனெ
ன்றுசொல்லப்பட்டதற்காக ஒருறக்ஆத்துத் தம்முடையதாயார்மறி
யம் அலைகிஸ்ஸலாமை அல்லாகுசுபுகானகுவத்தஆலாவுடைய பெண்
சாதியென்றதற்காகவும் மூன்றும்றக்ஆத்து அல்லாகு சுபுகானகுவத்த
ஆலாவுக்கு சுக்கூறுகவும் இந்தப்படிமூன்று றக்ஆத்துத்தொழுதார்
சஹறுபுநபியுடையமகளார் சபுறுநம்பிராட்டியார் பிள்ளையுண்டா
யிருக்கிறபோது மிசுறுக்கு அழைத்துக்கொண்டுபோகிறவழியில் இ
ஷாவுடையநேரத்திலிருளும் காற்றும்மழையுமாக விருந்தது - அப்
போதுபெண்சாதிக்குக்கருப்பநோக்காடுகண்டு பிள்ளையையும்பெற்
றார்கள்-இந்தப்படிநான் குப்பலாய்வந்துநீங்கி சலாமத்தானதற்காக
அல்லாகுத்த ஆலாவுக்குசுக்கூறுக நான்குறக்ஆத்துஇஷாத்தொழுகை
தொழுதார் ஆதம்அலைகிஸ்ஸலாம் தாம் பூலோகத்திலேவந்திறங்கின

போதுபஜ்ருடையநேரம்அப்போதுநினைத்தார்- இதுவும்சுவர்க்கத்
தைப்போலென்று பின்பு பொழுது கிளம்பிச் சூடானதுகொண்டு
அவருடைய மேனியெல்லாம்கருகிப்போனது.

அப்போது ஆதம்அலைகிஸ்ஸலாம்மெத்தவும் விசாரமானார் பொ
ழுதுவிடிந்து பனிரண்டுசாஅத்தானபிறகு பொழுதடைந்து பூலோ
கமெல்லாமிருளாயிற்று அப்போதுஇவரிஃதென்னபலாயாகவிருக்கு
தென்றுமெத்தவும்துக்கித்தழுதார்- பின்புபொழுதுவிடிந்துபூலோக
மெல்லாம்வெளிச்சமாயிற்றுஇருளையும்வெளிச்சத்தையும்கண்டு இரு
ளுக்கொருறக்ஆத்தும்வெளிச்சத்துக்கொருறக்ஆத்தும்சுபுகுதொழு
தார்தொழுதபின்புஆதம் அலைகிச்சலாமுடையமேனியெல்லாம் ஒளி
வானது யூனூசுநபி நீனவாயென்கிறபட்டணத்தைத் தேடிநடக்கும்
வழியில்-ஆனை-புலி-கரடி-குலவும் காடுகளெல்லாய்கடந்தார்-அக்காட்
டிலுள்ள மிருகங்களெல்லாம் அல்லாவுடைய நபியே நீ ஏங்கள்மு
துகின்மே லேறிக்கொள்ளுமென்றுசொல்லியது - யூனுசுநபிசொன்
னு ஏனக்குநடக்க சக்தியிருக்கும்போது நானுங்கள் முதுகிலேற
மாட்டேனென்றுநடக்கும்போதுஒருசிற்றூரைக்கண்டார்- அந்தஊ
ரிற்போம்போது ஒருகுயவனுனவன் ஊருக்குப்புறத்தே மண்ணெ
டுக்கிறான் அவனிவருடைய முகக்குறுவுதல்கண்டு தன்னுடைய வீட்
டிலழைத்துப்போயிவருக்குப்பசியாற்றி தாகத்துக்கும்கொடுத்துக்
களைதெளிந்தபின்பு நீரார் உம்முடைய பெயரென்னவென்று கேட்
டான் அப்போதுசொன்னார் நான்மத்தாவுடையமகன் என்பெயர்
யூனுசுநபி நான் நீனவாயென்கிற பட்டணத்தி லுள்ள மனிதரைத்
தேடிப் போகிறேனென்று சொன்னதைக்கேட்டு அந்தக்குயவனவ
ன் அறியாமற்போனான் அன்றிராத்திரியும் அவன்வீட்டில்விடுதியா
கவிருந்தார் அப்போது அல்லாகுசுபுகானகுவத்தஆலாவுடைய ஒகி
வந்தது - யூனுசே நீர்பொழுது விடிந்தபின்பு அந்தக்குயவனுடன்
சொல்லும் நீ செய்தசட்டிபானையெல்லாம் உடைத்துப்போடென்
று சொல்லச்சொல்லிவந்தது - யூனுசுநபிகேட்டார் ஆண்டவனே
அவன் மெத்தவருத்தப்பட்டு சட்டிபானைகளைச்செய்து விலைக்குவிற்
று ஜீவனஞ்செய்வதற்காகச் செய்ததை நான் உடைக்கச்சொன்னால்
அவனுடைப்பார்ரே வென்றார் அப்போது ஆண்டவன் திருவுள
மானான்யூனுசேநான்சொன்னகாரியத்தைத் தள்ளாமற்சொல்லுமெ
ன்றான் யூனுசுநபிநல்லதென்று பொழுது விடிந்தபின்பு நான்பய
ணமாக விருக்கிறேனென்றார் அப்போது குயவன் ஒஜீபனம் கொ
டுத் தனுப்பி வைக்கும் போது யூனுசுநபி ஆண்டவன் சொன்ன
சொல்லைச் சொல்லாமற்போகிறது நல்லதல்லவென்று நினைத்துக்கு

யவனை அழைத்துச்சொன்னார் இன்றிராத்திரி எல்லாவற்றையும் படை
த்தாளுகிறநாயன் ஒருகாரியம் உன்னுடன்சொல்லச்சொன்னார் அஃ
தாவது- நீசெய்துவைத்திருக்கும் சட்டிபானைகளை யுடைத்துப்போ
டச்சொல்லி யுன்னோடே சொல்லச்சொன்னானென்றார் இதைக்கேட்
டமாத்திரத்திற் குயவன்சொல்லுவான் ராத்திரியும்விடியக்காலமும்
உனக்கு விருந்துகொடுக்கிறதற்காக எனக்குச்சகாயம் நான்செய்தச
ட்டிபானைகளையெல்லா முடைத்துப்போடச்சொன்னாயென்று பிட
ரியி லேந்தடியடித்துப் பயித்தியக்காராவென்று பிடித்து வெளியிற்
றள்ளிவிட்டான் யூனுசுநபி நீனவாயென்கிறபட்டணத்திலே பட்ட
அடிக்குக் கொஞ்சங் குறைவாகயிருந்தது இப்போது அந்தக்குறை
வுநிறைவேறியதென்றுநினைத்து அதிகவருத்தத்தோடு போகும்போ
து அல்லாகு சுபுகானகுவத்தஆலாவுடையசத்தமுண்டாயிற்று யூனூ
சே குயவன் உம்மை யென்ன செய்தானென்று கேட்டபோது யூ
னுசுநபிசொன்னார் நாயனே நீ சொன்னசொல்லை அவனுடன்சொ
ன்னேன் அவனென்னை அடித்துபயித்தியக்காரனென்று பிடரியைப்
பிடித்து வெளியில் தள்ளிவிட்டானென்றார் அப்போது ஆண்டவன்
கேட்டான் யூனுசே யிம்மாத்திரம் சட்டி பானையை யுடைக்கச்சொ
ன்னதற்காக அவன் உம்மைஅடித்துப் பிடரியைப்பிடித்து வெளியி
ற்றள்ளிவிட்டானே நான்படைத்தஅடியார்களை மட்டில்லாப்படை
ப்புகளை நெருப்பையிறக்கி அழித்துப்போடென்றுசொன்னீரோஅத
ற்காக எத்தனையடி அடிக்கவேண்டுமென்று கேட்டான் அப்போது
யூனுசுநபி ஆண்டவனே எல்லாம் உன்னுடையவல்லப்பங்கொண்டா
யிருக்குமென்று சொன்னார் பின்புநடந்து அப்பாற் போம்போது
ஒருஆண்பிள்ளையும் ஒருபெண்பிள்ளையும் வழியிலே நிற்கக்கண்டார்
அந்த ஆண்பிள்ளையானவன் யூனுசுநபியென் றறியாமல் அடா மனி
தனே இந்தப்பெண்பிள்ளையைபயித்துல்முகத்திசுப்பட்டணத்திலா
வது நீனவாயென்கிறபட்டணத்திலாவது அழைத்துக்கொண்டுபோ
ய் ஷிருயாநபியென்கிறவரிடத்தில் விட்டால் உனக்கு இருநூறுகள
ஞ்சியப்பொன் தருகிறேனென்றபோது யூனுசுநபி அடாமனிதனே
அந்தப்பெண்பிள்ளையெங்கே நான்பார்க்கவேண்டும் அவள் எந்தவூ
ரிலிருந்தவள் அவளுன்னிடத்திலெப்படிவந்தாளென்று கேட்டபோ
து அவன்சொன்னான் எங்களுடைய ராஜாவானவன் வேட்டையா
டப்போம்போது இந்தப்பெண்பிள்ளையானவள் ஒருஆற்றங்கரையி
லிருந்து அழுதுகொண்டிருக்கும்போது எங்கள்ராஜாகண்டுபெண்
பிள்ளையே நீயாரிந்த ஆற்றங்கரைக்கு எப்படி வந்தாய் உன்னையிங்
கே யாரழைத்துக்கொண்டுவந்து விட்டுப்போனாரென்று கேட்டான்
அப்போது இந்தப்பெண்பிள்ளை சொன்னாள் என்தலைவிதி யிந்தவனு

ந்தரத்திலே யென்பிள்ளைக ளிரண்டுமென்புருஷனும்நானுமாக இந்த ஆற்றங்கரையில்வந்து ஓடமில்லாமலிருந்ததும் முன்னடந்தசங்கதிகளையும் தெரிவித்தாள் என்புருஷனானவர் என்னையும் இளையபிள்ளையையு மிந்தக்கரையில்வைத்துவிட்டு மூத்தபிள்ளையை அக்கரையிற்கொண்டுபோய்வைத்துவிட்டு திரும்பவும்வந்து இளையபிள்ளையையெடுத்துக்கொண்டு நடுஆற்றிற்போகும்போது அக்கரையிலிருந்தபிள்ளையை ஓநாய்பிடித்துக்கொண்டு போகக்கண்டு நான் சத்தமிட்டேன் அந்தஎக்கத்தா லிளையபிள்ளையையுங்கைநழுவவிட்டார் அந்தப்பிள்ளையைக்கீழாறடித்துக்கொண்டுபோய்விட்டது அப்போதக்கரையிலேறி அந்தப்பிள்ளையைக் கொண்டுபோன ஓநாயைத்துரத்திக்கொண்டுபோனார் திரும்பியும் வந்தாரில்லை நான் புருஷனையும் பிள்ளைகளையு மிழந்துவிட் டிப்படிஅந்தரத்தில்நின்று மயங்கி அழுகிறேனென்றாள் இந்தச்சேதியை எங்கள்ராசாவும் மந்திரிமாரும் வாய்விட்டழுது ராஜாவிந்தப்பெண் பிள்ளையைத் தன்னுடைய பல்லாக்கிலேற்றிவிட்டு ராஜா குதிரையின்பேரி லேறிக் கொண்டு பல்லாக்கை முன்னர் நடத்திக்கொண்டுபோனான் யகுகூபு நபியுடைய மாதுலர் லாயானென்கிறவரிருந்த நஜிறானென்கிறபட்டணத்திற் கடுத்த குஸ்த்தந் தீனென்னு மிராச்சியத்திலிருந்த தவுலீலென்னு மிராஜாவுடையமகள் பறுபசென்கிறவளை அந்தாக்கியாராஜாவுடைய மகன் வேட்டையாடபோனவிடத்தி லவளொருமலைப் பொதும்பிலிருக்கக்கண்டு தன்னுடைய தண்டிகையி லேற்றிக்கொண்டு போனது போலவிந்தப்பெண்பிள்ளையை எங்கள்ராஜாயெடுத்துக்கொண்டுவந்து தன்னுடைய மாளிகையில் வைத்து நல்லவார்த்தைகளைச் சொல்லி ஆடையாபரணங்களைக்கொடுத்து சப்ரமஞ்ச கூடத்தில் வைத்து இப்படிச்சிறப்பாயிருக்கும்போதுராசாஒருநாள்இந்தப்பெண்பிள்ளையினிடத்தில் கிட்டப்போகும்போது உடம்பு அசந்துசுரணை தெரியாமலிருந்தான் சாறுஅம்மா அவர்களிடத்தில் நம்றூ தென்கிறவன் அடுக்கும்போது எப்படியாயிற்றோ அதுபோ லிவனுக்குமானது ஆசியா அம்மாஅவர்களை பிருஊன் அடுக்கும்போது அவனுக்கு எப்படி ஆனதோ இவனுக்கும் அப்படியானது இன்னப்றையாமிபுனுல் ஒளீதென்னும் ராசாதுரங்கொடுத்த அசிசென்னு மந்திரி மகறிபு ராச்சியத்திலுள்ள ராஜாவுடையமகள் சுலைகாவுடன் அடுக்கும்போதுஎப்படியாயிற்றோஅதுபோலஉங்கள்ராஜாவுக்குமானதுஆனதால் அவன்மெத்தவும்பயந்து இந்தப்பெண்பிறந்தவ ளிடத்துக்கு வந்து உண்டான சங்கதிகளையெல்லாம் சொல்லச்சொல்லிகேட்டு மெத்தவுங் கிருபையாக வெனக்குத்தன்யாவிலும் ஆகிறத்திலும் எனக்கு உடன்பிறந்தாளென்று உண்மைகொண்டேன் எனக்குஉடம்

புஷிபாவாகும்படிக்கு அல்லாகுசுபுகானகு வத்தஆலா விடத்திலே
துஆச்செய்யென்றுசொன்னான் அப்போதுஇந்தப்பெண்பிள்ளையா
னவள் துஆச்செய்தாள் உடனேராஜாவுக்கு உடம்புஷிபாவாச்சுது
பின்பு இந்தப்பெண்பிள்ளை தன்னுடையமார்க்கத்தின்படி வணங்கி
க்கொண்டிருந்தாள் அப்போதுராஜாவானவன்சொற்பனங்கண்டா
ன் அந்தச்சொற்பனமாவது யூனூசுநபியுடையபெண்சாதியை அவ
ரிடத்திற்கு நீ அனுப்பிவிட்டால் நீசுகம்பெறுவாய்அப்படிநீஅனுப்
பாவிடில் நீகலாக்கியத்தாகப்போவாயென்று ஒருமனிதர்வந்துசொ
ன்னதுபோலக்கண்டான் உடனேதிடுக்கிட்டுமுழித்து என்னைஅழை
த்துச் சொன்னான் நீ எனக்குமெத்தவும் விசுவாசி உன்னைப்போல
விசுவாசி ஒருவருமில்லையென்று நான்திடனாக அறிந்தேனென்று இந்
தப்பொன்னையுமென்கையிலேதந்து இந்தப் பெண்பிள்ளையையழை
த்துப்போய் மவுத்தாவுடையமகனார் யூனுசென்கிறவர்பைத்துல்முக
த்திசுப்பட்டணத்தி லிருக்கிறார் அவரிடத்திற்கொண்டுபோய் விட்டு
விடென்றுசொல்லி என்னைஅனுப்பிவைத்தான் இப்போது எனக்கு
கூடாமையால் நீ அழைத்துக் கொண்டுபோய் யூனூசு நபியிடத்தி
லொப்பிவித்துப்போடென்றுசொல்லி அந்தப்பொன்னையுங் கொடு
த்து அந்தப்பெண்பிள்ளையையுமிவரிடத்திலொப்பிவைத்து விட்டா
ன் அப்போது யூனூசுநபி அந்தப் பொன்னையும் வாங்கிக்கொண்டு
பெண்பிள்ளையையும் கூட்டிக்கொண்டு நடந்து போம்போது நி
னைத்தார் அல்லாகு சுபுகானகு வத்த ஆலாமுன்னாலே நமக்குச்சொ
ன்னமொழிபோலப் பெண்சாதியைக் கூட்டிவைத்தான் இன்னம்பி
ள்ளைகளைநினைத்து அழவேண்டா மவர்களுக்கு ஒருகுறைவுவராமல்
அவர்களைக்கூட்டிவைப்பேனென்று சொன்னதுபோல அதையுங்கூ
ட்டுதவிசெய்வானென்றுசுக்கூர்செய்தார்பின்பு ஒருமரநிழலிற்போ
யிருந்து யூனூசு நபிசொன்னார் ஓ பெண்பிள்ளையே உன்முகத்தி லி
ருக்கிற புறுக்காவையெடுத்துப்போடுநானுன்முகத்தைப்பார்க்கவே
ண்டுமென்றார் அப்போது அபீபா நம்பிராட்டியார்கேட்டார்கள்
மனிதனே நீரெப்படிஎன்முகத்தைத்திறக்கச்சொல்லுவீர் என்னுடை
ய புருஷன் மத்தாவுடைய மகனாரிடத்திற் கூட்டிக்கொண்டு போ
ய்விடவேண்டுமே யல்லது இப்படி யிடைவழியிலே தனித்தவிடத்தி
லே சதிமானஞ் செய்வது தகாதென்றுசொன்னார். அப்போதுயூனூ
சுநபி பெண்சாதிக்குச் சில அடையாளங்களைச் சொல்லிக்காண்பிவி
த்தார் உடனே புறுக்காவைத்திறந்து அவருடைய பாதங்களிலே வி
ழுந்து இரண்டுகண்ணிலும் வைத்து முத்திக்கொண்டழுதார் அப்
போது யூனூசுநபி பெண்சாதியுடைய தலையைத்தாங்கி யெடுத்து
அழவேண்டாமென்று ஆதரித்து அழுகையைமாற்றி அல்லாகு சுபு

காணகு வத்தஆலாவுடைய திருவுளப்படியே நமக்குவந்து சமைந்
தது அதற்குதாம்சபூறுசெய்யவேண்டுமேயல்லது நம்மாலாவதொ
ன்றுமில்லையென்றுதாம்பட்டபாடெல்லாம்பெண்சாதியுடன்சொல்
லிக்கொண்டு நடக்கும்போது அந்தவழியிலே தங்களுடைய மூத்த
பிள்ளையானது ஆடுமேய்த்துக்கொண்டிருக்கக்கண்டார்கள் — ஓநா
யெடுத்துக்கொண்டுபோனபிள்ளையிவர்தானென்று ஓடிப்போய்க்க
ட்டியணைத்து இருவருமுத்திக்கொண்டார்கள் அப்போது அந்தப்
பிள்ளையானது இவர்களை நீங்களாரென்றுகேட்டபோது இவர்களிரு
வருஞ்சொன்னார்கள் மகனே நாங்களுன்னுடைய தாயும் தகப்பனு
ம் நீ எங்களுடைய மூத்தபிள்ளையென்று சொன்னார்கள் அதைக்கே
ட்டுப் பிள்ளையானது ஆச்சரியப்பட்டு நீங்கள் என்தாய்தகப்ப னிட
த்தில்வந்து சொல்லுங்களென்று இவர்களை அழைத்துக்கொண்டு ஆ
டுகளையுந்திரட்டிக்கொண்டு இடைச்சேரியிற்புகுந்தார்கள் அப்போ
திவனைவளர்த்ததாயும் தகப்பனும்இவர்களாரென்று கேட்டபோது
அந்தப்பிள்ளைசொன்னது இவர்களாரோதெரியாது நான்காட்டிலா
டுமேய்க்கும்போது இவர்கள்வந்தென்னைக்கட்டிஅணைத்து முத்தமி
ட்டுத் தங்களுடைய பிள்ளையென்று சொல்லுகிறார்களென்று சொ
ன்னார் அப்போதுயூனுசுநபி இடத்தில்வந்து வளர்த்ததாய்தகப்பனி
வர்களைக் கேட்குகின்றார்கள் நீங்களுங்களுடைய பிள்ளையென்கிறீர்
களே எப்படி யுங்கள் பிள்ளை யெவ்வகையாக வுங்கள் பிள்ளைபோன
விதமும் எனக்குத் தெரியச்சொல்லவேண்டுமென்று இடையனானவ
ன்கேட்டபோ தவர்கள் சொல்லுவார்கள் தாங்கள் பயித்துல்முக்கத்
திசைவிட்டுப் புறப்பட்டமுதல் அவ்வல்தொடுத்து ஆகிறளவுந்நடந்
தசமாச்சாரமெல்லாம் சொன்னார்கள் இடையனானவனிதெல்லாமெ
ய்தான்நான்காட்டிலாடுமேய்க்கும்போதுஇந்தப்பிள்ளையையொரு
ஓநாய் கழுத்திலேற்றிக்கொண்டுவந்து என்முன்னே யிப்பிள்ளையை
யிறக்கிவிட்டுசொன்னது இப்பிள்ளையானது யூனுசு நபியுடையபிள்
ளையாயிருக்கும் யூனுசுநபியை நீர் கண்டா லிந்தப்பிள்ளையை யவரி
டத்தி லொப்புவித்துப்போடென்றுசொல்லிவிட்டுப்போனது அது
முத லிதுவரையில் பிள்ளையை வளர்த்துக்கொண்டு யூனுசுநபி வரு
வாரென்று வழிபார்த்துக்கொண் டிருக்கிறேன் இப்போதுதங்களை
க்கண்டேன் உங்கள் பிள்ளையை நீங்கள் சுகமா யழைத்துக்கொண்டு
போங்களென்று விருந்துங்கொடுத்து வழிக்குச் செலவு சவாதாவுங்
கொடுத்துப் பிள்ளையையுங் கூட்டி யனுப்பிவைத்தான் பின்புதாய்த
கப்பனுடன் பிள்ளையையு மழைத்துக்கொண்டுநடக்கும்போதுசில
தூரம்போனபின்பு ஒருகுதிரையின்பேரில் அந்தக்குதிரைக்காரன்பி
ன்னும் யூனுசுநபியுடைய இளையபிள்ளையை முன்வைத்துக்கொண்

டுவரக்கண்டு யூனுசுநபியும் பெண்சாதியும் பதறியோடிப்போயிது வெங்கள்பிள்ளையென்று கீழேயிறங்கிக்கட்டித்தழுவி மார்போடணைத்து முத்தமிட்டுக்கொண்டார்கள் அப்போதுபிள்ளையைக்கொண்டு வந்த குதிரைக்கார னிங்களாரென்றுகேட்டான் அப்போது இவர்கள் சொன்னார்கள் நாங்களிந்தப்பிள்ளையினுடைய தாய்தகப்பனென்ற போதுஅவனிவர்களுடையசமாச்சாரங்களைக்கேட்டான்அப்போது இவர்கள் அவ்வல்தொடுத்துஆகிறளவுஞ் சொன்னார்கள். அந்தக் குதிரைக்காரன்சொன்னான் நானொருநாள் ஆற்றில் வலைபோடப்போய் வலைபோட்டிருக்கும்போது அந்தவலையில் மீனுடன்கூடஇந்தப்பிள்ளையு மகப்பட்டது அப்போது இந்தப்பிள்ளைதண்ணீரைக் குடித்துப்பேச்சுமூச்சில்லாமலிருந்ததுஅப்போதுநானிந்தப்பிள்ளையினுடைய காலைத்தூக்கித் தலைகீழாய்ப் பிடித்தேன் வயிற்றிலிருந்ததண்ணீரெல்லாமோடிப்போனது பின்புவீட்டிற்கொண்டுவந்துவயித்தியரையழைத்து வயித்தியஞ்செய்து சௌக்கியமாயிற்று அதுமுதலிதுவரையில் வைத்துக்கொண்டிருந்தேன் இன்றிராத்திரியில் ஒருகனவுகண்டேன் ஒருவர்வந்து இந்தப்பிள்ளையை யூனுசுநபியிடத்தில் அழைத்துக்கொண்டுபோய் விட்டுவரச்சொல்லிச்சொன்னார்—அதுகண்டு நான்பதறிவிழுந்து இந்தப் பிள்ளையையெடுத்துக் குதிரைமேலேற்றிக்கொண்டு அவரைத் தேடிப்புறப்பட்டேன்உம்மைக்கண்டுசந்தித்தேன் உம்முடையபிள்ளையானால் மெத்தவும்நல்லதென்று பிள்ளையைக்கொடுத்துவிட்டு யூனுசுநபியையும்அவர்பெண்சாதி அமீயாநம்பிராட்டியாரையும் புகழ்ந்துகொண்டுபோனான் இவர்கள்நீனவாவென்கிறபட்டணத்திற் கடுக்கவந்தார்கள் நீனவாவென்கிற பட்டணமானது ஐறுஜீசுநபிகாபிர்களை இசுலாத்திலழைத்தமவுசாலென்கிறவூருக்கடுத்தாப்போலாயிருக்கும் அந்தவூரில்ஒருஇடையன் ஆடுமேய்த்துக்கொண்டிருக்கிறான் அவனை யூனுசுநபியு மவர்பெண்சாதிபிள்ளைகளுங்கண்டுதங்களுடையபசி கடினமாயிருக்கிறதை அவனுக்கு அறிவித்தார்கள் அறிவித்திந்த ஆட்டுமந்தையி லெங்களுக்குக்கொஞ்சம்பால்கறந்துகொடுப்பாயோவென்று கேட்டபோது இடையனவன்சொன்னான்.

நாங்கள் - யூனூசுநபிக்கும் அவருடைய நாயனுக்கும் ஈமான்கொண்டு அவரைக்காணமல்ஊணுறக்க மில்லாமலும் விசன மடைந்திருக்கிறோம் அப்படிக் கிருக்கும்போது நானுங்களுக்குப்பால்கறந்துதர வென்னாலாகாதென்று நீங்கள்போங்களென்றான்-அதுகேட்டவர்சொன்னார்யூனுசுநபியாகிறதுநான்தானென்றபோது இடையன் கேட்டான் அவருக்குப் பெண்சாதி பிள்ளைகளேது எங்களூரி

ஷ்வந்துமுப்பதுவருஷமாகவிருந்தார் எங்களையும்தம்முடையமார்க்கத்திலே அழைத்துக்கொண்டிருப்பாரென்றுசொன்னான்- அப்போதுயூனுசுநபி முன்னாலே நடந்த சிலசமாச்சாரங்களைச் சொல்லிக்காட்டினபோது இடையன் சொல்லுகிறான் யூனுசுநபியானாலிந்தஆடுகளைப்பேசிவைக்கவேண்டுமென்றான் உடனே ஆடுகளெல்லாமிவராகிறவர் அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவுடையதூதாங்கராக விருக்கும்யூனூசுநபியாகிறவ ரிவர்தா னென்று ஆடுகளெல்லாம்சாட்சிசொன்னதுகள் அப்போது அந்தஇடையனிவர்தான் யூனூசுநபியென்றுண்மைகொண்டுசாஷ்டாங்கமாகக்காலிலேவிழுந்தழுதான்பின்புயூனூசுநபி யிவன்தலையை யெடுத்துவிட்டுச்சொன்னார் நீனவா யென்கிறபட்டணத்திலுள்ளவர்கள் இசுலாமானதின் பிறகு நீ முந்தி யென்னைக்கண்டுசந்தித்தபடியா லென்னும்மத்துகளில் நீமுந்தினவனென்று சந்தோஷிப்பட்டார்-அந்தஇடையன்தக்ஷணமேகடைக்காலிற்பால்கறந்து நான்குபேருக்கும் குடிக்கக் கொடுத்தான் அவர்கள்வாங்கிக்குடித்தார்கள் - குடித்தபின்பு யூனுசுநபிசொன்னார் நீனவா யென்கிற பட்டணத்திற்கு நீமுன்னேபோய் யூனூசுநபிவந்திருக்கிறாரென்று அறியப்படுத்தென்று சொன்னார்- அப்போதிடையன்சொன்னான் நான்போய்ச்சொன்னால் அவர்களெல்லா மித்தனைதாளும் காணாமல் யூனுசுநபியை யிப்போ தெப்படிக்கண்டாயென்று கேட்பார்களென்றான் யூனுசுநபிசொன்னார் நீ ஆடுகளையோட்டிக்கொண்டுபோய்ச் சொல்லு அவர்களுன்பேச்சைப் பொய்யென்றாலிந்த ஆடுகளைச் சாக்ஷிசொல்லச்சொல்லு அதுகள்சொல்லும் நீபோவென்றுத்தரவுகொடுத்தார்.

நல்லதென்றுஆடுகளையும் ஓட்டிக்கொண்டு நீனவாயென்கிறபட்டணத்திற்குப்போய் நான் யூனூசு நபியைக்கண்டேனென்று தெருக்கள் தோறும் சொன்னான்-அப்போது நீனவாயென்கிறபட்டணத்தாரெல்லா மிடையன்சொன்னபேச்சைப்பொய்யென்றார்கள் - அப்போது ஆடுகளெல்லாம் வாய்திறந்து யூனூசுநபிவந்தது மெய்தானென்று சொல்லி லாயிலாகஇல்லல்லாகு யூனூசு றசூலுல்லாகியென்று கலிமாவும்சொன்னது அப்போதுநீனவாயென்கிற பட்டணத்திலுள்ள மனித ரெல்லாம் சந்தோஷமாய்உடலெல்லாம் பூரித்துராஜா மந்திரிகளும் குடிஜனங்களுந் திரண்டு யூனுசுநபியையழைத்துக்கொண்டுவரப்போனார்கள் அவரிருக்குமிடத்திற் போய்க்கண்டுசத்தத்துபாதங்களில்விழுந்தார்கள் - அவரையு மவர் பெண்சாதிபிள்ளைகளையுங்கண்டு சந்தித்து மெத்தவுமரியாதைசெய்து அழைத்து

க்கொண்டுபோனார்கள் ராஜாவானவன் தன்னுடைய மாளிகைக்கு
அழைத்துப்போய் வைத்துக்கொண்டு அவருக்குவேண்டிய கைகரு
மஞ்செய்துகொண் டிருந்தான்- பின்புஅந்த ஊரிலுள்ளவர்களெல்
லாரும்வந்து தாங்களவரைச்செய்த அநியாயங்களையெல்லாம் பொ
றுக்கச்சொல்லிக் கேட்டுக்கொண்டார்கள் அவரும்அதைப்பொறுத்
துக்கொண்டு தான் மீனுடையவயிற்றி லிருந்து கடலில் கண்ட அ
திசயங்களை யெல்லாஞ் சொன்னார்-இதுகளை யெல்லாங்கேட்டு அல்
லாகுத்தஆலாவையெல்லோரும் புகழ்ந்தார்கள் பின்புராஜாகேட்டா
ன் அல்லாவுடைய நபியே என்னுடைய ராஜாங்கத்தை யுமக்குத்த
ருகிறேன் நீர்ஒப்பிக்கொள்ளுமென்றான்-யூனூசுநபிசொன்னார்எனக்
கு அல்லாகுசுபுகானகு வத்த ஆலா ராஜாங்கத்தைக்காண மேலா
ம்பான நபிப்பட்டமும்றசூல்ப்பட்டமுந்தந்திருக்க வெனக்கிந்தரா
ஜாங்க மென்னத்துக்கென்றார் - பின்பு அந்தராஜாவானவ னெனக்
குஇனிமேலிராஜபட்டம் வேண்டியதில்லையென்று அவனுடையகு
டும்பத்தாரி லொருவனைப்பட்டத்திற்குவைத்துவிட்டு யூனூசுநபியவ
ர்களுக்குத் தொண்டுசெய்துக்கொண்டிருந்தான் அப்போதுயூனூசு
நபிநாம் பைத்துல்முக்கத்திற்குப்போய் ஷிகுயாநபியைக்கண்டு ச
ந்தித்துவரவேண்டுமென்றுசொன்னார் அப்போதுஎல்லோரும்சம்ம
தித்துராஜாமுதலாக மந்திரிபிரதானிகளெல்லாம் பதினாயிரங்குதிரை
யோடும்புறப்பட்டார்கள்புறப்பட்டுபோம்போதுவழியிலுள்ள ஊ
ர்தனிலிருக்கும்மனிதரெல்லாம்வந்துயூனூசுநபியைச்சந்திப்பார்கள்
பின்புபயித்துல்முக்கத்திசுஊர்ப்புறத்திற்போயிருந்துகொண்டு ஷி
குயாநபிக்கு ஆள்விடுத்தார்கள் ஷிகுயாநபியவர்கள் யூனூசுநபியவர்
கள்வந்த சமாச்சாரங்கேட்டுச் சந்தோஷமாகி அவர்களும் அந்த
ஊர்ச்சனங்களும்வந்துயூனூசுநபியைக்கண்டு ஷிகுயாநபி கட்டித்த
ழுவி சலாம்சொல்லிக்கொண்டார்கள்—பின்பு பயித்துல்முக்கத்திச
ப்பட்டணத்திலுள்ளேமீனூசுநபியையும்ராஜாமுதலியமந்திரிபிரதா
னிகளும் இன்னும் மற்றவர்களையு மழைத்துக்கொண்டு போனார்கள்
நீனவாயென்னும்பட்டணத்தி லுள்ளவர்களெல்லாம் ஷிகுயாநபியு
டைய பாதத்தைத்தொட்டு முத்திசலாஞ்சொன்னார்கள் - பயித்துல்
முக்கத்திசிலுள்ள ஆண்பெண்ணடங்கலும்வந்து ஆண்பிள்ளைகள் யூ
னூசுநபியையும் பெண்பிள்ளைகள் அபியா நம்பிராட்டியாரையுங்க
ண்டுசந்தித்து அவர்கள்பட்ட துயரங்களைக்கேட்டுப் புதுமையாகி
அல்லாகுசுபுகானகுவத்தஆலாவைப் புகழ்ந்து எல்லோரு மொருமி
த்திருந்தார்கள்- யூனூசுநபிஅலைகிஸ்ஸலாமும் ஷிகுயா அலைகிஸ்ஸலா
மும் உடந்பிறப்புகளைப்போ லொருமித்திருந்தார்கள்-மூசாநபியும்
ஹாறூன்நபியும்போல ஒருமித்திருந்தார்கள்அதுபோலநபிச ல்லல்

லாகுஅலைகிவசல்லமவர்களுடைய உம்மத்துகளே நாமனைவரு மொருமித்திருக்கவும் நம்முடைய ஆண்டவர்முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடைய பறக்கத்தால்துன்யாவிலும் ஆகிறத்திலு மவர்களைத் தெரிசிக்கும்படியாக ஆண்டவன்நல் லுதவி செய்வாருகவும்-ஆமீன் ஆண்டவர் முகம்மது நபிசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய உம்மத்துகளைமற்றும்லட்சத்திருபத்துநாலாயிரம்நபிமார்களும் புகழும்படிமேலானவரிசைபெற்றஉம்மத்தானபடியால் நம்முடைய ஆண்டவர் நபிசல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களெடுத்துநடந்துகாட்டிய ஷிறகின்படிநடந்து மற்றும் மூன்று வழியான - தரீக்கத்திலும் ஹக்கீக்கத்திலும் - மகரிபத்திலு முள்ள இபாதத்துகளின்படி அமல்களைச்செய்து அல்லாகுசுபுகானகு வத்தஆலாவுடைய விகாவிற்சேர்ந்தமூமீன்கள் கூட்டத்தில்நம்மனைவோரையுஞ் சேர்ப்பாருகவும் ஆமீனுமீன் யாறப்பில் ஆலமீன் இந்தகதைப் படித்தபேர்கேட்பேர் படிக்கவிருப்பம் வைத்தபே ரிவர்களெல்லாம் நபிசல்லல்லாகுஅலைகிவசல்லமவர்கள்கிருபையினுலும்யூனுசுநபியவர்கள் துஆப்பேரினுலும் நீடூழிவாழ்வார்கள் சகலசம்பத்துமுண்டாம் கடலினும்கரையினும் ஆபத்தில்லாது சுகம்பெற்று வாழ்கவாழி ஆமீன்.

யூனுசுநபியுடையகிஸ்ஸா

முற்றிற்று.